# தொண்டன்

ஆரம்பம்: பெப்பரவரி - 1969.





## கிறிஸ்மஸ் புத்தாண்டுச் சிறப்பிதழ்



டிசம்பர் - ஜனவரி
1989 - 1990

6/00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With the Best Compliments of:*

# ROTARY CLUB OF BATTICALOA

**SRI LANKA.**

DISTRICT: 3220

**THE FOUR WAY TEST**

of things we think, say, or do

1) Is it the TRUTH ?
2) Is it FAIR to all concerned ?
3) Will it build GOODWILL and BETTER FRIENDSHIP ?
4) Will it be BENEFICIAL to all concerned ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்


டிசெம்பர் - 1989 — ஜனவரி - 90

மலர்: 21 இதழ்: 10

ஆசிரியர்;
கிங்ஸ்லி றொபட்

இணை ஆசிரியர்:
மலர்வேந்தன்

ஆசிரியர் குழு:
எஸ். லோகநாதன்
பி. ஜோசப்

வெளியீடு:
சமூகத் தொடர்பு நிலையம்,
திரு./ மட். மறை மாவட்டம்

தொடர்பு:
சமூகத் தொடர்பு நிலையம்,
அ. பெ. எண்: 44,
மட்டக்களப்பு.

SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. Box - 44,
BATTICALOA.

விலை:
தனிப்பிரதி ரூபா 6/00
ஆண்டுச் சந்தா ரூபா 70/-




## உள்ளே...


1) எமது குரல் ... ... 02
2) அன்னைமரியின்... ... 03
3) வரலாற்றில் கிறிஸ்து ... 04
4) வழி பிறக்கும் ... 07
5) பாசறைக்குள் ஏசு பாலன் 10
6) மின்கணணியிற் தமிழ் ... 11
7) இளைஞர் அரங்கம் ... 17
8) அச்சுத்துறையும் எமது ... 18
9) டிசெம்பர் 25ல்... ... 22
10) ஓர் இலக்கியச் சந்திப்பு ... 23
11) கிறிஸ்மஸ் துணுக்... ... 33
12) பிறந்ததினக் கொண்டா... 35
13) தயாளினியின் கிறிஸ்மஸ் 38
14) கிறிஸ்தவ ஒழுக்க... 42
15) விலை உயர்வு ... ... 44
16) மாணவர் பக்கம் ... 45
17) விவிலியப் புதிர் ... 48
18) பாரெல்லாம் வளரட் ... 50
19) இயேசு எம்மில்... ... 51
20) காற்றில் கலந்து வரும்... 53
21) உங்கள் பக்கம் ... 54


## தொண்டன் வாழ்த்து



தொண்டன் வாசகர்கள், எழுத்தாளர்கள் விற்பனையாளர்கள், விளம்பரதாரர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது மகிழ்ச்சி நிறைந்த கிறிஸ்மஸ் - புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

— தொண்டன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது குரல்



மீண்டும் ஒரு கிறிஸ்மஸ்!
அந்தக் குடில்
இடையர்கள்
ஏழ்மை
வால்நட்சத்திரம்
ஞானிகள்

எல்லாமே நினைவுக்கு வந்து போகின்றன. வருடந்தோறும் வரும் நிகழ்வுகள் தான் வருடந்தோறும் வருவதால்தான் அது வழக்கமாகி சொரனையற்றுப் போய்விட்டதோ! ஆனாலும் ஓர் ஒற்றுமை!

அன்றும் ஆயுதத்தில் நம்பிக்கை சொண்ட ஏரோது அதிகாரப் பசியோடு அலைந் தான்.

இன்றும் ஏரோதுக்கள் அலைகிறார்கள்!
அன்று அப்பாவியான ஒரு குடும்பம் அகதியாக
அலைந்தது.
இன்றும் பல குடும்பங்கள் அகதிகளாக அலைகின்றன.
அன்றும் குற்றமற்ற குழந்தைகள் கொலையுண்டன.

இன்றும் ஏன், ஏதற்காக என்று தெரியாமல் பலர் பரிதாபமாகப் பலியாகின்றனர்.
அன்று இத்தனைக்கு நடுவிலும் வால்வெள்ளி ஒன்று முளைத்து வழிகாட்டியது,
அன்பின் பிறப்பிடத்தை, அமைதியின் இருப்பிடத்தைச் சொன்னது.
ஏன்? அதைப் புத்தியுள்ளவர்கள் புரிந்து கொண்டார்கள்.

ஆனால், இன்று நாமோ வாலையும் காணாது, வெள்ளியையும் காணாது தவிக்கிறோம் கோளாறு நமது கண்களில் அல்ல, கருத்தில்.

வால்வெள்ளி வானத்தில் வாராது மண்ணில்
அதுவாக நான்மாறி அனைவர்க்கும் வழிகாட்ட வேண்டும்.
இயேசு எனும் குழந்தை இனி ஒரு பெண்ணிடம்
பிறக்காது.

அவராய் நாம்தானே நம் நெஞ்சில் பிறந்து நானிலம் தனைக்காக்க வேண்டும்.
ஆனால்,
ஏரோதுக்களாய் மாற பலர் போட்டியிடும் போது இதுவெல்லாம் சாத்தியமா?
அதுவரையில்
கிறிஸ்மஸ் வரும் - போகும்!

**வாசகர்கள் அனைவருக்கும் கிறிஸ்மஸ் - புத்தாண்டு வாழ்த்துக்கள்.**

**- மலர்வேந்தன்**




உங்களுக்காக மீட்பர் பிறந்துள்ளார்.
அவரே ஆண்டவராகிய மெசியா. **லூக். 2/11**



# அன்னைமரியின்

# அமுதத் தாலாட்டு

★ செ. குணரத்தினம்

கருணைமுகம் போல்குளிரில் - கெட்ட
கயமையுள்ளம் போலிருளில்
பெருமை பெறப் பேரெழிலாய் - பிறந்த
பாலகனே கண்வளராய்!
மாட்டுக் குடிசைகளும் - வைக்கோல்
மேய்கின்ற மந்தைகளும்
ஏட்டில் புகழ் பெறவே - மலர்ந்த
இயேசுவே கண்வளராய்!
துடிதுடிக்கப் பாலகரை - வாளால்
துண்டாடும் பாதகரை
இடித்தழிக்க வந்தமின்னல் - என்
இயேசுவே கண்வளராய்!
கொடிய மன்னன் ஏரோதின் - கொட்டம்
குலைந்தழிய வேரோடு
சரிக்கவந்த வாளேயென் - தூய
சற்குணனே கண்வளராய்!
பாவக் குளத்தில் விழும் - படு
பாவியரை ரட்சிக்க
பேரொளியாய் வந்துதித்த - இயேசு
பாலகனே கண்வளராய்!
சூது வாது கொலைகளவை - நாட்டில்
சுதந்திரமாய் நடாத்திவரும்
பாதகரைத் தொலைத்திடவே - பிறந்த
பொன்மகனே கண்வளராய்!
கடவுள் நிந்தை செய்துலகில் - பொய்
காமத் தீ கொழுந்து விடும்
உடல்களிலே அன்பு வெள்ளம் - பாய
உதித்தவனே கண்வளராய்!

## சாமர்த்தியமே தகுதி

அரசியல்வாதிக்கு வேண்டிய மிக முக்கியமான தகுதிகள் எவை? என்று சர்ச்சிலிடம் ஒருவர் கேட்டார். அதற்கு சர்ச்சில் 'நாளை நடப்பதையும் அடுத்த மாதம், அடுத்த வருடம் நடக்கப் போவதையும் முன் கூட்டியே சொல்லக் கூடிய சாமர்த்தியம் அரசியல்வாதிக்கு அவசியமாகும். அந்த அரசியல் ஆருடம் ஏன் பலிக்கவில்லை என்பதற்குப் பின்னால் தெளிவாகக் காரணம் காட்டக் கூடிய சாமர்த்தியமும் வேண்டும்'' என்று பதில் அளித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றில் கிறிஸ்துவின் முத்திரைகள்

● அருட்திரு S. A. I. மத்தியூ S. S. J.

மனிதன் தோன்றிய காலந் தொட்டே அவனுக்கு இறை உணர்வு இருந்தது. தனக்கு மேற்பட்ட சக்திகளேயும் இயற்கையை ஆட்கொள்கின்ற சக்திகளேயும் இறைவன் என்றே வழிபட்டான். பிறப்பு நோய், துன்பம், மரணம் இவற்றிற்கு விளக்கம் காண முற்பட்டபோது இறைவனே இறுதிக் குறிக்கோள் என்பதை இவன் உணர்ந்து கொண்டான்.

காலங்கள் கடந்தன. நிகரற்ற சமயங்கள் தோன்றின, புராணங்கள் உருவாகின, தத்துவங்கள் மலர்ந்தன, இவையெல்லாம் இறை உணர்வு, இறைபக்தி இறைவனுடைய இயற்கையை இகந்த செயல்கள், இவற்றை மனிதனுக்குப்படிப்பித்தன.



உலகின் புராதன சமயங்களுள் இந்து சமயம்; யூதமதச் செல்வாக்கோடு இணைந்த கிறிஸ்தவ மதம்; யூதமதச் செல்வாக்கோடு இணைந்த இஸ்லாம் மதம்; முக்கியத்துவம் பெறுகின்றன. இவை ஏறக்குறைய நாலாயிரம் ஆண்டுகளுக்கு மேலான பழைமை வாய்ந்தன.

இக்கட்டுரையின் தலைப்பு வரலாற்றில் கிறிஸ்துவின் முத்திரைகள். உலக வரலாற்றை கிறிஸ்துவின் முன், கிறிஸ்துவிற்குப்பின் என்று பிரித்துள்ளார்கள். இந்த வகையில் கிறிஸ்து வரலாற்றின் நடுநாயகமாக விளங்குகின்றார்.

கிறிஸ்து இறைமகன் அவரது வருகையை ஏறக்குறைய நாலாயிரம் ஆண்டு காலமாக யூதசமுதாயம் எதிர்பார்த்திருந்தது.

கிறிஸ்து பிறப்பிலே புரட்சி கண்டார். உலகைத் திருத்திய உத்தமர் என்ற வரிசையிலும், உலகஞானி என்ற வரிசையிலும் அல்லாது இறைமகன் என்ற வகையிலே மாட்டுத்தொழுவத்தில் உதித்த பெருமை கிறிஸ்துவையே சாரும்.

''தம் மக்களிடம் அவர் வந்தார். அவர்கள் அவரை அறிந்து கொள்ளவில்லை. சத்திரங்கள் அவருக்கு இடமளிக்கவில்லை'' பிறந்தவுடனேயே ஏரோது அவருக்கும், அவர் பிறந்த கிராமத்திலே இருந்த ஏனைய சிசுக்களுக்கும் மரண தண்டனை அளித்தான். இச் சம்பவமானது கம்ஸன் - கிருஸ்ணன் புராணங்களோடு இசைந்து காணப்படுகிறது.

அவரது வாழ்வின் சுமார் பதினெட்டு வருடங்களை அஞ்ஞாத வாசம் என்று கூறலாம் - அது நமக்கு ஒரு இருண்டகாலமாகத் தென்படுகின்றது. பல்வேறு நாடுகளுக்கு அவர் பயணங்கள் மேற்கொண்டு இருக்கலாம். பல்வேறு சமயங்களைப்பற்றி ஆராய்ந்திருக்கலாம்.

> பூரண மகிழ்ச்சி என்பது ஒரு காரியத்தில் முழு முயற்சியுடன் ஈடுபடும் போதுதான் ஏற்படுகிறது.
> ★ ரஸ்ஸல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனாலும் அவர் ஞானத்திலே வளர்ந்தார் என்பதை மட்டும் அறிகின்றோம்.


அவரோ ஒரு அபார மனிதன். அவரிலே தெய்வீக ஒளி வீசியது, நிலைபெற்ற சமயச்சடங்குகளுக்கும், யூத பாரம்பரியங்களுக்கும் ஆரம்பத்தில் அவர் முக்கியத்துவம் அளிக்கின்றார். இந்த வகையில் விருத்த சேதனம், யோர்தான் ஞானஸ்ஞானம், நாற்பது நாள் நோன்பு, ஆண்டு தோறும் எருசலேம் தேவாலயப்பிரவேசம், ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்தார்.

பின்னாளில் யூத குருக்களை எதிர்க்கின்றார். அவரோடு அவர்களால் வாதிட முடியவில்லை. கட்டளைகளை நிறைவேற்றவே வந்தேன் எனக்கூறிய அவர் யூத குருக்களின் போலி வேசங்களையும் அவர்களுடைய முகமூடிகளையும் கிழித்தெறிகின்றார்.

அந்த வேளை அவருக்குத் துணையாக இருந்த பனிரெண்டு சீடர்களைப்பற்றியும் நாம் அறிவோம். அவர்களில் செம்படவர்கள் பலர்; சிறிது படித்தவர்கள் சிலர்; ஆனால் எல்லோரும் கோழைகள். அப்படிப்பட்டவர்களே பின்னாளில் வலிமை வாய்ந்த யூத சமுதாயத்தலைவர்களையும், ஏனையோர்களையும் எதிர்த்து நின்று தம் உயிரையும் ஈந்து இயேசுவின் திருச்சபையைக் கட்டி எழுப்புகின்றார்கள். இது கிறிஸ்து வரலாற்றில் பொறித்த மாபெரும் முத்திரையாகும்.

கிறிஸ்தவம் பாலஸ்தீனாவிலே, யூத சமுதாயத்திலே நிலை கொள்ள முடியாமல் ரோமாபுரியிலே நிலை கொண்டது ஏன் என்பது ஆராய்ச்சிக்குரியதே. பௌத்தம் அது பிறந்த இந்து சமுதாயத்திலே நிலை கொள்ளாது வேறு நாடுகளிலே நிலைகொண்டதை ஒப்பு நோக்கிச் சிந்திப்பது ஆய்வாளர்களின் பணியாகும்.

ரோம சாம்ராட்சியம் கிறிஸ்தவத்தை எதிர்த்தது, இந்த எதிர்ப்பு முன்னூறு ஆண்டுகளுக்கு மேலாக நீடித்தது. மாமன்னன் கொன்சன்ரெயின் கிறிஸ்தவத்தை தழுவிய காலம் வரையில் கிறிஸ்தவர்கள் பெரிதும் துன்புறுத்தப்பட்டார்கள். இந்த முன்னூறு ஆண்டு காலத்தில் கிறிஸ்துவிற்காகவும், கிறிஸ்தவ உண்மைகளுக்காகவும், சிந்திய இரத்தம், தைபர் நதியின் பிரவாகத்தைப் போன்று பெருக்கெடுத்தது. இத்தகைய ஆழ்ந்த விசுவாசத்தையும் சீடர்கள் மத்தியிலும்; அவ் விசுவாசத்தைப் பின்பற்றிய விசுவாசிகள் மத்தியிலும் அளித்த இயேசுவின் முத்திரைகளை வியக்காமல் இருக்க முடியாது.



அரசியல் அலைகளினாலும் கிறிஸ்தவம் அலையுண்டது. ஆனால் கிறிஸ்து இறைமகன் நிலை கொண்டார்.

கி. பி. 5ம் நூற்றாண்டு தொடக்கம் 15ம் நூற்றாண்டு வரையுள்ள காலப்பகுதி உலக வரலாற்றில் இருண்ட காலம் என வரலாற்று ஆசிரியர்களால் வர்ணிக்கப்படுகிறது. இக்காலத்திலே கிறிஸ்தவ மடாலயங்களும், கிறிஸ்தவத் துறவிகளும், கல்வி, கலா

## தடை விதிப்பு

அஸ்பெஸ்டாஸ் பொருட்களினால் புற்றுநோய் உண்டாகிறது என்று தற்போது அஸ்பெஸ்டாஸ் பொருட்களுக்கு அமெரிக்கா தடைவிதித்து வருகிறது. இன்னும் ஏழு ஆண்டுகளில் அஸ்பெஸ்டாஸ் முற்றிலும் தடைசெய்யப்பட்டு விடும் என்றும், அஸ்பெஸ்டாஸ் பயன்படுத்துவதால் ஆண்டு ஒன்றுக்கு ஆயிரம்பேர் வரை புற்றுநோயால் பீடிக்கப்படுகின்றனர் என்றும் அரசு கூறியிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரங்களுக்கு நிலைக்களனாக இருந்து அறிவைப் போதித்துத் தற்கால பல்கலைக்கழகங்களுக்கு வித்திட்டு வழிகாட்டினர்.

நவீன காலம் மலர்ந்தது. அச்சு இயந்திரங்கள் கண்டு பிடிக்கப்பட்டன, நூல்கள் வெளியாகின. கிறிஸ்துவின் போதனைகள் அடங்கிய நூல்கள் உலகின் மிக அதிக மொழிகளில் பெயர்க்கப் பட்டன.

இன்று உலகளாவிய ரீதியிலே கிறிஸ்து வரலாற்றின் ஒருமை மனிதனாக, உலக மக்களின் உத்தமராக மட்டுமன்றி, எல்லா நெஞ்சங்களிலும் சர்ச்சைக்குரிய ஒருவராக அன்றி இயேசு பகவான் தெய்வீக புருடனாக நம்மை மெய்சிலிர்க்க வைக்கின்றார் என்பதை எவரும் மறுக்கவில்லை.

இயேசுவின் சமாதானத்தின் தூது, அன்பு, மன்னிக்கும் மனப்பான்மை. எளியோர்க்கு உதவுதல், இருப்பவர் இல்லாதவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்பன உலக தத்துவமாகப்பேசப் படுகின்றது. செயற்படுத்தப் படுகின்றது, இன்று உலகத் தலைவர்கள், உச்சி மகாநாடுகளில் பேச்சின் மூலம், கலந்துரையாடல் மூலம் கருத்துத் தெளிவை ஏற்படுத்திச் சமரசத்திற்கும், சமாதானத்திற்கும் பொருளாதார சுபீட்சத்திற்கும் வழி கோலுகின்றனர். ''நீ பலிபீடத்திற்குச் செல்லுமுன் உன் சகோதரனோடு கோபமாக இருந்தால் அவனுடன் சமாதானம் செய்'' என்ற விருதுவாக்கிற்கும் ஐக்கிய நாடுகள் பட்டயத்திற்கும் வித்தியாசம் என்ன? இந்தத் தத்துவத்தையே அணிசேரா நாடுகளும் பேசுகின்றன.

இவையே வரலாற்றில் கிறிஸ்துவின் முத்திரைகள் இந்த முத்திரைகள் தொடரும்......

முதலைகள் தவறுதலாக இரும்புக்கருவிகளை விழுங்கி விட்டாலும், நாளடைவில் அவை உருத்தெரியாமல் கரைந்துவிடும். அதன் வயிற்றில் சுரக்கும் ஹைட்ரோகுளோரிக் என்ற திரவம்தான் இரும்பைக் கரைக்க உதவுகிறது.

## வாழ்த்துகிறோம்!



இம்மாதம் 12ம் திகதி தமது பிறந்த நாளையும், 20ம் திகதி குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட நினைவு நாளையும் கொண்டாடும் நமது ஆயர் பேரருள்திரு ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள் இறையருளும், உடல் நலனும் பெற்று பணிவாழ்வில் சிறக்க நெஞ்சார வாழ்த்துகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுகதை

# வழி பிறக்கும்...!

★ **புளியடிக்குடா - ஆனந்தா A. G. இராஜேந்திரம்**

"**அ**ம்மா அண்ணாச்சி வேல விட்டு வந்திட்டாரா?" பாக்கியத்தின் இளைய மகன் ரவி கேட்டான். குசினிக்குள் இரவைக்கு ரொட்டி சுட்டுக் கொண்டிருந்த பாக்கியம்,

''ஏண்டா இது? ஒரு பத்து நிமிசத்தில பதினைஞ்சு தடவையா கேட்டுக் கொண்டே இருக்கிறு?"

''சோதன முடிவு வந்திட்டில்லியா? அவரிட்ட சொல்லி காசு ஆயத்தப்படுத்த வேணும். எனக்குக் கட்டாயம் 'கம்பஸ்' கிடைக்கும்" அவனது தன்னம்பிக்கை குரலில் தொனித்தது. உயர்தர பரீட்சையில் முதல் தடவையிலேயே 2' பீ ; 2' சீ முடிவு பல்கலைக் கழகப் படிப்பு, உயர்கல்விப் பெருமை,பட்டதாரித்தொழில் வாய்ப்பு என்ற கனவுகள் அவன் மனதில் திரைப்படமாக ஓடின. அப்பா இறந்த இந்த பத்துவருசத்திலும் அந்த குடும்பம் பட்ட வேதனைகள் அவன் உள்ளத்தைச் சாதனைக்காகத் தயாரித்து விட்டிருந்தன. ஐந்து வருஷமாக மூத்தவன் சேகரின் உழைப்பு அந்தக் குடும்பத்தை வாழ வைத்துக் கொண்டிருந்தது. நீர்ப்பாசன இலாகாவின் எழுதுவினைஞனின் வருமானம் நான்கு வயிற்றுக்கே போதுமாக இருந்தது. கடைசி லதா எட்டாம் வகுப்பில் இருந்தாள்.

''அடேய், காசு, காசு எண்டு பிச்சா அவன் எங்கடா போவான். அவன் எடுக்கிற சம்பளத்தத்தானே பொத்துனுப்பல கொண்டு வந்து தாருன். வேறெங்கால வருமானம் அவனுக்கு? படிப்பு போதும், தொழிலத் தேட வேண்டியதுதான்.''

"இல்லம்மா, அண்ணாச்சி கிடைக்கிற 'ஓவர்டைம்' காசெல்லாம் ரவி அண்ணா படிக்கிறதுக்கு வேணுமெண்டு 'பேங்க்' கில போட்டு வச்சிருக்கிருர்." இடையிலே வாயைச் சொருகினுள் லதா.

மகனைப் பற்றிய பெருமிதமான உணர்வு நெஞ்சிலே எழுந்து பாக்கியத்தின் தொண்டையை அடைத்தது. பலத்த உணர்ச்சியுடன் சொன்னுள்.

''எண்ட பிள்ளையை தெய்வம் ஆசிர்வதிக்க வேணும்."

'' அம்மா! நத்தாருக்கு இவன் ரவிக்கும், லதாவுக்கும் உடுப்பெடுக்க ஐநூருவது வேணும். 'ஒப்பீசில்' 'அட்வான்ஸ்' தருவாங்க,நான் செலவுகளுக்குக்கொஞ்சம்கூட நேரம் வேல செய்ய வேண்டியிருக்கும்......."

''சேகர்; மடத்தனமாக 'ஓவர்டைம்' எண்டு ஐஞ்சு மணி, ஆறுமணிவரை சுணங்காம நேரகாலத்தோட வீட்டுக்கு வரப்பார். காலங் கெட்டுக்கிடக்கு, நீ நாளாந்தம் வீடு வர்ர வரைக்கும் மடியில நெருப்பக் கொட்டி வச்ச மாதிரி நான் தவிக்கிற தவிப்பு ... புது உடுப்பில லாட்டா ஆண்டவன் கோயிலுக்கு வரவேணும் எண்டா சொல்லப் போருர்.''

''எனக் கொண்டும் வராதம்மா! செபமால எந்நேரமும் பொக்கட்டுக்குள்ளதான். இன்னும் என்ன ஒரு முப்பது நாப்பது நாள் தானே நத்தாருக்கு.''

''எனக் கெண்டால் தெரியாது மகனே! உனக்கேதுமெண்டால்......" அந்த எண்ணமே இவ்வளவு வதைக்குமானுல் ......?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாலை 6-00 மணி மாரி கால இருட்டு. கொஞ்சம் அந்தகாரமாகவே தெரிந்தது. சமகாலப் பிரச்சினைகளால் அலுவலகங்கள் ஒழுங்காக இயங்காததால் ஏகப்பட்டு குவிந்துவிட்ட வேலைகளை முடிக்கவேண்டி சமீப தூரங்களில் உள்ளவர்களுக்கு மேலதிக நேர வேலை கிட்டியது. வீட்டின் நிலைமை, தம்பியின் படிப்பு, தங்கையின் எதிர்காலம் இவற்றை மனதிற் கொண்டு, கிடைத்த வாய்ப்பைப் பயன் படுத்திக் கொண்டிருந்தான் சேகர். அன்று வேலைப் பழுவால் கொஞ்சம் தாமதித்து விட்டான். அவசரமாக சைக்கிளை மிதித்து வந்தபோது 'டயர்' ஓட்டையாகி ஓடமுடியாமல் போய்விட்டது. வேகமாக உருட்டிக் கொண்டு நடந்தான். வீதியில் ஒன்றிரண்டு பேரின் நடமாட்டம் மட்டுமே இருந்தது அப்போது.

அவனைக்கடந்து இராணுவ வாகனங்களின் வழமையான ஊர்வலம் போய்க் கொண்டிருந்தது. கடைசி 'ஜீப்' பின் முன் சென்ற 'ட்ரக்' சுமார் ஐம்பது யார் தொலைவில் இருந்த வளைவில் சென்று மறைந்த கணமே மின்னலைத் தோற்கடிக்கும் ஒளியும் காதைப் பிளக்கும் ஒலியோடு வெடிச்சத்தமும் முழங்கியது. கல்மாரி பொழிந்தது. என்ன ஏதுவென நிதானிக்கு முன்னமே, திடீரென நின்ற 'ஜீப்'பில் இருந்த இராணுவ வீரர்களின் துப்பாக்கிகள் கண் மூடித்தனமாக இயங்கின.

சேகர் மண்ணில் உயிரற்றுச் சாய்ந்தபோது உண்மையில் என்ன நடந்ததென்றே அவனுக்குத் தெரியாது!

தொலைவில் முழங்கிய சத்தத்தைக்கேட்ட பாக்கியமும், ரவியும், லதாவும் வெடியோசை கேட்ட நாகமாக அதிர்ந்தனர். சேகர் வரத் தாமதமாகியது குறித்து கலங்கிக் கொண்டிருந்த மூவரும் இனந்தெரியாத பீதியினால் உடல் தளர்ந்து போயினர்.

''தேவமாதாவே, எண்ட பிள்ளையக் காப்பாத்து தாயே.'' என்று சுவரோடு சாய்ந்து விட்ட பாக்கியத்துடன் ரவியும். லதாவும் அழத்தொடங்கிவிட்டனர்.

தூங்காத கண்களுடன், வெளியேற முடியாமல் தவித்து நின்ற மூவரது பயத்தை மறு நாள் காலை சேகரின் அடையாள அட்டையும், செபமாலையும், நொருங்கிய சைக்கிளும் உறுதிசெய்தன. சுடுபட்டவர்களின் உடல்களை எல்லாம் அள்ளிப் போட்டுக் கொண்டுபோன போது அடையாள அட்டையும், செபமாலையும் சைக்கிளின் அருகில் விழுந்து கிடந்தன. அந்தக் குடும்பத்திற்கு ஒளிகொடுத்த அன்பு உருவின் உயிரற்ற உடலைக் காணக் கூடக்கொடுத்து வைக்கவில்லை.

பாக்கியம் எப்படித்தான் இவ்வளவு விரைவில் உறுதி பெற்றாளோ தெரியாது. ஒரு வேளை ரவிபற்றிய எண்ணம் இரண்டு இழப்பையும் தாங்க முடியாத பலயீனம் அவளுக்குப் புரிந்ததோ தெரியவில்லை.

''எண்ட மாணிக்கத்த அழிச்சவன்கள எண்ட தெய்வம் விடாது'' இது ஒன்று

## பெண்களுக்கு

ஆண்களைவிடப் பெண்களின் உடல், மிகுதியான கொழுப்புச் சத்தைச் சேமித்துக் கொள்ளும் சக்தி படைத்தது. அதனால் பெண்கள் கொழுப்புச் சத்துள்ள உணவுகளை மிகுதியாச் சேர்த்துக் கொள்ளாமல் இருப்பது நல்லது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் அந்த துயர நாளன்று அவள் ஆவேசத்துடன் கூறிய வார்த்தைகள் பிறகு அவள் அழவில்லை - இது பற்றிக் கதைக்கவுமில்லை.

இதுபற்றி நிறையப் பேசியவனும், சிந்தித்தவனும் ரவி தான். தனக்குத் தெய்வமாக நின்று வாழ்வளித்துக் கொண்டிருந்த அண்ணனை இழந்தவன், தனது கனவுகளெல்லாம் சிதைந்ததை உணர்ந்தவன், இதுபோன்று வேதனைக்குள்ளாகிப் பரிதவிக்கும் குடும்பங்களை எண்ணிப் பார்த்தான் வெதும்பிக் குமுறினான். அவனைத் தேற்றிக் கட்டுப்பாட்டுக்குள் வைப்பதிலேயே பாக்கியம் கண்ணுங் கருத்துமாக இருந்தாள். சதா அவனையே அவதானித்தபடியே அவளது நாளாந்த வாழ்வு. இடையே அதிர்ச்சியால் துவண்டு விட்ட லதா,

''தெய்வம் தீர்ப்புக் கொடுக்கும். விடிவு தரும்'' இதுதான் அந்தத் தாயின் நம்பிக்கையான வார்த்தைகளும், உறுதியும்.

அன்று மார்கழி 24 ஆலயங்களில் ஆறுமணிக்கு நத்தார் வழிபாடு. படைகள் முகாமுக்குள் இருக்கும் என்ற உறுதிமொழிகள்.

வேலையில் மூழ்கியிருந்த பாக்கியம் ஏதோ ஒரு உணர்வு வந்தவளாய் 'ரவி' என்றழைத்தாள். பதில் வராமல் போகவே அவளது இதயம் வேகமாக அடித்தது. அடிவயிறு சுண்டியிழுத்தது. அவளது தாய்மை உணர்வு மற்ற இழப்பையும் உணர்த்தியது.

> **'போ' என்று சொல்லாதவன் ஒருவன் தான் அவன்தான் இறைவன். இல்லாதவன் தானே உன்னைப் பார்த்துப் போ என்பான்.**

'யேசுவே' என்று இடிந்து போய் தரையிலே குந்திவிட்ட அவளைக் கண்டு குசினிக்குள் நுழைந்த லதா பயந்துபோய் 'அம்மா' என்று அலறியபடி ஓடிவந்து கட்டிப்பிடித்தாள். இனம் புரியாத அமைதி ஆட்கொள்ள,

''லதா, ரவி அண்ணை அறைக்குள்ள இருக்கானு எண்டு போய் பாரு'' என்றான்.

திடீரென தாயின் உணர்வலைகள் லதாவிற்கும் எட்டின. மனதிற்குள் பொறி தட்டினாற் போல் ஒரு பிரமை - சின்னஞ் சிறு வயதில்தான் எத்தனை இழப்புக்கள், தாக்கங்கள், சோதனைகள்! அவள் பதறவில்லை, ஓடவில்லை, ஆறுதலாகப் போய்க் கைக் குமிழைத் திருகிக் கதவைத் திறக்க முற்பட்டாள். அப்போது,,

கதவு இணைப்பிலே சொருகியிருந்த கடதாசி, காற்றில் மிதந்து விழுந்தது. அதை எடுத்துப் பிரித்தபோது நடைப்பிணமாக அங்கு வந்து சேர்ந்தாள் பாக்கியம். லதா படித்தாள்.

''அன்புள்ள அம்மா,

தயவு செய்து என்னை மன்னியுங்கள். என்னால் இதைவிட வேறு ஒரு முடிவுக்கும் வரமுடியவில்லை அன்று நம்வீட்டில் நடந்தது, நாளாந்தம் ஏதோ ஒரு வீட்டில் நடக்கிறது. இது நமது மண்ணில் தொடர்கதையாகவே மாறிவிட்டது.... மேற்கொண்டு இதை நீளவிடாது முற்றுப் புள்ளி வைக்கும் பயணத்தில் ஈடுபடப்போகிறேன்... ''கடவுளிடம் விட்டுவிடு அவர் விடுதலை தருவார்'' என்று நீங்கள் கூறுவதை ஏற்று வீட்டில் நின்று விட என்னால் முடியவில்லை. கடவுள் தருவார் என்று உழைக்காமலே இருப்பவனுக்கு கடவுளே சோறு போடமாட்டார். நாம் தான் உழைக்கவேண்டும்... அப்போதுதான்... அவர் உதவுவார். எனவேதான் நான் புறப்படுகிறேன். ஒரு நாள் நான் திரும்பி வருவேன்... லதாவையும்... உங்களையும்... வாழவைப்பேன்... சுதந்திரமுள்ளவர்களாக... இது சத்தியம்.

உங்கள் மகன்
ரவி

கண்கலங்கி விசும்பிய லதாவை அணைத்துக் கொண்ட பாக்கியம், கோயில் மணி ஒலிக்கும் ஓசையால் சுயநினைவு பெற்றாள்.

''வாம்மா லதா... மணி அடிச்சிட்டு... வெளிக்கிட்டுக் கோயிலுக்கு போவம்... கடவுள் நம்மக் கைவிடமாட்டார். திக்கற்றவங்களுக்கு தெய்வம் தான் துணை'' என்று மெதுவாக அறைக்குள் கூட்டிச் சென்றாள்.

துன்பங்கள் ஒருக்காலும் தனித்து வருவதில்லை என்ற உண்மையை அந்தத் தாயுள்ளம் தன் வாழ்வில் வாழ்ந்து நின்றது. (யாவும் கற்பனை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாசறைக்குள் ஏசுபாலன்

● நிலாதமிழின்தாசன்



மார்கழியின் மழைமுகிலைக் கிழித்து வீசி
 வல்லரசின் விமானங்கள் வானிற் சீறும்!
போர் வெறியால் குண்டுகளை மழையாய்ப் பெய்து
 பூதமென உயிர் குடித்து நாசம் பண்ணும்!
நார் நாராய் உடலங்கள் பிய்ந்து நாறி
 நரகமென எங்கணுமே கோலம் காட்டும்!
சீர்கெட்ட வையத்தின் இருளைப் போக்கச்
 சிரித்தபடி பொற்பாலன் பிறந்துள் ளாரே!

''ஏரோதின்'' வழிவந்தோர் ஏரா ளந்தான்!
 ''ஏ - கே''யை அவர் நித்தம் கரத்தி லேந்தி
வேரோடு அமைதியினை வெட்டி வீழ்த்தி
 வீரமெனப் ''பேரங்கள்'' பேசி நின்று
சீரோடு வாழ்ந்தோரைச் சிறைக்குள் ளாக்கிச்
 சிதறுகின்ற குருதியிலே தாகங் கொண்டு
ஆராயும் திறனின்றி அழிவோர் தம்மை
 அணைத்தருள வென்று சுதன் பிறந்துள் ளாரே!

நல்லோரின் தலையில்முள் முடியைச் சூட்டி
 நாள்தோறும் அவரைமிக வதைத்து வாட்டி
பொல்லாரின் தலையிற்பொன் முடியை மாட்டி
 ''பூ'' வாளும் வேந்தரென வணங்கி வாழ்த்தி
இல்லாமை என்கின்ற தீயில் வெந்து
 இறப்போரைக் கிஞ்சிற்றும் எண்ணி டாமல்
பொல்லாத கறை நெஞ்சோ டுறைவோர் தம்மைப்
 புதுப்பிக்கப் புரட்சிமகன் பிறந்துள் ளாரே!

ஏசு பிரான் பிறந்தவிடம் தன்னைக் காட்ட
 இந்நாளில் ''விண்மீன்கள்'' வழிகாட் டாது
ஆசையுடன் அவர் பாதம் துதிக்க வென்று
 அலைவோரே என் பேச்சைக் கேட்டுச் செல்வீர்
''சூசை மரி'' இடந்தேடி அலைந்த வேளை
 ''சுற்றிவளைத்(து)'' ஊருக்குப் புதிது என்றே
பாஷை அறி யாதபடை வீரர் கூட்டிப்
 'பாசறைக்குள்' பாலகனைப் பிறப்பித் துள்ளார்!

**கிறிஸ்மஸ் மரம்**

1605ம் ஆண்டு ஜெர்மனியிலுள்ள ஸ்டிராஸ்பாக் என்னும் இடத்தில் கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தின் போது இந்த மரம் இடம் பெற்றது. பெத்லகேமில் சுடர்விட்ட உலகின் ஒளியாம் இயேசுவின் அடையாளமாக மெழுகுவர்த்திகளையும், மரத்தின் உச்சியில் விண் மீனையும் தொங்கவிட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்கணனியிற் தமிழ் மொழியை நெறிப்படுத்தி உபயோகிக்க
# எழுத்துச் சீர்திருத்தஞ்
## செய்யவேண்டியது அவசியந்தானு?

கலாநிதி செ. உவெஸ்லி இதய ஜீவகருணு - தொரன்ரோ, கனடா.

1964ம் ஆண்டில் இருந்து நான் தமிழ் ஆங்கில தட்டச்சுக்கலையிற் பயிற்சி பெற்றுக் கொண்டு வந்தேன். அத்துடன் தந்தையாரின் அச்சகத்தில் எழுத்துக் கோர்த்து அச்சமைப்புச் செய்யும் வேலைகளிலும் சாதனையளவில் ஈடுபட்டுக் கொண்டிருந்தேன்.

அவர் எழுத்து நூல் எனும் தமிழ் எழுத்துருவ இலக்கணத்தைப் புத்தகமாக்கும் போது அதன் அச்சு வேலைகள், அமைப்பு வேலைகள், விளக்கப்படங்கள் தயாரிப்பது என்பதில் நான் முழுமையான பங்கு கொண்டேன்.

அப்போதெல்லாம் தமிழ் எழுத்துத் தொகையுடன் ஆங்கில எழுத்துச் சுருக்கத்தை ஒப்பிடுவேன். பெருந்தொகையான எழுத்துக்களையுடைய தமிழ் மொழியில் ஒரு வெறுப்பு ஏற்படுவதற்கு இது மாத்திரங் காரணமாக இருக்கவில்லை. அச்சகத்தில் அச்சுக் கோர்க்கும் போதும், தமிழ்த் தட்டெழுதியில் தட்டச்சு செய்யும் போதும் ஏற்பட்ட சிரமங்களும் எனக்குத் தமிழ் எழுத்து அமைப்பில் ஒரு விரோதத்தையுங், கசப்பையும் ஏற்படுத்தின.

1981ம் ஆண்டில் மதுரையில் நடந்த தமிழாராய்ச்சி மாநாட்டில் எங்கள் பெற்ருர். பங்குபற்றச் சென்றபோது நானும் அவர்களுடன் பார்வையாளனுகச் சேர்ந்து கொண்டேன். அங்கு காட்சிக்கு வைக்கப் பட்டிருந்த தமிழ் எழுத்தை நெறிப்படுத்திய மின்கணனியைப் பார்த்து மனதுள் மகிழ்ந்தேன்.

1981ம் ஆண்டில் தந்தையார் எழுதிய எழுத்துச் சீர்திருத்தச் சிந்தனைகள் எனும் புத்தகத்தை வாசித்தபோது, அதில் அவர் எழுத்துச் சீர்திருத்தம் தேவையற்றதென விவாதித்திருந்தார். புதிய மின்கணனி யுகத்தில் இவரது சிந்தனைகள் அர்த்தமற்றவைகள் என நான் நினைத்தேன். அதில் அவர் எடுத்துக் காட்டிய காரணங்கள் தர்க்க ரீதியாக ஏற்கப்படத் தக்கதாக இருந்தாலும் காரியத்திற்கு ஒத்துவராதவை என முடிவு கட்டிக்கொண்டேன்.

ஆயினும் சிங்கப்பூரில் நான் பணியாற்றிய காலத்தில் அங்கு உபயோகத்திலிருந்த வேற்றுமொழி மின்கணனிகளைப் பார்த்த போது எனது நம்பிக்கை சிதறிற்று. தமிழில் அத்தகைய அழகும், துலக்கமும், விரைவுந் தெளிவுங் கொண்ட அச்சமைப்பு முறை வருமா? அப்படியானல் அது எப்படிச்சாத்தியமாகும் என்று எனக்குள் சிந்தித்துப் பார்த்துச் சோர்வுற்றேன்.

### 3 நாடுகளில் 1/3 சிசு சாவு

ஐக்கிய நாடுகளின் UNICEF அறிக்கையின்படி உலகில் சாகும் குழந்தைகளில் மூன்றில் ஒரு எண்ணிக்கை மூன்றே நாடுகளைச் சார்ந்தது. அந்த நாடுகள் எவை? இந்தியா, பங்களாதேஷ், பாக்கிஸ்தான்.

கடந்த 12 திங்களில் 5 இலட்சம் உலகில் செத்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது கல்வி உயர்வுக்காக வெளிநாடுகளுக்குச் சென்றபோது இதுபற்றிய தொடர்புஞ் சிந்தனையும் அற்றுப் போயிருந்தது. இதுபற்றிய ஆர்வமும் விட்டுப் போயிருந்தது.

பின்பு கனடாவிற் குடியேறி வசித்த எங்களுடன் எமது பெற்றுர் 1984ம் ஆண்டில் வந்து வாழத் தொடங்கினுர்கள். தாய் நாட்டில் தமிழ் அச்சகம் நடாத்தித் தனது தமிழ் நூல்கள் பலவற்றை வெளியிட்ட எங்கள் தந்தையாருக்கு இங்கு வீணேயிருக்க முடியவில்லை.

எனவே தமிழகத்திலிருந்து அச்செழுத்துக்களை வரவழைத்து தமிழ் நூல்களை அச்சிட ஆலோசித்தார். ஆனுல் அது செயலளவில் முடியாத ஒரு காரியமாக இருந்தது. ஆதலால் அதன் பின்பு ஒரு தட்டெழுதியைத் தருவிக்கும் முயற்சியில் ஈடுபட்டார்.

இதே காலகட்டத்தில் அரசாங்கத் தொழிலில் இருந்து ஒய்வுபெற்று சுயமாக ஆங்கிலம் பிரஞ்சு மொழியில் அச்சுத் தொழில் செய்துவந்த எனது தமையனுர்க்குத் தொரன்ரோவில் உள்ள, அவரது சொந்தமான றிப்ளக்ஸ் அச்சகத்தில் ஆங்கில மின்கணனி அச்சமைப்பில் உதவுவதற்கான ஆலோசனைகளை நான் இடைக்கிடை கூறவேண்டியிருந்தது.

இத்தருணம் தந்தையாரின் ஆவலும் அவசரமும் எனக்கு மீண்டுந் தமிழ் எழுத்து உருவத்தில் உள்ள ஆர்வத்தைத் தளிர்க்கச் செய்தது.

அதனை அடுத்து எனது முயற்சிகள் ஆரம்பமாயின. நான் எடுத்துக்கொண்ட துறையுடன் மின்கணனித் துறை சம்பந்தப்பட்டிருக்கவில்லை. எனினும் அதன் நுட்பங்களைப் பயின்று தமிழில் மின்கணனியை நெறிப்படுத்த முயன்றேன். தமிழ்த் தட்டெழுதியில் உள்ள ஒழுங்கின்படிதான் முதலிற் செய்தேன்.

ஆனுல் மின்கணனி ஒழுங்கு தமிழின் எல்லா எழுத்துக்களையும் ஏற்றுக்கொள்ளும்



**மனைவி:** ஏங்க நான் தினமும் சேசு, மரி, சூசைன்னு வேண்டிக்கிட்டே இருந்தேன். அதனுல தான் முதல் பிரசவத்திலேயே நமக்கு மூன்று குழந்தை பிறந்திருக்கு.

**கணவன்:** நல்லவேளை! பன்னிரண்டு அப்போஸ்தலர்களுகிட்ட வேண்டாம இருந்தே! வேண்டியிருந்தா எம்பாடு என்னவாகி இருக்கும்.

**நன்றி கத்தோலிக்க சேவை**

வசதிபடைத்ததாக இருப்பதைக் கண்டு தமிழ் நெடுங் கணக்கில் உள்ள எல்லா எழுத்துக்களையும் எந்தவிதச் சீர்திருத்தமுஞ் செய்யாதபடிக்கு நெறிப்படுத்த முடியும் என்ற உறுதியான நிலைக்கு வந்தேன்.

ஆரம்பத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துக்களை ஒட்டி தமிழ் எழுத்துக்களை உருவாக்கும் நிலையில் இருந்து ஒவ்வொரு தமிழ் எழுத்துக்கும் ஒவ்வொரு சங்கேதக் குறியமைத்து அதற்கேற்ற கட்டளைகளைப் பிறப்பித்ததும் மின்கணனி அவற்றை இயந்திர பூர்வமாக ஏற்றுக் கொண்டது. அதுமாத்திரமல்ல அவற்றையெலாம் ஞாபகத்திற் பதிவு செய்து வேண்டியபோது ஒழுங்காக வெளிக் கொணரக் கூடியதாகவும் இயங்கியது.

## அவ்வாறு மின்கணனி ஏற்ற எழுத்துக்களின் விபரம்:-

**உயிரெழுத்துக்களில்:-**

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ. இதில் ஔகாரம் மாத்திரம் இரண்டு எழுத்துக்களாலானது. ஏனைய எழுத்துக்கள் எல்லாம் தனி எழுத்துக்களாலானவை. இவற்றின் எண்ணிக்கை: 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்யெழுத்துக்களில்:

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன், இவையாவுந், தனியெழுத்துக்களாலானவை இவற்றின் எண்ணிக்கை; 18

உயிர் மெய்யெழுத்துக்களில்:–

1. அகர உயிர்மெய் எழுத்துக்கள்;-
க, ங, ச, ஞ, ட, ண, த, ந, ப, ம, ய, ர, ல, வ, ழ, ள, ற, ன, இவற்றின் எண்ணிக்கை; 18

2. ஆகார உயிர் மெய் எழுத்துக்கள்:-
"ா" எனுங் குறியைக் கொண்டு வழக்கமாக எழுதப்படுவதுபோல இரண்டு எழுத்தாலானவை இவற்றுள்; ணா, றா, னா, ஆகிய மூன்றும் பழைய எழுத்துவடிவில் எவ்வித மாற்றமும் இல்லாத தனியெழுத்துக்களாலானவை எனவே இவற்றின் எண்ணிக்கை: 4

3. இகர உயிர்மெய்கள்:
கி, ஙி, சி, ஞி, டி, ணி, தி, நி, பி, மி, யி, ரி, லி, வி, ழி, ளி, றி, னி, இவையாவுந் தனி எழுத்துக்களாலானவை. அகர உயிர் மெய்யெழுத்துக்களை எழுதி அதன்பின்பு விசிறி இணைத்து எழுதும் சிரமமில்லாதவை. இவற்றின் எண்ணிக்கை: 18

4. ஈகார உயிர்மெய்கள்:-
கீ, ஙீ, சீ, ஞீ, டீ, ணீ, தீ, நீ, பீ, மீ, யீ, ரீ, லீ, வீ, ழீ, ளீ, றீ, னீ, இவைகளும் தனிஎழுத்துக்களே. இணைப்பு எதுவும் அற்றவை. இவற்றின் எண்ணிக்கை: 18

5. உகர உயிர்மெய்கள்:-
கு, ஙு, சு, ஞு, டு, ணு, து, நு, பு, மு, யு, ரு, லு, வு, ளு, று, னு என்பவை இவைகளும் எத்தகைய இணைப்புமற்ற தனியெழுத்துக்கள். இவற்றின் எண்ணிக்கை: 18

6. ஊகார உயிர்மெய் எழுத்துக்கள்:
கூ, நூ, சூ, ஞூ, டூ, ணூ, தூ, நூ, பூ, மூ, யூ, ரூ, லூ, வூ, ழூ, ளூ, றூ, னூ, இவ்வெழுத்துக்களும் இணைப்பில்லாத தனி எழுத்துக்கள். இவற்றின் எண்ணிக்கை: 18

7. எகர, ஏகார உயிர் மெய்யெழுத்துக்கள்:
இவைகளுக்கு ெ, ே, எனும் கொம்பு கள் சேர்த்து எழுதுதல், இவற்றின் எண்ணிக்கை: 2

8. ஐகார உயிர் மெய் எழுத்துக்கள்:
இவற்றுள் "ை" எனும் சங்கிலிக் கொம்பு சேர்த்தல். இதைவிட: ணை, னை, லை, ளை எனும் நான்கு தனி எழுத்துக்களும் உள்ளன. இவற்றின் எண்ணிக்கை: 5

9. ஒகர, ஓகார, ஔகார, உயிர்மெய்யெழுத்துக்கள்:
இவையும் அகர உயிர்மெய் எழுத்துக்களுடன் ஒற்றைக் கொம்பு, இரட்டை கொம்பு, அரவு என்பவற்றை இணைத்து எழுதுதல் இவற்றின் எண்ணிக்கை: 0

**ஒழுக்கமே அழகு**

உங்களது அழகு நாளுக்கு நாள் மாறலாம் அழிந்து போகலாம். ஆனால், உங்களது ஒழுக்கம் எப்பொழுதும் அப்படியே நிலைத்து நின்று உங்களை அழகுபடுத்தும்.

— ஏவிட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. ஆய்தம்:

ஃ இதுவும் இணைப்புகள் இல்லாத தனியெழுத்து. இதன் எண்ணிக்கை: 1

11. வடஎழுத்துக்கள்:

ஸ், ஸ, ஸி, ஸீ, ஷ், ஷ, ஷி, ஷீ, க்ஷ், க்ஷ, க்ஷி, க்ஷீ, ஹ், ஹ, ஹி, ஹீ, ஜ், ஜ, ஜி, ஜீ, ~, ~ எனும் வட எழுத்துக்கள். தனி எழுத்துக்களாக உள்ளன. இவற்றின் எண்ணிக்கை: 22

12. பிற எழுத்துக்கள்:

ஸ்ரீ, ஸ்ரீ, உ, எனும் கூட்டெழுத்துக்களும் தனிஎழுத்துக்களாக உள்ளன. இவற்றின் எண்ணிக்கை: 3

மொத்தத் தனி எழுத்துக்களின் எண்ணிக்கை: 157.

மற்றும் எண்கள், அடையாளங்கள் என்பனவும் உண்டு.

56 எழுத்துப் பாகங்களாகச் சுருக்கி அமைக்கப்பட்ட தமிழ் எழுத்துக்களைக் கூட தட்டெழுதியாதிவற்றிற் பாவிக்கமுடியாதளவு அதிகமாக இருக்கின்றது என்று கூச்சல் போடுங் காலத்தில் அதன் மடங்கை மேலும் மூன்று மடங்காக்கி விட்டது மாத்திரமல்ல தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் வேண்டுமா என்றும் கேட்கின்றனே! இந்த மடையன் யாரென நீங்கள் எண்ணலாம். அப்படி நான் ஏதும் புத்தியற்ற காரியத்தைச் செய்துவிடவில்லை.

பாரம் மிகுந்த ஒரு பொருளை வேறிடத்துக்குக் கொண்டு செல்ல நேர்ந்தால் அதனைப் பல பகுதிகளாகப் பிரித்து எடுத்துச் செல்வது ஒரு வகை. அடுத்தது அதன் பாரத்தைத் தாங்கி நகர்த்தக் கூடிய ஒரு மேலானவலுவை உபயோகித்து எடுத்துச் செல்வது மற்றொரு வகை.

இவற்றுள் நகர்த்துவதற்கு வேண்டிய வலு இல்லாவிட்டால்தான் கூறுகளாக்கிக் கொண்டு செல்வது புத்திசாலித் தனம். போதிய வலு இருக்கும்போது அல்லது உருவாகி வரும் போது அதனைக் கூறுபோட வேண்டிய அவசியம் தேவைதானா?

இதற்கு விடைகண்டால் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் அவசிமானதா என்பதற்கும் விடை தெரிந்துவிடும். தமிழ் எழுத்துச் சீர் திருத்தத்திற்கு சொல்லப்பட்ட காரணங்கள்;

1. தட்டெழுதி, மின்கணனி இயக்கம், தமிழ்த் தொலைபேசி எழுத்து அச்சு முறை என்பவற்றிற்குத் தடையாக அதிக எழுத்துக்கள் உள்ளன. அவற்றைக் குறைக்க வேண்டும்.

2. ஆங்கிலம் போன்ற முன்னேற்றம் அடைந்த மொழிகளைப் போலத் தமிழிற் காலத்துக் கேற்ற புது ஆக்கங்களைச் செய்யமுடியாதிருக்கிறது என்பதாகும்.

இதிலும் பார்க்க தமிழ் மொழிக்கு ஏதாவது புதுமை செய்து ஒரு கலகலப்பை ஏற்படுத்த வேண்டுமென்ற காரணத்தைச் சொல்லியிருந்தால் அது பொருத்தமானதாக இருந்திருக்கும்.

இப்போது மேற்கூறிய காரணங்கள் எந்த அளவில் உண்மையும் சரியானதும் நடைமுறைக்கு உகந்ததும் எனப் பார்ப்போம்.

தமிழ் எழுத்துக்களை வலுக் குறைந்த தமிழ்த் தட்டெழுதியில் அச்சுக் செய்யக் கூறு போட்டுப் பின்னர் ஒன்றாக ஒட்ட வேண்டியிருந்தது. இதனல் எழுத்துக்களின் உருக்கள் விகாரப்பட்டன. அவற்றின் தனிச் சிறப்புகள்

## கிறிஸ்மஸ் வாழ்த்து

கிறிஸ்மஸ் வாழ்த்து மடல்கள் முதன் முதலில் 1842ம் ஆண்டில் இலண்டனில் தோன்றின. ஒரு பதினறு வயதுச் சிறுவன் வரைந்த படமொன்று முதல் வாழ்த்தாக வெளியிடப்பட்டது. இன்று சுமார் 100 கோடி வாழ்த்து அட்டைகளுக்கு மேல் அனுப்பப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெட்டன, வேற்றுமொழி போலவும் பண்டைக் காலக் கல்வெட்டுப் போலவும் உருவங் கொண் டன, அதுமட்டுமல்லாது தமிழ் எழுத்துறுப்பு வரிசையும் நிரையும் அளவுங் கெட்டன.

அக்காலத்தில் இருந்த வசதிக் கேற்ப அந்தச் சிந்தனை ஒருவாறு சரியானதாக இருக் கலாம். ஆனால் தற்போது தட்டெழுதி கொள் ளும் வலுவிலும் பார்க்க பலமடங்கு வலு வுள்ள தட்டெழுதிகளும் மின்கணனிகளும் பாவனைக்கு வந்தபோது பழைய கோட்பாடுக ளும் சிந்தனைகளும் முயற்சிகளும் பயனற்றுப் போயின.

இனி மேற்கூறிய காரணங்கள் மேற் கொள்ள முடியாத நிரந்தரச் சிரமங்கள்தானா என்பதை முதலிற் பார்ப்போம்.

இதற்கான ஒரு பரிசோதனை நடாத்தப் பட்டது. இதற்குப் பின்வருஞ் சாதனங்களும் ஆட்களும் பயன்படுத்தப்பட்டனர்.

1. ஆங்கிலத்தில் கையினால் அச்சமைப்புச் செய்யும் ஒரு அச்சகம் - அச்சுக் கோர்ப் பாளன்.

2. ஆங்கிலத்தில் புதுமுறையில் அச்சமைப்புச் செய்யும் ஒரு அச்சகம். அச்சமைப்புச் செய்பவன்.

3. பழைய அமைப்பு ஆங்கிலத் தட்டெழுதி- தட்டெழுதி இயக்குபவர்.

4. தமிழ்த் தட்டெழுதி - தட்டெழுதி இயக்குபவர்.

5. 52 தமிழ் எழுத்து உறுப்புகளைக் கொண்ட இன்னும் பாவனைக்கு வராத பழைய மாதிரி தமிழ் மின்கணனி - அதிற் பயிற்சி பெற்ற அச்சு அமைப்பாளர்.

6. என்னால் நெறிப்படுத்தப்பட்ட 157 தமிழ்த் தனி எழுத்துக்களைக் கொண்ட மின்கணனித் தமிழ் நெறியமைப்பு - இயக்குபவர்.

இவற்றுடன் 600 தட்டுகளால் அச்சமைப் புச் செய்யும் ஒரு ஆங்கில வாசகம் தேர்ந் தெடுக்கப்பட்டு அது அழகும், அளவானதும், நேரிடையான கருத்துங் கொண்ட சொற்களி னால் அதே அளவு தட்டுகளைக் கொண்டதாக மொழி பெயர்க்கப்பட்டது.

பின்னர் அது மேற்சொல்லப்பட்ட ஐந்து அச்சமைப்புகளிலும் அச்சு அமைப்புச் செய்யப் பட்டது. மிக விரைவான முறையில் இவைகள் அச்சமைப்புச் செய்யப்பட்டு அதற்குச் செல வான நேரமுங் கணிக்கப்பட்டது.

ஈற்றில் எனது நெறியமைப்பு முறையில் செய்யப்பட்ட அச்சமைப்பு ஆங்கில மொழியில் நவீனப் படுத்தப்பட்ட மின்கணனியில் அச் சமைப்புச்செய்த அதே நேரத்துக்குள் செய்து முடிக்கக் கூடிய தாயிற்று. தற்போது தமிழ் அச்சுக் கூடங்களில் அச்சிடும் அமைப்பும் அழகுங் கொண்ட தமிழ் எழுத்திலும் பார்க்கத் தரமாக அது அமைந்திருந்தது.

ஏனையவைகளின் அழகும் அமைப்பும் நேர மும் மிகமிகத் தாழ்ந்ததாக இருந்தன. எனவே மின்கணனிக்காகவுந் தமிழ்த் தட்டெழுதிக் காகவுந் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் அவசிய மற்றதென்பது உறுதியாயிற்று.

அடுத்த காரணம், இப்போதுள்ள தமிழ் எழுத்து முறையால் தொலைபேசித் தமிழ் அச் சமைப்புச் செய்யமுடியாது என்பதாகும். இது வும் இலகுவாகச் செய்யக் கூடியதென்பதும் அதற்காக எழுத்துரு மாற்றஞ் செய்ய வேண் டியதில்லை என்பதும் ஓரளவு பரீட்சை நிலையில் உள்ள எனது முயற்சியினாற் கண்ட பேறுகும்.

**ஒரு நல்ல சிறுகதை என்பது ஓர் எழுத்தாளனுடைய இதயத்திலே எதிரொலிக்கின்ற ஒரு சிறு சம்பவமாக அமையும்.** **பக். 26**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழி என்றால் அது பேசும் மொழியையும், எழுதும் மொழியையும் குறிக்கும். ஆனால் சீன மொழியில் பேசும் மொழி வேறு, எழுதும் மொழி வேறு. பேசும் மொழியை யூ - யேன் என்றும், எழுதும் மொழியை வென் - த்சு என்றும் குறிப்பிடுகிறார்கள்.

இப்போது எழுத்துச் சீர்திருத்தம் ஒரு பயனற்ற காரியம் என்பது மட்டுமல்ல அவசரப் பட்டுச் செய்த ஒரு புத்தியற்ற செயல் என்பதும் தெளிவாகின்றதல்லவா? இதனை உறுதிப்படுத் துமளவுக்கு நாங்கள் இந்த நெறியைப் பயன் படுத்தி கனடாவில் அச்சிட்டு வரும் நிழல் மாத இதழ், பல நூல்கள் என்பன சாட்சி பகருகின்றன.

157 எழுத்துக்களைக் கொண்ட மின்கணனி தற்போதைய தட்டெழுதியிலும் பார்க்க மூன்று மடங்கு பெரிதாக இருக்குமே என்று எண்ணவும் வேண்டாம். ஒரு ஆங்கிலத் தட் டெழுதியின் அளவில்தான் இருக்கின்றது. இரு மொழிகளையும் அதில் அச்சமைப்புச் செய்ய லாம் என்றும் சொல்லிக் கொள்ள விரும்பு கின்றேன். விரைவிற் பழைய குருடி கதவைத் திறவடி என்பதுபோலவோ, போன மச்சான் திரும்பி வந்தார் என்பது போலவோ தமிழ்ச் சீர் திருத்தத்தைப் பழைய நிலைக்குக் கொண்டு வரச் சீர்திருத்தஞ் செய்யும் நிலையும் ஏற் படும்.

இதுவரை தமிழ் எழுத்துச் செய்ய முன் வராத நாடுகள் சற்றுப் பொறுத்திருப்பது நலம் என்பது எனது அனுபவ உரையாகும்.

இது ஈழத்து புராட்னரின் எழுத்துச் சீர் திருத்தச் சிந்தனைகள் எனும் நூலின் இரண் டாம் பதிப்பிலிருந்து எடுக்கப்பட்டது.


# "அருளகம்"

திருமலை மட்டுநகர் மறைமாவட்ட விவிலிய, மறைக்கல்வி, திரு வழிபாடு, முப்பணி நடுநிலையத்தின் - இயக்குனர் பணியாளர் எண்ணத் தில் உருவானதே 'அருளகம்' விற்பனை நிலையமாகும். இந்நிலையம், மத்திய வீதியில் அமைந்துள்ள 'எகெட்' விற்பனை நிலையத்திற்கு அருகாமையில் திறக்கப்பட்டுள்ளது,

அருளகத்தில் விற்பனைக்கென வைக்கப்பட்டுள்ள பொருட்கள்;-

★ விதவிதமான பல வர்ண சுரூபங்கள்.
★ பலவிதமான புனிதர்களின் படங்கள்
★ திருச்சிலுவைகள் - மெடில்கள்
★ புதிய ஏற்பாட்டு நூல்கள் - செபப்புத்தகங்கள்,
★ உயர்தர வகுப்பு மாணவ மாணவியர்களுக்கான சமயபாடப் புத்தகங்கள்.
★ சிறுவர் திருப்பலி, புதுநன்மைத் திருப்பலிப் புத்தகம்.
★ பலவிதமான வாழ்த்து மடல்கள் பாலன்குடில் செற்,
★ இன்னும் உங்களுக்குத் தேவையான சமய சம்மந்தமான நூல்களும் பொருட்களும்

விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளதே அருளகமாகும்.

வாருங்கள்! பாருங்கள்! பெற்றுச்செல்லுங்கள்!

**மறைக்கல்வி நிலையம், மட்டக்களப்பு.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இளைஞர் அரங்கம்

# இன்றும் ஏரோதுக்கள்

அந்த மூன்று ஞானிகளின் தேடலினுல் யூதேயா நாட்டு மன்னன் ஏரோது குழம்பினுன். இற்றைக்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன். நாடாளு மன்னன் நான் இருக்க, இன்னுமொரு மன்னனு? முடியாது. முளையிலேயே கிள்ள வேண்டும். குழந்தை இயேசுவைக் கொல்லத்திட்டம் தீட்டினுன் அன்று.

இன்றும் இயேசு பிறக்கின்ருர், ஏரோதுக்கள் விழித்துக் கொண்டிருக்கின்றனர். அன்று இயேசுவைக் கொல்ல, அப்பாவிக் குழந்தைகள் பலரைக் கொன்று குவித்த ஏரோது மடிந்து விட்டான். இன்றைய ஏரோதுக்கள் குழந்தைகளையும் குறிப்பாக இளைஞர்களையும் கொன்று குவிக்கிருர்கள்.

எனக்குப் போட்டியாக இன்னுமொரு அரசனு? என்று அன்றைய ஏரோது கலங்கினுன். இன்றைய ஏரோதுக்கள் எமது ஆசனங்களைக் கைப்பற்ற இவர்களா? என அவர்களால் உந்தப் பட்டு குரல் கொடுக்கும். (பயங்கரவாதம் புரியும்) குழுக்களை, இளைஞர்களை சித்திரவதை செய்கின்றனர். பட்டப் பகலில் பாதை ஓரங்களில் எறிகின்றனர்.

★ அன்று ஏரோதுவின் கையாட்கள் வாளால் குழந்தைகளை வெட்டினுர்கள்.

★ இன்று ஏரோதுக்களும், அவர்களது கையாட்களும் வாளால் வெட்டுவதில், துவக்குகளால் சுடுவதில் திருப்தி காணுமல் ரயர் போட்டு எரித்தும் விடுகின்ருர்கள்.

இன்று எங்கும் எரிந்த எச்சங்களையே பார்க்கின்ருேம்.

- வாகனங்கள் - வீடுகள்
- தொழிற்சாலைகள் - பாடசாலைகள்
- தளபாடங்கள் - இயந்திர சாதனங்கள்

எரிக்கப்பட்டு அதன் எச்சங்களைப் பார்த்த நாம், இன்று மனித உடல்கள் எரிக்கப்பட்ட பின் மிஞ்சும் எச்சங்களைப் பார்க்கின்ருேம்.

வடக்கு - கிழக்கில் தொடங்கிய கொலைகள், எரிப்புக்கள் இன்று ஏனைய பகுதிகளிலும் பெரும்பான்மை இன இளைஞர்கள் மேலும் பரவி விட்டன. எரிந்த மனித உடல்களின் எச்சங்கள் பக்கத்து விளை நிலங்களுக்கு உரமாகப் புதைக்கப்படுகின்றது.

'ஏன் பிறந்தாய் மகனே' என்று ஒவ்வொரு தாயும் இன்று அலறுகின்ருள்.

இயேசுவே நீர் இன்னும் பிறக்கின்றீர். ஆனுல் ஏரோதுக்கள் மடியவில்லையே என அன்னையர் அழுகின்றனர்.

குழந்தை இயேசுவே! நீர் எம்மில் மட்டுமல்ல, இந்த ஏரோதுக்களின் நெஞ்சிலும் பிறக்க வேண்டும் என அன்புக் குரல் கொடுப்பது.

—கலையுலகன்—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் - 5

# அச்சுத்துறையும் எமது (பிர)தேச வெளியீடுகளும்

எஸ். லோகநாதன்

தென்னிந்திய சிறு கதை இலக்கியங்களும் இன்று வர்த்தக நோக்கத்தைக் கொண்டதாகவும், பாலுணர்வுகளை அடிப்படையாகக் கொண்டனவாகவும் மாறி வருகின்றன.

மக்களுக்குக் கீழ்த்தரமான இரசனைகளைத் தூண்டி வருவதினை நாம் அவதானிக்கலாம். பொதுவாக அக்காலச் சிறு கதை இலக்கியங்கள் காமச் சுவையை (Pornographic Literature) மிகைப்படுத்திக் கூறும் இலக்கியங்களாக அமைந்தும் விடுகின்றன.

ஆங்கிலேய, ஜேர்மனிய, பிரஞ்சிய, ஸ்பானிய, அமெரிக்க, யப்பானிய சீன சிறு கதை இலக்கிய எழுத்தாளர்களைப் போன்று தத்தமக்குச் சிறப்பான தனிப் பாணியிலே எழுதும் அநேகர் எம் மத்தியில் இல்லாதது பெரும் குறைபாடாகும்.

இருப்பினும் தென்னிந்திய சிறுகதை எழுத்தாளர்களில் புதுமைப்பித்தன், ராஜநாராயணன் போன்றோர் சிறந்த சிறு கதை இலக்கியங்களைப் படைத்துள்ளனர். உரையாடலை பேச்சு வழக்கில் எழுதி நடப்பியற் பண்பை (Realism) நிலை நிறுத்தியுள்ளனர் எனலாம். இவர்கள் வரிசையிலே வண்ணதாசன் சிறந்த சிறு கதைக்குரிய களச் சூழ் நிலையை (Atmosphere) தோற்றுவித்து நல்ல படைப்புக்களைத் தந்துள்ளார். இவர்களுக்கு முன்னதாகவே சிறு கதைகளின் தந்தை எனப்படும் வ வெ. சு. ஐயர் 1920களில் சிறந்த சிறு கதை இலக்கியங்களைப் படைத்தவர் என அறிகிறோம்.

இவருக்குப்பின்னதாகத்தான் கு. ப. ராஜகோபாலன், பி. எஸ். ராமையா, பிச்சமூர்த்தி, மௌனி, கல்கி போன்றோர்களும் தென்னிந்தியாவில் சிறு கதை இலக்கிய வளர்ச்சியில் தத்தமது பங்களிப்புக்களை வழங்கினர் என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும்.

இன்று தென்னிந்தியாவில் மட்டுமல்ல இலங்கையிலும் தமிழ் மக்கள் விரும்பிப்படிக்கும் கல்கி, குமுதம், ஆனந்த விகடன் போன்றன இலக்கியப் பாங்கினை பங்களிப்பினை விட்டு விலகி வர்த்தகக் கதைகளைக் கொண்டனவாக மாறிவருகின்றன என்பதையும் நாம் கவனத்திற் கொள்ளல் வேண்டும்.

ஆரம்ப காலத்தில் வந்த கலைக்கதிர், தீபம் போல் சிறு கதை இலக்கியங்களைப் படைக்கும் வெளியீடுகளை இன்று தென்னிந்தியாவில் காண முடியாதிருக்கின்றது. இதேபோன்று இலங்கையில் 1960 களில் வெளிவந்த "கலைவாணி" போன்ற சிறு கதை இலக்கிய வெளியீடுகளை எம் நாட்டிலும் இன்று காணமுடியாதுள்ளது.

**கிரேக்க அறிஞரான அரிஸ்டாட்டில் எப்போதும் திக்கித்திக்கித்தான் பேசுவார். ஆனால் அவர் அதை ஒரு குறையாக எண்ணியதில்லை ஆனால் இதே அரிஸ்டாட்டில் எப்போதும் நல்ல ஆடைகளை அணிவதில் மட்டும் கடைசிவரை ஆர்வம் கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவியல் வெளியீடுகள்:-

இக்காலத்தில், நாவல்கள், சிறுகதை இலக்கியங்களை விட அறிவியல், கலைகள் சம்மந்தமான வெளியீடுகள் தென்னிந்தியாவில் மட்டுமல்ல, இலங்கையிலும் குறிப்பாக தமிழ் மொழியிலும் வெளிவரத் தொடங்கியுள்ளன. தமிழ் வாணன், டாக்டர் எம். எஸ். உதய மூர்த்தி ஆச்சாரியர் போன்றோர்களால் அதிகம் எழுதப்பட்ட தத்துவ, மெய்யியல், ஆற்றுப்படுத்தல், கலைகள் சம்மந்தமான வெளியீடுகளை இன்று அதிகம் பெறக்கூடியதாக நாம் உள்ளோம். பேச்சுக்கலை, சமையற்கலை, போன்றனவற்றிற்குமாக தனித் தனியான வெளியீடுகள் இன்றுள்ளன. இவர்களை விட இன்னும் பல எழுத்தாளர்கள் இந்தியாவில் ஈடுபாடு கொண்டுள்ளனர்.

## எமது (மொழிப்) பத்திரிகைத்துறை வளர்ச்சி பெறுதற்குரிய காரணிகள்:-

இத் தொடரிலே எமது தமிழ் மொழியிலான அச்சுத்துறை ஏன் வளர்ச்சியடையவில்லை என்பதை சற்று ஆழமாகக் குறிப்பிட விரும்புகின்றேன். இதனை இரு பிரிவுகளாக வகுத்து, தேசிய புதினப்பத்திரிகைகள், ஏனைய வெளியீடுகள் எனும் அடிப்படையில் சில தகவல்களை தருவதற்கு விளைகின்றேன்.

## தேசிய புதினப் பத்திரிகைகள்:-

புதினப் பத்திரிகைகளின் மட்டில் காலத்திற்குக் காலம் கட்டுப்பாடுகளும் - தணிக்கைகளும் ஏற்படுத்தப்படுகின்றன என்பதை விளங்கிக் கொண்டவர்களாக நாம் இதனை நோக்குதல் வேண்டும். அவை பெரும் பான்மையானதும், தொடர்ச்சியானதுமான காரணிகள் இல்லை என்பதைப் புறக்கணித்தே இத்தரவுகளைத் தருகின்றோம்.

150 வருடங்களாக எமது தேசிய பத்திரிகைத்துறை வளர்ந்துள்ளது. ஆனால் தமிழ் மொழி வளரவில்லை என்றே குறிப்பிடலாம். புதினப்பத்திரிகைகளின் மட்டில் செய்திப் பாரம்பரியம் வளர்ச்சியடையவில்லை.

செய்திப் பத்திரிகைகளுடன் தொடர்பு கொண்டுள்ள நிருபர்களுக்கும் - எழுத்தாளர்களுக்கும் சமூகத்தில் முக்கியத்துவம் வழங்கப்படுவதில்லை எம்நாட்டில். இந்திய நாட்டில் ஏனைய ஆசிய நாடுகளில், ஐரோப்பிய நாடுகளில் நிருபர்கள், எழுத்தாளர்களுக்கு வழங்கும் முக்கியத்துவம் அதிகம் என்றே கூற வேண்டும்.

மேல்வந்த நாடுகளில் இவர்களுக்காக வழங்கும் பயிற்சிகளும், தொழிற்துறை சார்பில் வழங்கப்படும் உயர்கற்கை நெறிகளும் எம் நாட்டில் இல்லாததும் பத்திரிகைத் துறை வளர்ச்சி பெறுததற்கு அடிப்படைக் காரணியாக அமைகின்றது.

எம் மக்களிடம் நிருபர்கள், எழுத்தாளர்களைப் பற்றி இப்படி ஒரு எண்ணம் உண்டு. “அவர் தேவை - அவரில் விருப்பம் இல்லை” இதனாலும் சிறந்த நிருபர்கள் - எழுத்தாளர்கள் பின் வாங்குகின்றனர்.

எமது நிருபர்களும் - எழுத்தாளர்களும் கூட குறுகிய வட்டத்தினுள் இயங்குகின்றனர். களத்திற்குப் போகாமலேயே செய்திகள், தகவல்கள் வரும் மட்டும் காத்திருக்கின்றனர். புதினங்கள் வரட்டும் எனக் காத்திருப்பது ஒரு பெரும் குறைபாடு. புதினங்களை நாம் தேட வேண்டும், ஒரு செய்தியிலிருந்து ஒரு கதையை, ஒரு கட்டுரையைப் படைக்கும் ஆற்றல் கொண்டவர்களும் எம் மத்தியில் இல்லை.

1988ல் தென் கொரிய, ஒலிம்பிக் போட்டியில், 100 யார் ஓட்டத்தில் முதலிடம் பெற்ற தங்கப் பதக்கம் பெற்ற, பென்ஜோன்சன் மதுபோதைப் பாவனையில் பிடிபட்டு, அவருக்கு வழங்கப்பட்ட தங்கப்பதக்கம் பறிக்கப்பட்டது, உலகறிந்த செய்தி. அதனை அடிப்

**வாசகன் எதை விரும்ப வேண்டுமோ அதை அவன் விரும்புகிற மாதிரிச் சொல்வதில் தான் ஒரு படைப்பின் வெற்றி தங்கி உள்ளது:** **பக். 28**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படையாகக் கொண்டு குமுதத்தில் ஒரு கதை எழுதப்பட்டிருந்தது. அதிலும் ஒலிம்பிக் போட்டிக்காக ஆயத்தப்படுத்திய இளைஞன் போதைவஸ்து பாவித்துவிட்டான், அவனது பயிற்றுநர் இதனை அறிந்து அவனை மருந்திட்டு கொல்வதாக அக்கதை வெகு அழகாகப் பின்னப்பட்டிருந்தது. இப்படியான எழுத்தாளர்கள் எம் மத்தியில் இல்லாததும் எமது பத்திரிகைத் துறை வளர்ச்சியடையாததற்குரிய காரணமாகும்.

இலங்கையின் புதினப் பத்திரிகைகளில் இரு முக்கிய செய்திப் பிரிவுகளை நாம் அவதானிக்கலாம்.

1. இலங்கையின் அபிவிருத்தி
2. வெளிநாட்டுச் செய்திகள் - நாடுகளுக்கிடையிலான சண்டைகளும் - சமாதானப் பேச்சுவார்த்தைகளும்.

ஒட்டு மொத்தத்தில் ஒரு புதினப் பத்திரிகை மேல்வந்த இரு பெரும் செய்திகளையும் தருகின்றன.

வெளிநாட்டுச் செய்திகளுக்கு எம் செய்திப் பத்திரிகைத் தாள்கள் வழங்கும் முக்கியத்துவம் அதிகம். எமக்குக் கிடைக்கும் செய்திகளும், புதினங்களும் கூட பொதுவாக நம்பகத்தன்மை (Credibility) வாய்ந்ததாக நிகழ்தகவு (Probability) அடிப்படையில் தெரிவிக்கப்படுகின்றனவே தவிர, ஏனைய நாட்டுப் பத்திரிகைகள் தெரிவிக்கும் திட்டவட்டமான, உண்மையான செய்திகளாக இருப்பதில்லை. இதனால் மக்கள் பத்திரிகைத் துறையுடன் கொள்ளும் ஈடுபாடு குறைகின்றது. இது வெளியீட்டின் எண்ணிக்கைகளை வீழ்ச்சியடையச் செய்வதனால் பத்திரிகைத் துறையின் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது.

தென்னிந்திய ''தினத்தந்தி'' போல் ஆழமானதும், பரபரப்பூட்டும் செய்திகளை வழங்கும் புதினப் பத்திரிகைகள் இல்லை. மித்திரன் கூட தென்னிந்தியச் செய்தி - சினிமாவுக்கு வழங்கும் முக்கியத்துவத்தை எமது செய்திகளுக்கு வழங்குவதில்லை என்றே கூறவேண்டும்.

ஒரு செய்தி, ''ஒரு முழுமையிலிருந்து இன்னொரு முழுமையை உருவாக்க வேண்டும்.'' இத்தகைய உள்ளீட்டை எமது பத்திரிகைத் துறை கொண்டிராததும் வளர்ச்சிக்கு பெரும் தடையாகும்.

ஒரு புதினப் பத்திரிகையின் செய்தி, மக்களின் தீர்மானத்திற்கு வழிவகுக்க வேண்டும். ஒரு சாதாரண பிரயாணம் கூட ஒரு பத்திரிகைச் செய்தியினால் தீர்மானிக்கப்படும் எனும் எதிர்வு கூறலைக் (Forecasting) கொண்டதாக செய்திகள் வழங்கப்படல் வேண்டும். இவ்வாறு வழங்காததனாலும் எம் பத்திரிகைகள் மக்கள் மத்தியில் முக்கியத்துவத்தை இழந்து விடுகின்றன.

அடுத்து எமது பத்திரிகைத் துறை வெளிநாட்டுச் செய்தித்தாபனங்களையே நம்பி வாழ்கின்றன.

ஆபிரிக்க நாடுகள் பிரன்சிய செய்தித் தாபனங்களையே நம்பியிருப்பதுபோல் ஆசிய நாடுகள் குறிப்பாக இலங்கை ரொயிடரை அதிகளவு நம்பி வாழுகின்றது. இவற்றைவிட பி. ரி. ஐ, கேபிள் ஏ. பி. எம், டாஸ் போன்ற செய்தித் தாபனங்களையும் எம் பத்திரிகைத் துறை நம்பியிருக்கின்றது.

உலகிலே இன்று 80 க்கும் மேற்பட்ட செய்தித் தாபனக் கம்பனிகள் இயங்குகின்றன. ஐக்கிய அமெரிக்க நாட்டில்தான் அதிகம் இயங்குகின்றன. எமது நாட்டில் சிறப்பு மிக்க செய்தித்தாபனங்கள் இல்லாததும் வளர்ச்சிக்கு பெரும் குறைபாடாகும். இலங்கையில் ''லங்கா புவத்'' இயங்குவதை இங்கு குறிப்

**விமர்சகர்கள் பார்வைக்கு**

**என்னுடைய பார்வைதான் சரியென்று சாதிக்கிற பிடிவாதம் எனக்கில்லை. இந்தப்பார்வை தவிர பிற பார்வைகளெல்லாம் தவறானது என்று சாதிக்கிற அறியாமையும் எனக்கில்லை.**

**—ஜெயகாந்தன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வத்திக்கான் நகரம்

கத்தோலிக்க மதத்தின் தலைவரான போப் வசிக்கும் நாடு இது. இந்நாட்டில் மட்டுமே உலகில் உள்ள எல்லா மொழிகளையும் ஏற்றுக் கொள்ளுகின்றனர். நீங்கள் எந்த மொழியில் சந்தேகம் கேட்டாலும் அந்த மொழியிலேயே சந்தேகத்திற்கான பதில் கிடைக்கும். சொந்தமாக இரயில்வே, தபால் சேவை, போலீஸ், இராணுவம் என்று வைத்திருக்கும் இந்நாட்டின் பரப்பளவு 0.4 சதுர கிலோ மீட்டர்தான் நாணயத்தின் பெயர் லிரா. மக்கள் தொகை 1000

பிட்டாக வேண்டும். இருப்பினும் வெளி நாட்டுச் செய்திகளை இங்கு தரும் செய்தித் தாபனமும் - பத்திரிகைத் துறையும், எமது செய்திகளை வெளிக் கொண்டு போவதில்லை. இதனாலும் சர்வதேச மட்டத்தில், பிராந்திய ரீதியில் எமது பத்திரிகைத் துறை வளரவில்லை எனலாம்.

எமது தேசிய பத்திரிகைத்துறை, புதினங்களைக் கொடுப்பதில்லை என்றே சொல்ல வேண்டும். மக்களுக்குப் புரிந்தது புதிய விடயமில்லை, மக்களுக்கு ஏற்கனவே அறிந்தது செய்தியாகாது. மக்கள் அறியாத - தெரியாத ஆனால் தெரிய வேண்டிய விடயத்தை எமது பத்திரிகைத்துறை வழங்குதலை விட்டு, வெறுமனே இயற்கை நேர்வுகளைத் திரும்பத் திரும்பக் கூறுவது பெரும் குறைபாடாகவும் அமைகின்றது.

இவற்றைவிட பத்திரிகைத் துறைகள் ஒரு மையப்படுத்தப்பட்டிருப்பதும், விரைவான தொடர்புச் சாதன விருத்தியின்மையும் - காலத்திற்குக் காலம் போக்குவரத்துக்களில் ஏற்படும் ஒழுங்கீனங்களும் - பத்திரிகைத் துறையில் ஊழியர்களுக்கு வழங்கப்படும் வேதனங்கள், ஊக்கங்கள் ஆகியவற்றில் ஏற்படும் குறைபாடுகளும் எமது (தமிழ்) தேசிய பத்திரிகைத் துறையின் வளர்ச்சிக்கு பெரும் தடைகளாக அமைகின்றன எனலாம்.

எப்பொழுதும்மகிழ்ச்சியுடன்இருக்க வேண்டும் என்கின்ற நல்ல எண்ணமே நல்ல மனத்துணிவை வழங்கும் திறனுடையது.

—ஆல்பர்ட் சுட்வைசர்

## கிறிஸ்துமஸ் நட்சத்திரக் கூண்டு

கிறிஸ்துமஸ் விழாக்களில், கிறிஸ்தவர்கள் வீட்டு முகப்பில் நட்சத்திரக் கூண்டுகளை உள்ளே ஒளி விளக்குகளுடன் தொங்கவிடுவதைக் காணலாம். இவ்வொளிக் கூண்டுகள் தொங்குவதன் மூலம், அவ்வில்லத்திலுள்ளோர் 'இயேசு இங்கே இருக்கிறார்' என்பதை பிற மக்களுக்குத் தெரிவிக்கும் ஓர் அடையாளமே இது.

இயேசு பிறந்த சமயம் அவரைத் தரிசிக்க வந்த ஞானிகள் மூவருக்கு வழிகாட்டி வந்த வால் நட்சத்திரம் 'பெத்லகேம்' சிற்றூரை அடுத்த மாட்டுத் தொழுவத்திற்கு நேராக வந்து நின்றது. அம் மூவரும் அங்கு சென்று பார்க்கவே இயேசு பிறந்திருப்பது கண்டு இன்புற்றனர் என்பது வரலாறு, இவ் வால் நட்சத்திரத்தை நினைவூட்டுவதே கிறிஸ்மஸ் நட்சத்திரக் கூண்டுகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# டிசம்பர் 25ல் உறுதி எடு

● நிலாவெளி கைலைநாதன்

தொடராக...
தொடர்கின்ற
துப்பாக்கி ஒலிகள்
திடீர்... திடீர்ரென
விதவைப்பட்டம்
திணித்ததால்
விம்மி அழுகின்ற
மாதாக்கள்,
அங்கங்களை
பறிகொடுத்து
அங்கவீனர்
பட்டம்பெற்ற
அயலவர்கள்,
அன்புக்கு
ஏங்கும்
அனாதைக் குழந்தைகள்,
நீ மட்டும்
நல்ல சமாரியனை
எதிர்பார்த்துக் கொண்டு...
உண்ண உணவு
உடுக்க உடை
இருக்க இடம் இன்றி
அகதியாகும்
உன் தேசம்...
நீ மட்டும்
வானத்தை நோக்கி
ஒரு கிருஸ்துவுக்காக
டிசம்பர் 25.
அகிலத்தில்
அன்பு கருணைக்கு
அடிக்கல்
நாட்டிய நாள்
சந்தேகம் இல்லைத்தான்
அதற்காக
சடங்குகளில்
மறையுரைகளில்
மாத்திரமா
என்னை நீ
மட்டுப்படுத்துவது?
இங்கே ஒவ்வொரு
கிருஸ்தவனும்
கிருஷ்துதான்.
டிசம்பர் 25ல்
உறுதி எடு, இனி
நீயே கிருஸ்து
நீயே இங்கு
நல்ல சமாரியன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஓர்

# இலக்கியச் சந்திப்பு

மட்டக்களப்புப் பிரதேசத்தில் இடம் பெறும் எந்தவொரு இலக்கிய முயற்சியிலும்,- கருத்தரங்குகள், நூல் வெளியீடுகள், விமர்சன அரங்குகள், கலாசார விழாக்கள் - எதுவாயினும் அவற்றில் பெரும்பாலும் ஏதோ ஒரு வகையில் ஒருவருடைய பங்களிப்பு, ஒத்துழைப்பு, செயற்பாடு நிச்சயமிருக்கும். மட்டக்களப்புப் பிரதேச இலக்கிய முயற்சிகளில், பங்களிப்புகளில் இரண்டறக் கலந்தவர் இவர். அவர்தான் ''அன்புமணி'' என்று அனைவராலும் அழைக்கப்படுகின்ற திரு. இராசையா நாகலிங்கம் அவர்கள்.

தற்போது மட்டக்களப்புக் கச்சேரியில் தலைமையக உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கும் இவர் பிரதேசப் பற்று மிகுந்த ஓர் எழுத்தாளர். மட்டக்களப்பின் பழம் பெருமைகளை, சிறப்புகளை, இம் மண்ணுக்கே உரிய தனித்துவத்தை வெளிக் கொணர்வதில் ஆர்வத்தோடு ஈடுபடுபவர். நம்மோடு வாழ்ந்த - வாழுகின்ற அதேவேளை நம்மில் பலருக்குத் தெரியாத அறிஞர்களை, புலவர்களை, இலக்கிய விற்பனர்களை இனங் காட்டி, நினைவூட்டி எல்லோரும் அறியும்படி ஏத்திவைப்பவர். ஒரு காலத்தில் சிறந்த சிறு கதை எழுத்தாளராகக் குறிக்கப்பட்ட இவர் பல இளம் எழுத்தாளர்களுக்கு முன்னோடி; வழிகாட்டி. கிழக்கிலங்கை இலக்கியப் பரப்பில் 'அன்புமணி' என்ற பெயர் ஆழமாகவே பதிந்துள்ளது.

மட்டக்களப்புக்குத் தெற்கே ஐந்துமைல் தொலைவில் உள்ள ' ஆரையம்பதி ' என்னும் கிராமம் இவரது பிறப்பிடம். அவ்வூர் பல கலைஞர்களின், கவிஞர்களின் இருப்பிடம். அந்த மண்வாசனை அதிகமாகவே இவரிடம் படிந்துள்ளது. அரசபணிக்கு மத்தியிலும் இலக்கியப் பணி புரிவதில் அன்று முதல் இன்றுவரை தளராது ஈடுபட்டுள்ளார்.

சிறுகதைகள், மேடை, வானொலி நாடகங்கள், சித்திரங்கள் என்று பலவற்றை இவர் படைத்துள்ளார். மட் / தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் செயலாளராகவும், மாவட்ட கலாசாரப் பேரவை உறுப்பினராகவும், இந்து இளைஞர் மன்ற செயற்குழு உறுப்பினராகவும், மட்டக்களப்பு நூல் நிலைய உறுப்பினராகவும், சாகித்திய மண்டல நாடகக் குழு உறுப்பினராகவும், பல கலைவிழாக்கள், கருத்தரங்குகள், விமர்சன அரங்குகள், வெளியீட்டு விழாக்கள் போன்றவற்றை ஒழுங்கமைப்பவராகவும் பல்வேறு பணிகளைப் பாராட்டும் வண்ணம் புரிந்துள்ளார். அரச உயர் அதிகாரியாக இருந்தும் ஆடம்பரமற்ற அந்த எளிமை, எல்லோருடனும் இயைந்து பழகும் தன்மை, கலகலப்பான சுபாவம் அவருக்கே உரிய தனித் தன்மையாகும், '' அன்புமணி அண்ணை. ஆஹா! நல்ல மனிதர் '' என்று அறிந்தோர் அனைவரும் மனந்திறந்து பாராட்டும் படியான பண்பாளர். தொண்டனின் வளர்ச்சியில் மிகுந்த அக்கறை கொண்டவர். இத்தகைய வல்லவரை நல்லவரை தொண்டன் வாசகர்களுக்காகப் பேட்டி கண்டு, நமக்குப் பெருமை சேர்த்துக் கொண்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● கிழக்கிலங்கையின் இலக்கிய முயற்சி களிலே பிரதான பங்காளியாக இருக்கின்ற தங்களை, கிழக்கிலங்கையிலிருந்து வெளி வரும் ஒரே ஒரு மாதசஞ்சிகையான தொண்டனின் சார்பாகப் பேட்டி காண் பதிலே மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். வாசகர்களுக்கு உங்களை அறிமுகப்படுத் துங்களேன்.

○ என்னைப் பற்றிச் சொல்வதானால் நான் 1953ம் ஆண்டுகளிலிருந்து எழுதத் தொடங்கியவன். அந்தக் காலத்தில் கல்கி போன்றவர்களுடைய புத்தகங்களை நிறைய வாசித்ததனால் ஏற்பட்ட தாக்கம் எழுத வேண்டுமென்ற உந்துதலை ஏற்படுத் தியது. அதன் விளைவாக நான் எழுதிய முதல் சிறுகதை 'கிராமபோன் காதல்' என்பது. கல்கியிலேயே இது வெளியானது. தொடர்ந்து நான் எழுதிய சில கதைகள் கல்கியிலேயே வெளியாகின அதன் பின் னர் இலங்கைப் பத்திரிகைகளான வீர கேசரி, தினகரன், சுதந்திரன், மற்றும் சஞ்சிகைகள் பல வற்றிலும் சிறு கதைகள் எழுதி வந்திருக்கிறேன். அண்மைக்கால மாக இலக்கியக் கட்டுரைகளையும் எழுதி வருகிறேன். ஒரு முக்கியமான விஷயத் தைக் குறிப்பிடவேண்டும். 1970, 71ம் ஆண்டுகளிலே நமது பகுதி முழுவதிலுமே ஓர் இலக்கிய விழிப்புணர்வு இருந்தது. அந்தக் கட்டத்திலே மட்டக்களப்பில் இருந்து தரமான ஓர் இலக்கிய ஏடாக "மலர்" என்றதொரு சஞ்சிகையை ஆரம் பித்து வெளியிட்டோம். அது பொது வாகவே ஈழமெங்கிலுமுள்ள வாசகர்கள் மத்தியிலே ஒரு நல்ல மதிப்பைப் பெற்றி ருந்தது.

அடுத்ததாகக் கலை இலக்கியங்கள் தொடர்பாக மட்டக்களப்பு கலாசாரப் பேரவை ஆதரவில் இடம் பெற்ற பல நிகழ்ச்சிகளில் - குறிப்பாக திரு. பாக்கிய நாயகம் அவர்கள் செயலாளராக இருந்த காலத்தில் நானும் என்னை அதனோடு சம்பந்தப் படுத்தி பல பங்களிப்புச் செய் திருக்கிறேன். மற்றும் எனது நாடகங்கள் பல வானொலியில் ஒலிபரப்பாகி இருக்கின் றன. பொதுவாக இலக்கிய முயற்சிகள் என்றால் ஒரு தனிப்பிரியத்துடன் ஈடுபடு வது என்னுடைய இயல்பு.

(இவ்வாறு தமது இலக்கியப் பணிகள்பற்றி விரிவாகவே அறிமுகப்படுத்தினார். இந்தியச் சஞ்சிகைகளில் தமது படைப்புகள் வெளிவந் தால் அதைப் பெரிய கௌரவமாக மதித்துப் பெருமிதம் அடையும் பலர் இருக்கும் இக் காலத்தில் முதல் படைப்பே தமிழ் நாட்டு சஞ்சிகை ஒன்றில் வெளிவந்தது எனில் அன்பு மணி அவர்கள் அதிர்ஷ்டசாலிதானே?)

● சிறந்த சிறுகதை எழுத்தாளர் என்று குறிக்கப்பட்ட தாங்கள் அண்மைக் காலத் தில் அதிகமாகக் கட்டுரைகளைத்தானே எழுதிக் கொண்டிருக்கிறீர்கள்?

○ ஆரம்பத்தில் சிறுகதைகளில் ஒரு கவர்ச்சி இருந்த காரணத்தினால் அதிலே முடிந்த அளவு என்னுடைய அனுபவத்தை, அல்லது கண்டு கேட்டு அனுபவித்ததை மக்களுக் குச் சொல்ல வேண்டும் என்ற ஒரு முனைப் பினால் சிறுகதைகளைத் தொடர்ந்து தீவிர மாக எழுதி வந்தேன். பின்னர் எனக் கொரு எண்ணம் உண்டானது. ஏனைய மாவட்டங்களில் நடப்பது போல் நம் முடைய மாவட்டத்து நிகழ்ச்சிகள் பற்றி யும் வெளி உலகுக்குத் தெரியக் கூடிய வகையில் ஏதாவது ஒரு வகைப் பதிவு இருந்தால் தான் எதிர்காலச் சந்ததியின ருக்கு அது பயன்படும் என்ற நோக்கத் தில், மட்டக்களப்புப் பகுதியிலே மறைந்து கிடக்கின்றபலவிஷயங்களைஉதாரணமாகக்

பிறரைச் சரியாகப் புரிந்து கொண்டு அவர்களின் தவறுகளை யும் பொறுத்துக் கொண்டு அன்பு செலுத்துங்கள்! எவர் மீதும் வெறுப்புக் கொள்ள வேண்டாம். அன்பு ஒன்றே, அது மட்டுமே வேண்டும். —ஜான் ரஸ்கின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from:*

# The Finance Co. Ltd.

**No. ~~19~~, Central Road, Batticaloa.**

65

Phone: 065 - 2896

கிராமியக் கலைகள், எழுத்தாளர்கள், அறிஞர்கள், புலவர்கள், நாடக முயற்சிகள், இன்னேரன்ன விஷயங்களை வெளிப்படுத்தும் விதத்தில் அண்மைக் காலமாக இலக்கியக் கட்டுரைகளை எழுதி வருகின்றேன். மட்டக்கப்பளபிலே மறைந்து கிடக்கின்ற பல சங்கதிகள் பழமை வாய்ந்தவை. அவை எதிர்கால சந்ததியினருக்கு ஒரு பதிவாக அமைய வேண்டும். இந்த நோக்கத்தில் தான் இப்போது கட்டுரைகளை எழுதிக்கொண்டு வருகிறேன்.

● இந்தக்கட்டுரை பற்றி இன்னுமொரு கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். பொதுவாக கட்டுரை எழுதுபவர்கள் சிறந்த சிறுகதை எழுத்தாளர்களாக இருப்பதில்லை. சிறுகதைஎழுதுபவர்கள் நல்ல கட்டுரையாளர்களாக இருப்பதில்லை. இரண்டு துறையிலுமே ஈடுபட்டுள்ள தாங்கள் இவை இரண்டிற்கும் உள்ள தனித்தன்மைகள் பற்றிச் சொல்ல முடியுமா?

○ சிறுகதை எழுதும் போது அது ஒரு கலைப் படைப்பு. ஆகவே சிறுகதைக்கு உரிய இலட்சணங்கள் என்ன என்ற உணர்வோடு எழுதும்போது இயல்பாகவே அது நல்ல சிறுகதையாகவே அமைந்து விடும். இலக்கிய விஷயங்கள் இதயத்தோடு சம்மந்தப்பட்டவை. உணர்வோடு சம்பந்தப்பட்டவை அந்தவகையில் கதைகள் அமையும் போது அவை சிறப்பாக அமைகின்றன. கட்டுரைகள் எழுதும் போது அவை முற்று முழுதாக வேறொரு பின்னணி. அதிலே நாங்கள் தகவல்களை அறிவதும், அதைப் பகுப்பாய்வு செய்வதும், அந்தத் தகவல்களினூடே புதைந்து கிடக்கும் உண்மைகளைக் கண்டறிந்து அவை. பற்றிய விமர்சனங்களை வெளியிடுவதுமாகத்தான் கட்டுரைகள் அமைய வேண்டும். ஆகவே இரண்டும் வெவ்வேறு துறைகள், இரண்டுக்கும் தனித்தனியாக நமது மனதை ஆக்கிக் கொள்ள வேண்டும்.

(தெளிவான அவரது பதிலைக் கேட்ட நாம் சிறுகதை பற்றி மேலும் ஒரு வினுவை விடுத்தோம். இன்று பலரும் சிறுகதை எழுதுகிருர்கள். தரம் எப்படியோ, ஆர்வம் வளர்ந்திருக்கிறது. அதுபோல் சிறுகதைகளைப் படிப்போர் தொகையும் வளர்ந்திருக்கிறது. பத்திரிகைத் துறையில் ஈடுபட்டிருப்பதால் இதை எம்மால் உறுதியாகச் சொல்ல முடிகிறது. ஆகவே இவர்கள் பயன் பெற ஒரு நல்ல சிறுகதைக்கு இலக்கணம் என்னவென்று வினவினேம்.)

○ ஒரு நல்ல சிறுகதை என்பது ஓர் எழுத்தாளனுடைய இதயத்திலே எதிரொலிக்கின்ற ஒரு சிறு சம்பவமாக அமையும் அந்தச் சம்பவத்திஞல் பாதிப்படைந்த எழுத்தாளன் தான் அனுபவித்த அதே உணர்வை மற்றவர்களிடம் ஏற்படுத்தக் கூடிய அளவிலே அந்தச் சிறு சம்பவத்தை மட்டுமே பொதிந்து - ஒரு விலைமதிப்பில்லாத முத்து எப்படி ஒரு தங்க ஆபரணத்தில் பொதிந்திருக்குமோ அப்படிகலைப் படைப்பாக்கிச் சமர்ப்பிக்க வேண்டும் அந்தக் கதையிலே கலைப்படைப்பின் கலை அம்சங்கள் இருக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக அந்தக் கதையின் மூலம் மக்களுக்குச் சொல்லப்படுகின்ற செய்தி நுட்பமாகப் பொதிந்திருக்க வேண்டும் அது ஒரு நல்ல சிறுகதையாக அமையும் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

(இவ்வாறு அவர் சிறுகதைக்கு விளக்கம் அளித்த போது அதை இன்னும் ஆழப்படுத்த எண்ணினேம்)

> தானதருமம் செய்பவர்களிடம் மட்டுமல்ல, விடாமுயற்சியுடன் வெற்றியடைய வேணடும் என்று துடிப்புடன் செயல்பட்டுக் கொண்டிருப்பவர்களின் இதயத்திலும் இறைவன் இருக்கிருர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● ஒரு படைப்பாளியின் - படைப்பின் வெற்றி எதிலே தங்கி உள்ளது? நீங்கள் கூறியது போன்ற ஒரு நல்ல படைப்பை வாசகர்கள் ஏற்றுக் கொண்டு வாசிப்பதிலா? அல்லது விமர்சனங்கள் கொடுக்கும் பாராட்டுதல்களிலா? பல வேளைகளில் இவை இரண்டுமே முரண்படுகிறதே! ஜனரஞ்சக எழுத்தாளர்கள் என்று சொல்லப்படுகிறவர்கள் எழுதும் கதைகளைப் பெருவாரியான மக்கள் வாங்கி வாசிக்கிறார்கள், ஆனால் விமர்சகர்கள் அவற்றை 'மலிவுக் கதைகள்' என்று ஒதுக்கி விடுகிறார்கள். விமர்சகர்கள் புகழ்ந்து பாராட்டும் கதைகளை 'புரியாத கதைகள்' என்று சாதாரண வாசகர்கள் ஒதுக்கி விடுகிறார்கள். இந்த நிலையில் ஒரு படைப்பாளியின் வெற்றி எதிலே தங்கி உள்ளது?

○ கதைகள் எவ்வாறு எழுதப்பட்டாலும் ஒரு சிறந்த சிறுகதை என்பது படிக்கின்ற வாசகனை முதலில் ஈர்க்க வேண்டும். எழுத்தாளன் சொல்லுகின்ற கருத்து அவன் மனதிலே மறைமுகமாய்ப் பதிய வேண்டும். இவை இரண்டும் இடம் பெறுவிட்டால் அந்தக் கதை எழுதியதன் நோக்கம் இல்லாமற் போய் விடுகிறது.

ஒரு படைப்பு எந்த வடிவில் அமைந்திருந்தாலும் - அதற்கு வரைவிலக்கணங்கள் இருக்கலாம், அது வேறு விடயம் - ஒரு புதுமையான கருத்து இருக்க வேண்டும். அதைச் சொல்லுகின்ற முறையில் ஒரு புதுமை இருக்க வேண்டும். சொல்லுகின்ற பாணியிலே ஒரு விறு விறுப்புத் தன்மை இருந்தால் தான் வாசகர்கள் தொடர்ந்து படிப்பார்கள். இந்த மூன்று அம்சங்களும் இணைய வேண்டும். இவை தவிர விமர்சகர்கள் சிலாகிக்கிறார்கள் என்பதற்காக தன்னுடைய நடையை மறந்து அல்லது இன்னொரு பிரபல எழுத்தாளருடைய நடையைப் பின்பற்றி எழுதும் பொழுது அது செயற்கைப் படைப்பாக அமையும். எப்பொழுதுமே ரசனை என்பது - அது விமர்சகர்களாக இருந்தால் கூட அவர்களுடைய அபிப்பிராயமாக மாறப்பார்க்கிறது. உதாரணமாக ஒன்று கூறலாம்.

## பேனா பிறந்தது எப்படி?

பேனா என்பதை ஆங்கிலத்தில் PEN என்கிறோம். இச் சொல் எப்படிப் பிறந்தது? முதன் முதலில் பேனா கண்டு பிடிப்பதற்கு முன் பெண் அன்னத்தின் சிறகின் அடிப்பாகத்தை மையில் தோய்த்து எழுதி வந்தார்கள். இந்த அன்னத்துக்குப் பெண் என்று பெயர். பின்பு இதுவே எழுதுகோலின் பெயராகி விட்டது.

'மொடன் ஆர்ட்' என்று கூறப்படுகின்ற கலையை பலர் இரசிக்கிறார்கள். அதை இரசிக்கிறவர்கள் தொகை மிகக் குறைவு. தொகை குறைவாக இருந்தாலும் அவர்களது கொள்கைப்படி அது உயர்ந்த இரசனை. உயர்ந்த படைப்பு என்பது எண்ணம். சாதாரண இரசிகர்கள் புரிந்து கொள்ள முடியாத, கைக்கு அடக்கமான சிறு குழுவினர் மட்டுமே ரசிக்கும் ஒரு விடயத்தை அது எவ்வளவு உயர்ந்ததாக இருந்தாலும் பொது மக்களுக்குப் பயன் தரக் கூடிய படைப்பென்று கூற முடியாது. அது போலவே கவிதை, சிறுகதை, நாவல்கள் முதலிய வற்றிலும் உயர்ந்த இரசனை என்று கூறிக் கொண்டு புரியாத மாதிரி எழுதுவதை விட சராசரி வாசகனைச் சென்றடையக் கூடிய வகையில் சில கருத்துக்களைக் கலையம்சத்துடன் படைப்பதுதான் பொது மக்களுக்குப் பயன் தரக் கூடியது என்று எண்ணுகிறேன்.

(இடையில் குறுக்கிட்ட நாம் சராசரி வாசகன் எந்த அளவுக்கு ஏற்றுக் கொள்ளுகிறானோ அதுதான் அந்தப் படைப்பின் வெற்றி என்று சொல்கிறீர்களா? என்று வினவினோம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

○ இல்லையில்லை! எந்த அளவுக்கு ஏற்றுக் கொள்கிறார்கள் என்பதல்ல, நாங்கள் எழுதுவதைச் சராசரி வாசகன் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையிலே அதன் அமைப்பு இருக்க, வேண்டும். ஆனல் நாங்கள் சொல்லுகின்ற விஷயம் மானுடத்தின் விழுமியங்களை வற்புறுத்துவதாக, மானிட சமுதாயத்தை மேம்படுத்துவதாக அமைய வேண்டும். இவை இரண்டையும் வெற்றிகரமாகச் செய்வதில் தான் எழுத்தாளனுடைய வெற்றி தங்கி உள்ளது. அதாவது வாசகன் எதை விரும்ப வேண்டுமோ அதை அவன் விரும்புகின்ற மாதிரிச் சொல்வதில்தான் வெற்றி தங்கியுள்ளது.

(இது ஒரு சிந்திக்கத்தக்க ஆழமான கருத்து என்று பாராட்டிக் கொண்டு தொடர்ந்தோம்.)

● மட்டக்களப்புப் பிரதேச இலக்கிய முயற்சிகளில் இரண்டறக் கலந்துள்ள தாங்கள் ஒரு காலவரையறையை வைத்து மதிப்பீடு ஒன்றைத் தருவீர்களா?

○ இலக்கிய முயற்சிகள் பற்றி மட்டும் கூறுவதாயின் அது மிகக் குறைவாகத் தான் அமையும். நாவல் துறையை மட்டும் எடுத்துக் கொண்டால் முதலாவது நாவல் 'அரங்கநாயகி' என்பது. இது 1935ம் ஆண்டு வெளிவந்திருக்கிறது. இது ஏரம்பமூர்த்தி என்பவர் எழுதியது. அதன் பின்னர் பல வருடங்களாக நாவல் எழுதப்படவில்லை. கடந்த இரண்டொரு ஆண்டுகளில் தான் இரண்டு மூன்று நாவல்கள் வெளிவந்திருக்கின்றன. ஆகவே நாவல் துறை மிகவும் நலிந்தே உள்ளது. செய்யுள் நூல்களை எடுத்துக் கொண்டால் அவை பெரும்பாலும் பண்டிதர், வித்துவான், புலவர்கள் எழுதியவை. அவைகளை ஆக்க இலக்கியங்கள் என்று சொல்ல முடியாமல் ஓரளவு சமயச்சார்பு உடையதாய் உள்ளன. அவ்வகையிலும் நாம் இன்று பார்ப்பது போன்ற கவிதைத் தொகுதிகள் மிகக் குறைவாகத்தான் வெளிவந்திருக்கின்றன. அதுபோலவே நாடகங்களும் நிறைய அரங்கேற்றப் பட்டிருந்தாலும் கூட நூல் வடிவில் வெளிவந்தவை மிகக் குறைவு. சுருக்கமாகச் சொல்லப் போனல் இங்கே மேற்கொள்ளப் படுகின்ற முயற்சிகள் அதிகம். ஆனல் பதிவாகின்றவை மிகவும் சொற்பம். இதனல்தான் மட்டக்களப்புப் பிரதேசத்தில் நடைபெறும் சகல இலக்கிய முயற்சிகள் பற்றியும் வெளி உலகம் அறிந்துகொள்ள முடிவதில்லை. இதை நாங்கள் நிவர்த்தி செய்வதானல் வெளிவந்த படைப்புக்கள் கூடிய அளவு நூலுருவில் வெளிவர வேண்டும். அது வெளிமாவட்ட வாசகர்களை, விமர்சகர்களைச் சென்றடைய வேண்டும். அதன் பின்பு தான் மட்டக்களப்புப் பிரதேச இலக்கிய முயற்சிகள் பற்றிய ஒரு முறையான மதிப்பீடு வரும் என்று எண்ணுகிறேன். பத்திரிகையிலே வருகின்ற படைப்புக்களைக் கொண்டு நமது மத்தியிலே சிறந்த எழுத்தாளர்கள், சிறந்த கவிஞர்கள் நாவலாசிரியர்கள் கூட இருக்கிறார்கள் என்று சொல்லலாம்.

● 'மலர்' என்ற சஞ்சிகை ஒன்றை வெளியிட்டதாக முன்பு குறிப்பிட்டீர்கள். அந்த அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளுங்களேன்.

○ அது ஒரு நல்ல அனுபவம் என்று தான் சொல்ல வேண்டும். 'மலர்' சஞ்சிகையை நான் ஆரம்பித்த பொழுது ஏற்கனவே நமது பகுதியிலே மட்டுமல்ல ஈழத்தின் பிறபாகங்களிலும் என்னையும் விட பிரபலமானவர்கள், எழுத்துத்

> **உண்மைதான் வாழ்க்கை. நமது வாழ்க்கை சத்தியத்தைச் சேர்த்து நிற்கும் பொழுதுதான் அத்தனை துயரங்களும் தொலைந்து போகின்றன அதற்கு முன்னல் அல்ல.**
>
> **—பிளேட்டோ**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறையிலே தோய்ந்தவர்கள் சஞ்சிகை களை ஆரம்பித்துத் தோல்வி கண்ட நிலை. இருந்த போதும் அப்போது நான் கல்வித் திணைக்களத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தேன். கல்வித் திணைக்கள நண்பர்கள் சிலரையும் சேர்த்துக் கொண்டு எப்போதும் வெளிவராத அளவு இலக்கியத்தரமாகவும், அதே நேரத்தில் சராசரி வாசகனைத் திருப்திப் படுத்தக் கூடிய வகையிலும் அந்தச் சஞ்சிகையை நடத்தி வந்தேன். இது எனது மனதிலே நீண்டகாலமாகவே வேண்டியிருக்கிறது. அந்த 70, 71ம் ஆண்டுகளிலே இப்போதிருப்பதை விட செலவுகள் சுருக்கமாக இருந்தாலும் சஞ்சிகை வெளியிடுவதில் உள்ள கஷ்டங்கள், வாசகர்கள், விநியோகஸ்தர் களுக்கு அனுப்பிப் பணத்தைப் பெறு கின்ற கஷ்டங்கள் அதிகமாக இருந்தன. அது போலவே விளம்பரம் சேர்த்து வருமானத்தைப் பெருக்குவதும் முயற் கொம்பாக இருந்தது. அதனால்தான் தொடர்ந்து அந்த முயற்சி நடைபெற முடியவில்லை. அந்தப் பின்னணியில்

**யாழ்ப்பாணத்திலோ, ஒரு சிங்கள சகோதரர் மத்தியிலோ ஓர் ஏடு வெளிவந்தால் அபிமானம் காரணமாகப் பலர் அதை வாங்குகிறார்கள். பணம் கொடுத்து வாங்கிப் படிக்கிறார்கள். அவ்வாறான நிலை மட்டக்களப்பில் இல்லை என்பது போல் எமக்குப் படுகிறது.**

இருந்து வந்த விடயம். ஒரு நல்ல சஞ்சிகையை வெளியிட்டுப் பார்க்க வேண்டும், வாசகர்களுக்கு கொடுக்க வேண்டும் என்பது. நிறைந்த உழைப்பு, மிகுந்த செலவு, மிகுந்த பிரயாசை. இரண்டு வருடங்கள்தான் அந்தச் சஞ்சிகையை நடாத்த முடிந்தது. பின்னர் ஏனையோரைப் போலவே நானும் கைவிட வேண்டி வந்தது. அதற்கு முக்கிய காரணம் எப்போதுமே நாங்கள் எவ்வளவு சிரமப்பட்டுச் செய்தாலும் வாசகர்கள் தமிழகத்திலிருந்து வரும் கவர்ச்சிகரமான சஞ்சிகைகளுடன் ஒப்பிட்டுத்தான் வாங்குகிறார்கள். விலையாக இருந்தாலும் சரி, தரமாக இருந்தாலும் சரி. அந்த அளவு போட்டி போடுகின்ற அளவுக்கு சிறிய சஞ்சிகை களை நடாத்த முடியாது. உதாரணமாக 'தீபம்' என்ற சஞ்சிகையை திரு. பார்த்தசாரதி அவர்கள் நடாத்தினார்கள். மிகவும் சிறந்த எழுத்தாளர். அவராலேயே நடாத்த முடியாமல் போய் விட்டது. எப்போதுமே இலக்கிய சஞ்சிகைகளுக்கு சிறிய சஞ்சிகைகளுக்கு ஆதரவு குறைவு. மிகவும் கஷ்டப்பட்டுத் தான் நடத்த பார்க்கும் போதுதான் தொண்டன் போன்ற சஞ்சிகைகள் தொடர்ந்து வெளிவருவது எனக்கு மிகுந்த திருப்தியை தருகிறது.

● நல்லது, இதனோடு தொடர்பு கொண்ட இன்னுமொரு வினாவை விடுக்க விரும்புகிறேன். சஞ்சிகைகள், வார ஏடுகள் போன்ற தொடர் வெளியீட்டு முயற்சிகள் கிழக்குப் பகுதியில் எப்போதும் தோல்வி அடைந்து வந்திருப்பதே வரலாறு. அதே வேளை வட பகுதியில் நாளேடுகள், வார ஏடுகள், மாதசஞ்சிகைகள் என்று தொடர்ந்து பல வெளி வந்து கொண்டிருக்கின்றன. இந்தியச் சஞ்சிகைகளின் வருகைக்கு மத்தியிலும் தான் இவைகள் வந்து கொண்டிருக் கின்றன. கிழக்குப் பகுதியில் மட்டும் இது தோல்வி அடைய என்ன காரணம்? இதை மாற்றியமைக்க என்ன செய்யலாம்?

○ முக்கியமான காரணம் படித்தவர்கள் மத்தியிலே இது நமது பகுதியிலிருந்து வருகின்ற சஞ்சிகை என்ற அபிமானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**என்னுடைய படைப்புகளை வெளியிடுவதை விட மற்றவருடைய படைப்புகளை வெளியிட்டு, பாராட்டி அவர்களை வளர்த்து விடுவதிலே எனக்குப் பெரிதும் மனநிறைவு ஏற்படுகிறது.**

இல்லாமலிருப்பது. யாழ்ப்பாணத்திலோ ஒரு சிங்கள சகோதரர் மத்தியிலோ, ஓர் ஏடு வெளிவந்தால் அபிமானம் காரணமாகப் பலர் அதை வாங்குகிறார்கள். பணம் கொடுத்து வாங்கிப் படிக்கிறார்கள். அவ்வாறான நிலை மட்டக்களப்பில் இல்லை என்பது போல் எமக்குப் படுகிறது. ஏனெனில் நாம் ஒரு தினசரியோ, வார சஞ்சிகையோ, மாத சஞ்சிகையோ வெளியிட்டால் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள படித்தவர்கள் - சாதாரணமாக கல்கி, ஆனந்த விகடன் படிக்கின்ற வாசகர்கள், இலக்கியத்துறையில் ஈடுபாடு கொண்டவர்கள் வாங்கினால் மட்டுமே பல ஆயிரம் பிரதிகளை விற்கக் கூடியதாயிருக்கும். நிலைமை என்னவென்றால் இங்கு ஆயிரம் பிரதிகளைப் பிரசுரித்தால் சில நூறு பிரதிகளை கூட விற்க முடிவதில்லை. அந்தச் சில நூறு பிரதிகளைக் கூட நாம் வீட்டு வாயில்களுக்குச் சென்று கெஞ்சித்தான் விற்க வேண்டியிருக்கிறது. அப்படியில்லாமல் வாசகர்கள், படித்தவர்கள் என்று கூறுகின்ற பொழுது சாதாரணமாக ஆசிரியர்கள், உத்தியோகம் பார்க்கின்றவர்கள், இலக்கிய ஈடுபாடு உடையவர்கள் நமது பகுதிகளிலிருந்து வருகின்ற இலக்கிய ஏடுகளைப் பணம் கொடுத்து வாங்க வேண்டும். அது முக்கியம், அடுத்து பத்திரிகைகளை வாங்கி, விற்று ஒழுங்காகப் பணத்தைக் கொடுக்கின்ற விநியோகஸ்தர்கள் இருக்க வேண்டும். ஆக, வாசகர்களின் அபிமானம் வேண்டும். வாசகர் மத்தியில் விநியோகித்துப் பணத்தைஒழுங்காக அனுப்புகின்ற விநியோகஸ்தர்களும் வேண்டும். இவை இரண்டுமிருந்தால் பத்திரிகைகளை ஓரளவு விற்கக் கூடியதாக இருக்கும்.

● சரி நீங்கள் சொல்வது உண்மைதான். ஆனால் நாம் நீண்டகாலமாக இதைத்தான் சொல்லி வருகிறோம். ஆனால் எங்கள் வாசகர்களின் வாசிப்பு உணர்வை, எங்கள் வெளியீடுகளை நாம் பணம் கொடுத்து வாங்கிப் படிக்க வேண்டும் என்ற உணர்வை ஊட்டுவதற்கு நாம் எத்தகைய ஆக்க முயற்சிகளை, கூட்டு முயற்சிகளை மேற் கொள்ளலாம்?

○ இது ஒரு கஷ்டமான கேள்வி. வாசகர்களை மறைமுகமாக ஊக்குவிக்க வேண்டுமென்றுதான் சஞ்சிகைகளிலே போட்டி வைப்பார்கள், உற்சாகத்தைத் தூண்டக் கூடிய வகையிலே பரிசு கொடுப்பார்கள். இவை எல்லாம் செய்தும் கூட நமது மாவட்டத்திலே அவை பயன் தரவில்லை. இதற்கு மேலாக என்ன செய்யலாம் என்று எனக்குக் கூடப் புரியவில்லை. ஆகையினால் திட்டவட்டமாக என்னால் ஒன்றும் கூற முடியவில்லை. தொடர்ந்து சஞ்சிகைகளை வெளியிட வேண்டியது. பின்னர் அது வாசகர் மத்தியிலே பழகி வாசகர் தாமாகவே வாங்கும் நிலை ஏற்பட வேண்டும். உதாரணமாக்க் கூறுவதாயின் யாழ்ப்பாணத்திலே மல்லிகையைக் கூறலாம். தொடர்ந்து ஒரு சஞ்சிகை வரும்போது அதற்கு வாசகர்கள் பழக்கப்பட்டு விடுவார்கள். தொடர்ந்து விற்பனை அதிகரிக்குமென்று நம்புகிறேன்.

(வாசகர்கள் பழகப் பல ஆண்டுகள் ஆகுமே! அது வரையில் ஏற்படும் பாரிய செலவை யார் தலையில் சுமப்பதாம் என்று எண்ணிக் கொண்டோம்)

● மட்டக்களப்பு மாவட்டத்திலே அரசாங்க ஆதரவோடு இயங்கிவரும் கலாசாரப் பேரவை என்று ஒன்று இருக்கிறதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படி ஒன்று இருப்பதே பலருக்குத் தெரியாத விஷயம். அதனோடு தொடர்பும் பொறுப்பும் உள்ளவர் என்ற வகையில் அதன் இயக்கம் பற்றிச் சொல்லுங்களேன்.

○ கலாசாரப் பேரவை ஒரு காலத்தில், அதாவது திரு. தேவநேசன் நேசையா போன்றவர்கள் அரசாங்க அதிபராக இருந்த காலத்தில் நிறைந்த பங்களிப்பைச் செய்தது. அதற்குக் காரணம் அந்தக் காலத்து நிலைமை ஓரளவு சுமுகமாக இருந்ததென்று கூறுவார்கள். இப்பொழுது கலாசாரப் பேரவையை நிர்வகிக்கின்ற பொறுப்பு எனக்கு இருந்தும் கூட நாங்கள் திட்டமிடுகின்ற படி பல வேலைகள் செய்ய முடிவதில்லை. தை மாதத்தில் நிறையத் திட்டங்களைத் தயாரித்தோம். இலக்கிய நூல்களை வெளியிடுவது, கட்டுரைகளை சேகரிப்பது, நாடக ஆசிரியர்களுடைய விபரங்களைச் சேகரித்து வெளியிடுவது போன்ற பல முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் எங்களுக்கு மத்திய அரசால் கிடைத்து வந்த நிதி மிகவும் குறைவு. பொது மக்கள் மத்தியில் நிதியைத் திரட்டலாமென்றால் அதற்குரிய சூழ்நிலை இருக்கவில்லை. ஆக, நிறையத் திட்டங்கள், எண்ணங்கள் இருந்தாலும் அதைச் செயற்படுத்தக் கூடிய வாய்ப்பு இல்லாமலிருக்கிறது. இருந்தாலும் அண்மைக்காலமாக ஒரு நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. நிதி சிறிது கூட கிடைக்கும் போலிருக்கின்ற காரணத்தினால் சில திட்டங்களைக் கொண்டிருக்கிறோம். நிலைமையைப் பார்த்துத்தான் செய்யமுடியும். மாதாந்தம் கலைநிகழ்ச்சிகள் நடத்துவது, கருத்தரங்குகள் நடாத்துவது, ஒவ்வொரு உதவி அரசாங்க பிரிவுகளிலும் கலாசாரப் போட்டிகள் நடத்தி அதிலே தெரிவாகின்ற கலை நிகழ்ச்சிகளை மட்டக்களப்பிலே நடத்துவது. இப்படி முன்னரெல்லாம் நடை பெற்றது. இவைகளை அடுத்த ஆண்டிலாவது செய்ய வேண்டும் என்று எண்ணியிருக்கிறோம். இது போன்று முன்னரெல்லாம் கலாசாரப் பேரவை நடாத்தியிருந்தும் நீண்ட இடைவெளிகள் வந்த காரணத்தால் மறந்துவிட்டோம். இப்போதுள்ள சூழ்நிலையில் கலை நிகழ்ச்சிகள் தயாரிப்பதற்கும், அவைகளில் பங்கு கொள்வதற்கும் பலருக்கும் உற்சாகமில்லை. அதனால் நாமும் போட்டிகளை நடத்தி தரமான படைப்புகளைப் பெற முடிவதில்லை. இருந்தாலும் இந்தச் சூழ்நிலையிலும் முடிந்ததைச் செய்ய வேண்டும் என்ற எண்ணமிருக்கிறது.

(அவரது எண்ணங்கள் செயலாக வேண்டும் என்று வாழ்த்திக் கொண்டு, இலக்கிய வாழ்வில் பெற்ற பரிசுகள், விருதுகள், பாராட்டுக்கள் என்று நெஞ்சில் ஏதும் நிலைத்திருக்கிறதா என்று கேட்டோம்)

○ என்னுடைய முயற்சிகளுக்கு கிடைக்கின்ற சன்மானம் என்னுடைய ஆத்மதிருப்தி ஒன்றுதான். அதற்கு மேலாகச் சொல்வதானால் 1962ம் ஆண்டிலே நான் எழுதிய 'திரை கடல் தீபம்' என்ற நாடகத்திற்கு இலங்கைக் கலைக் கழகத்தின் முதலாவது பரிசு கிடைத்தது. அது ஒன்றுதான் பரிசென்று கூறக் கூடியது. அண்மையில் 'ஒரு தந்தையின் கதை' என்ற எனது நாவல் வெளிவந்தது அதற்கு வாசகர் மத்தியில் நல்ல வரவேற்பு இருந்தது. இதுவும் மனதுக்கு நிறைவைத்தரக் கூடிய ஒரு நிகழ்ச்சியாக இருந்தது. பெரும்பாலும் என்னுடைய படைப்புகளை வெளியிடுவதை விட மற்றவர்களுடைய படைப்புகளை வெளியிட்டு, பாராட்டி, அவர்களை வளர்த்து விடுவதிலே எனக்குப் பெரிதும் மனநிறைவு ஏற்படுகிறது.

(அவருடைய இந்த வார்த்தைகளால் நெகிழ்ந்து போன நாம் மனம் திறந்து சொன்

**நான் எழுதிய முதல் கதை 'கிராம போன் காதல்' என்பது இது கல்கியிலே வெளியானது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னேம் உங்கள் உற்சாகப் படுத்துதலால், பல இளம் எழுத்தாளர்கள் இங்கு உருவாகி இருக்கிறார்கள். மறைந்திருந்த பலர் வெளிக் கொணரப்பட்டிருக்கிறார்கள். இது உங்களுக்கு மிகவும் ஆத்ம திருப்தியைத் தருமல்லவா என்று கூறிய பொழுது ''உண்மை, உண்மை'' என்று ஏற்றுக் கொண்டார்).

● இறுதியாகத் 'தொண்டன்' வாசகர்களுக்கு - இளைய எழுத்தாளர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

○ தொண்டன் சஞ்சிகை நீண்டகாலமாகத் தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டிருக்கிறது. நான் அதனுடைய நிரந்தர வாசகன், தொண்டன் இலக்கியத் துறையில் பல பகுதிகளிலும் தன்னுடைய கரங்களைப் பரப்பி வருகிறது. தொண்டன் வாசகர்கள் நிச்சயமாகத் தரமான இலக்கிய ரசனை உடையவர்களாக இருப்பார்கள் என்பது எண்ணம். தரமான இலக்கியப் படைப்புகள் அவர்களைச் சென்றடைய மேலும் தொண்டன் பணியாற்ற வேண்டும் என்பது எனது விருப்பம்.

இளைய தலைமுறையினர் வாழ்க்கையின் விழுமியங்களை நேசிக்க வேண்டும். அதை நேசிப்பதற்கு இலக்கியம் அவர்களுக்கு ஒரு பாலமாக அமையும். இலக்கியத்தினுடாக அவர்கள் இந்த நல்ல பண்புகளைப் பெறவும் வாழ்க்கையில் நல்ல வழிகளைக் கடைப்பிடிக்கவும் வாய்ப்பு ஏற்படும். அந்த வகையில் தொண்டன் வாசகர்கள் தொடர்ந்து தொண்டனைப்படிப்பதன் மூலம் தங்கள் வாழ்க்கையை நெறிப்படுத்த முடியும் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

(இலக்கிய உலகில் சந்திக்க அரிதான ஒரு நல்ல மனிதரை, ஓர் இலக்கியவாதியை சந்தித்த நிறைவோடு, வணக்கம், கூறி விடை பெற்றோம்.)

பேட்டித் தொகுப்பு:



மலர்வேந்தன்.

> சுதந்திரமான மனிதன் என்று யாரைக் குறிப்பிடுகிறோம்? தன்னால் முடிந்தவரை கடமைகளைச் சீராகச் செய்து முடிப்பவனையும், மனச்சாட்சிக்கு மதிப்பளித்துச் செயல் படுபவனையும் தான் சுதந்திரமான மனிதன் என்கிறோம்.
>
> —ரூசோ

**பட்டதாரிக் கவிஞர்கள்**


புகழ் பெற்ற கவிஞர்கள் பெரும்பாலும் கல்லூரிவரை சென்றிருக்க மாட்டார்கள். இந்த வகையில் மாறுதலாக கவிஞர் மில்டனும், கவிஞர் வேர்ட்ஸ் வொர்த்தும் கல்லூரிவரை சென்று பட்டம் பெற்றுள்ளனர். மில்டன் ஓர் எம். ஏ. பட்டதாரி. வேர்ட்ஸ் வொர்த் ஒரு பி. ஏ. பட்டதாரி. எந்த ஒரு புத்தகத்திலும் பெயருடன் தங்கள் பட்டங்களை இவர்கள் போட்டுக் கொண்டதில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கிறிஸ்மஸ் துணுக்! துணுக்!

—கலைமணி—



✱ அட! என்னங்க! எல்லாரும் கிறிஸ்மஸ்ன்னு வீட்டுக்கு பெயின்ற் அடிப்பாங்க, நீங்க போயி மாட்டுக் குடிலுக்கு பெயின்ற் அடிக்கிறீங்க!

● இந்தா பாருப்பா! நான் ஒரு வித்தியாசமான ஆளு. அடுத்தவங்க மாதிரி நான் செய்வேனு? யேசு எங்க பிறந்தாரு? மாட்டுக் குடில்லதானே! அப்போ அதுக்கு பெயின்ற் அடிச்சி, அலங்காரம் பண்றதுதானே முறை...



✱ என்ன கண்மணி அக்கா! எங்க போறீங்க...... கோயிலுக்கா?

● அட நீங்க ஒண்ணு, சீனி விலை ஏறிப் போச்சுதில்ல. நம்ம பாக்கியம் டீச்சர் வீட்டுல சீனி சேர்க்காமலே எப்படி 'கேக்' செய்றதுன்னு கிளாஸ் நடத்துறுங்களாம், அதான் போய் பார்த்துட்டு வரலாமுன்னு போறேன். வாறது கிறிஸ்மஸில்ல...



**கடைக்காரன் சிறுவனிடம்:** என்னடா தம்பி! என்ன வேணும்.

**சிறுவன்:** பட்டாசு வேணுங்க.

**கடைக்காரன்:** சிங்கம் மார்க் பட்டாசு வேணுமா அனுமான் மார்க் பட்டாசு வேணுமா?

**சிறுவன்:** அதெல்லாம் ஒண்ணும் வேணுங்க, எஸ். எல். ஆர். பட்டாசு ரெண்டு தாங்க. ஏ. கே. 47 பட்டாசு மூணு தாங்க. இருந்தா எல். எம். ஜி. பட்டாசுலயும் ஒண்ணு தாங்களேன்.

**கடைக்காரன்;** ஆ : ?



**மனைவி:** எப்பிடித்தான் சொன்னுலும் நீங்க கேக்கவே மாட்டீங்க! இன்னைக்கு 24ம் திகதி, பாலன் பொறக்கப் போருரு கோயிலுக்குப் போகணும். இன்னைக்கு மட்டுமாச்சும் குடிக்காதீங்க எண்டு சொன்னேன்ல.

**கணவன் போதையுடன்:** என்ன செய்வேன் அன்னம்மா... கடவுளோட மகன் பொறக்க சத்திரக்காரன் கூட இடம் இல்லேன்னு சொல்லிப்புட்டானே! மாட்டுக் குடில்லேல்ல பொறந்தாரு. அந்த சோகத்தத் தாங்க முடியல்ல அன்னம்மா... அதை மறக்கத்தான் குடிச்சேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரமான 22 கரட் தங்க நகைகளை
குறித்த தவணையில், கைதேர்ந்த
வேலைப்பாடுகளுடன் நவநாகரிக
டிசைன்களில் பெற்றுக் கொள்ள
இன்றே நாடுங்கள்

**லலிதா நகை மாளிகை**
இல 17/1, முனை வீதி,
மட்டக்களப்பு.
தொலைபேசி இல:- 065 - 2947

மங்கையரின் கனவுலகம்
குழந்தைகளின் மகிழ்வுலகம்

**பவுலிஸ்**
58, பிரதான வீதி,
மட்டக்களப்பு.
தொலைபேசி:- 065 - 2215

தரமான தங்க நகைளுக்கு

**சங்கீதா ஜுவலரி**
17/1 முனை வீதி, மட்டக்களப்பு.
தொலைபேசி:- 065 - 2196
ஆடர் நகைகள் குறித்த தவணையில்
தரமான 22 கரட் தங்கத்தில்
செய்து கொடுக்கப்படும்

யாதவன்ஸ்
உங்களுக்கு வேண்டிய
- சுவைமிக்க குளிர்பானம்
- ஐஸ்கிறீம் வகைகளும்
- வர்ண மீன்களும் எங்களிடம் விற்பனைக்குண்டு அத்துடன்
- படங்கள் அழகாகப் பிறேம் போட்டுத்தரப்படும்.

நீங்கள் பார்த்து ரசிக்க
புலி, முதலைகள், குரங்குகள், பறவை இனங்கள் வாழுகின்ற சிறிய விலங்ககம் அருகிலுண்டு.

**யாதவன்ஸ்**
20, மத்திய வீதி, மட்டக்களப்பு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனைக்கு ஒரு சிறந்த மறைவாக்கு

# பிறந்ததினக் கொண்டாட்டங்கள்

● ரீ. பர்க்கியநாயகம்

பிறந்த நாள்.... அப்பப்பா, எத்தனை மகிழ்ச்சிகரமான தினம் அது. குச்சுக்குடிலில் வாழும் பிச்சைக்காரராகிலும் சரி, பல்வேறு சொகுசுகளுடனும் பகட்டான பங்களாக்களில் வாழும் பணக்காரவர்க்கமாகிலும் சரி, அத்தனைபேரும் உற்சாகத்துடனும், உரிமையுடனும் கொண்டாடும் நன்னாள் அப்பொன்னாள் - பிறந்தநாள். ஆம், ஒவ்வொருவரது வாழ்விலும் அலுப்புச்சலிப்பில்லாமல் ஆனந்தத்துடன் ஆண்டுதோறும் நினைவு கூரப்படும் சிறந்த நாள் அதுவாகும்.

பிறந்ததினக் கொண்டாட்டம் என்னும் போதே சிறுவர் சிறுமியரது உள்ளமெல்லாம் விபரிக்கமுடியாதவோர் கிளுகிளுப்பு ஏற்பட ஆரம்பித்துவிடுவது இயல்பே. தம் வாழ்நாளிலே பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்ட அத்தினத்தை, பிறப்புப் பத்திரத்தில் மாத்திரமன்றி வாழ்க்கையின் சிறப்புக்கள் அத்தனையிலும் நன்கு நினைவுபடுத்தப்பட வேண்டிய அத்தினத்தை, பல நாட்களாக ஆவலுடன் எதிர்நோக்கிக் காத்துக் கிடந்து கலண்டரைப் பார்த்துப் பார்த்தே பரவசமடைவோர் பலர். புத்தாடை பளபளக்க, உற்றாரும், நண்பர்களும் சுற்றி நின்று வாழ்த்துப்பாடி வரவேற்க, 'ஹப்பி பேர்த்டே ரு யூ' கானம் காதுகளில் ஒலிக்க, கண்ணைக்கவரும் வண்ணக் கேக்கை கைகளினால் வெட்டி மகிழ்வது, நிச்சயமாக ஆண்டுதோறும் ஆவலுடன் காத்திருக்கும் மறக்கமுடியாதவோர் நிகழ்ச்சியாகும்.

உலகெங்குமுள்ள கோடிக்கணக்கான கிறிஸ்தவ மக்கள் இரட்சகர் இயேசுகிறிஸ்துவின் பிறந்ததினத்தை ஆண்டுதோறும் டிசெம்பர் மாதம் 25ம் திகதி கோலாகலமாகக் கொண்டாடி வருகின்றனர். இறைவன் மனுக்குலத்திற்காக மனமிரங்கிப் பரிதபித்து, பாவக்கேட்டிலிருந்து அவர்களை விடுவித்து இரட்சிப்பளிக்க, மானிடனாய் மனுக்கோலம் கொண்டு உலகில் உற்பவித்த மகத்தான தினம் இதுவாகும்.




சிலர் கேட்கக்கூடும், அனைத்து வல்லமை பொருந்திய, அண்டசராசரங்களையும் படைத்துக் கட்டியாளும் அதிகாரம் மிக்க ஆண்டவன், ஓர் அங்க அசைவினாலே அனைத்தையும், பாவிகள் அனைவரையும் பஸ்பமாக்கி விடலாமே; இதற்கு அவர் கேவலம் ஒரு மனிதனாக அவதரிக்கவேண்டிய அவசியம் இல்லையே என்று.

ஆம், உண்மைதான். கடவுள் என்னும் போது அவர் கண்டிப்பானவர். உலகத்து மக்கள் அவரின் தண்டனைக்குத் தப்பவே முடியாதென்னும் எண்ணம் மனிதர்களிடையே காலம் காலமாக தலைமுறை தலைமுறையாக இருந்தே வருகின்றது. ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நம்மையெல்லாம் படைத்த அந்த வல்லவருக்கு இளகிய மனம் உண்டென்பதையும், அவர் தம் படைப்புக்கள் அத்தனையிலும் அன்பு கொண்டு எம் பரம தந்தையாக விளங்கிய எம்மைப் பாதுகாத்து பரிபாலிக்கவே என்றும் ஆவலாயிருக்கிறாரென்பதையும் நம்மில் அனேகர் அறிந்து கொள்வதில்லை. நம்பிக்கைக்கு நாட்டம் கொள்வதுமில்லை! அந்த அளவிடக்கூடாத அன்பின் காரணமாகவே ஆண்டவன் அவனியில் வந்து மனுக்கோலத்தில் அவதரிக்க வேண்டிய அவசியம் நேரிட்டது.

ஒருதடவை வயல்வரம்பினூடாக நடந்து சென்ற ஒருவர் அந்த வரம்புக்கட்டிலே ஓர் கறையான்புற்றைக் கவனித்தார், கறையான் பூச்சிகள் சுறுசுறுப்புக்குப் பேர் பெற்றவையாகும். அவை அங்கு ஒரு வினாடி கூட ஓய்வு ஒழிச்சலின்றி உற்சாகமாக ஊர்ந்து சென்றவண்ணம் தத்தமது கடமைகளில் ஈடுபட்டவண்ணமிருந்தன. அதேவேளை சற்றுத் தொலைவில் ஓர் உழவுஇயந்திரம் உறுமியவாறு அவ்வயற்பிரதேசம் அனைத்தையும் விதைப்பிற்காக சமப்படுத்திக் கொண்டிருந்தது. இன்னும் சற்று நேரத்தில் வயல் வரம்புக்கட்டும் அதனோடு கூடிய கறையான் புற்றும் தரைமட்டமாக்கப்பட்டு விடும் உண்மையை அந்த மனிதர் உணர்ந்து அந்த அப்பாவி கறையான் பூச்சிகளுக்காக அனுதாபப்பட ஆரம்பித்தார்.

"ஐயோ இன்னும் சில நிமிடங்களில் இத்தனை கறையான்களும் வீணாய் அழிந்து விடுமே; இந்த ஆபத்தை எடுத்துச் சொல்ல யாருமில்லையா?" எனப் பதறினார் அவர். படபடப்புடன் அந்தப் புற்றினருகே சென்ற அவர் குனிந்தவாறு உரத்த சத்தத்துடன் "கறையான்களே இங்கிருந்து ஓடிவிடுங்கள்; ஆபத்து, ஆபத்து" என அலறலானார்.

ஆனால் அந்தப் பூச்சிகளோ அவரது கூக்குரல் பற்றி கிஞ்சித்தும் அக்கறை கொள்ளாமல் தம்பாட்டில் தொடர்ந்து சுறுசுறுப்பாய் பொந்துக்குள்ளும், வெளியும் திரிந்தபடியேயிருந்தன. காரணம் மனிதரின் சத்தத்தை அவைகளால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. அந்தக்கறையான் பூச்சிகளுக்கு அவைகளது மொழியில் இன்னுமொரு கறையானால் அச்செய்தி கொடுக்கப்பட்டிருக்குமானால் நிச்சயமாகவே அவை அழிவுக்கு விலகி ஓடித்தப்பியிருக்கும்.

இது போன்றுதான் இறைவன் நம் மத்தியில் மனிதனாய் உற்பவித்த அற்புதச் சம்பவமும். பாவத்தில் உழன்று பரிதபிக்கும் நிலையிலிருந்த மனுக்குலத்தைக் காப்பாற்றி இரச்சிப்பையும், நல்லவாழ்வையும் அருள மனித உருவிலே அவர் வந்து மனிதனாகவே மனிதர்கள் மத்தியில் வாழ்ந்து போதிக்க வேண்டியது அவசியமாயிருந்தது. எனவே தான் ஏழைக்கோலம் கொண்டு மாட்டுத் தொழுவமதில் மாசற்ற மரி அன்னையின் வயிற்றில் மகவாய் வந்துதித்தார். சர்வத்தையும் ஆளும் சர்வவல்லவர். உலகத்திலே அவர் மனிதனாய்ப் பிறந்த மாபெரும் தினமே கிறிஸ்மஸ் தினமாகும்.

**எல்லாம் போய் விட்டதென்று சோர்ந்து போய் விடவேண்டாம். எந்த மனிதனாலும் வெல்ல முடியாத உள்ளம் இருக்கிறது. அதை வைத்துக் கொண்டே சாதித்துவிடலாம். இனியும் தாமதிக்காதீர்! செயலில் இறங்குங்கள்!**

**—மில்டன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் ஆண்டு தோறும் கிறிஸ்துவின் பிறந்ததினத்தைக் கொண்டாடிவரும் நாம் சில தடவைகளில் அந்தப் பண்டிகையின் தாற்பரியத்தை அதன் உண்மை அர்த்தத்தையே உணர்ந்து கொள்ளத் தவறிவிடுகிறோம். அந்தப் பிறந்ததினக் கொண்டாட்டங்களுக்கு மூலகாரணரும் நடுநாயகனுமான கிறிஸ்துவுக்கு நாம் முக்கியத்துவமளிக்கிறோமா? அல்லது நமது கேளிக்கைகளிலும் கேக்வகைகளிலும், ஆடல் பாடல்களிலும், அலங்கரிப்புகளிலும், விருதுகள், வாழ்த்துக்கள் மத்தியில் அந்தக் கதாநாயகன் கிறிஸ்துவை மறந்தே விடுகிறோமா? கிறிஸ்து இல்லாத கிறிஸ்மஸ் கொண்டாட்டங்கள் மாப்பிள்ளை இல்லாத திருமணத்திற்குச் சமம் என்பதை நாம் இந்த மகிழ்ச்சிகரமான காலங்களில் மறந்துபோகாதிருப்போமாக. மறைவாக்குச் சொல்லுகிறது:-

''பாவிகளை மீட்கவே இயேசு கிறிஸ்து இவ்வுலகத்திற்கு வந்தார் என்னும் மொழி உண்மையானது; எல்லாராலும் ஏற்றுக்கொள்ளத்தக்கது''

(திமோதேயு 1 : 15)

**சேருங்கள் வெள்ளைப் பூண்டை**

ஜலதோசமும், காய்ச்சலும் இருமலும் அடிக்கடி வராமல் இருக்க வேண்டுமானால் ஒரு நாள் விட்டு ஒரு நாளாவது (முடிந்தால் தினமும்) வெள்ளைப் பூண்டை எந்த ரூபத்திலாவது சமையலில் சேர்த்து விடுங்கள்.




அழகிற் சிறந்த பவுண் தங்க
நகைகளுக்கு
நம்பிக்கையான இடம்

உதயா

நம்பிக்கை, நாணயம், நேர்மை
இவற்றிற்கு இன்றே நாடுங்கள்.

**உதயா நகை மாளிகை**

**19, பிரதான வீதி, மட்டக்களப்பு.**

தொலைபேசி: 065 - 2619




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறப்புச் சிறுகதை

# தயாளினியின் கிறிஸ்மஸ்

— யோகி —

டிசம்பர் மாதம் 24ம் திகதி. கிறிஸ்மஸ் இரவை நோக்கி நாள் நகர்ந்து கொண்டிருந்தது. அருள்தாசன் வீட்டிலும் அமர்க்களம். ஊருக்குப் பெரிய மனிதன். அந்தஸ்திலும் கௌரவத்திலும் இன்னும் ஒரு படி உயர்வு. இத்துடன் செல்வமும் சேர்ந்து விட்டிருந்தது. எனவே குதூகலத்திற்கு குறைச்சலே இல்லை. அவரது இரண்டு மகன்கள் அன்புதாசனும் தேவதாசனும் வீட்டைச் சுத்தம் செய்ய; அன்பு மகள்கள் குமுதினியும் அமுதினியும் அலங்காரத்தில் ஈடுபட்டனர். அவரின் மனைவியோ அடுப்பங்கரையில் இனிப்புகளை ஒழுங்கு செய்து கொண்டிருந்தாள்.

இந்த குதூகல அமர்க்களத்தில் மாடியில் இரத்தக் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கும் அவரின் முதல்மகள் தயாளினியின் கண்ணீர்த்துளிகள் யாரையும் தொட்டதாக இல்லை. எப்படித் தொடும்? அவள் தான் இக்குடும்பத்திற்கு இறந்தவளாகி விட்டாளே!

தயாளினிக்கு தன்னுடைய வாழ்வையே நம்ப முடியவில்லை. தனியாள் மருத்துவ விடுதியில் இருந்து வந்து இரண்டு நாட்களே தான். மாடியே தஞ்சம் என்று ஒடிந்து கிடக்கின்றாள். அண்மைச் சம்பவங்கள் யாவும் நிழற்படம் போல அவளின் உள்ளத்திரையில் ஓடத் தொடங்கியது.

வாசு, அவளின் வாழ்வில் இனிமையைக் கொண்டு வந்தவன். அவலத்தை அவளது வாழ்வில் கொண்டு வந்தவனும் அவனேதான். அவளின் அன்புக்குரியவன்; அவளின் காதலன்; அவளைக் கை விட்டவனும் அவனேதான்.

பெற்றோருக்குத் தெரியாமலேயே இந்த இனிய சந்திப்பு தயாளினியின் வாழ்வில் நிகழ்ந்தது. குடும்பம் அறியாமலேயே இந்த உறவு வளர்ந்தது. மாதங்கள் சிலவாக இதய வீணையில் பண்ணிசைத்த இந்த உறவின் அடையாளமாக தயாளினியின் வயிற்றில் ஒரு குழந்தை உருவெடுத்தது. இதை உணர்ந்து கொண்ட தயாளினி வாசுவைக் கண்டு அவனிடம், ''வாசு! நான் உன் குழந்தைக்குத் தாயாகி விட்டேன்'' என்றாள்.

சில மனிதர் மற்றவரை அன்பு செய்ய மாட்டார்கள். பொருட்களைப் போல பயன்படுத்துகின்றார்கள் என்பதை அன்றுதான் தயாளினி அறிந்து கொண்டாள்.

''தயாளினி! நான் திருமணத்தை முன்னிட்டு உன்னோடு பழகவில்லை. ஏதாவது செய்து குழந்தையை அழித்து விடு. என்னை திருமணத்திற்கு என்றுமே கேட்காதே'' என்று எதுவித உணர்வுமின்றி வாசு கூறினான்.

விண்வெளியில் ஆனந்த வட்டமிட்ட பறவைக்கு சடுதியாக சிறகொடிந்ததைப் போன்ற வேதனை தயாளினியை தாக்கியது. கனவுகள் சிதறுண்டு வாழ்க்கையில் ஏமாற்றப்பட்டவர்கள் என்று கணிக்கப்பட்ட கூட்டத்தினது அடுத்த எண்ணிக்கை மாற்றப்பட்டதை உணர்ந்தவளாக உயிர்த்துடிப்பு இன்றி தயாளினி வீடு திரும்பினாள்

இதைத் தொடர்ந்து இரண்டு நாட்கள் அவளின் உள்ளத்தில் ஜீவ மரணப் போராட்டம். என்ன செய்வது? எவர் உதவியை நாடுவது? சிந்தனையும் எண்ணங்களும் - சிந்தனையும் எண்ணங்களும் என பைத்தியம் பிடிக்கும் நிலை. பெற்றாரிடம் கூறா விட்டால் யாரிடம் தான் கூற முடியும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மெல்ல மெல்ல அழுகை விம்மல்களுக்கிடையில் தனது இக்கட்டான நிலையை தயாளினி தன் தாயிடம் எடுத்துக் கூறினுள். கணவனை இழந்த கண்ணகி பாண்டியன் அரண்மனையில் ஆவேசத்துடன் கூப்பாடு போட்டாள் என்று படித்த ஞாபகம். இன்றே தன் மகளின் அறியாமையினுல் விளைந்த தவறினுல் அந்தஸ்து, மானம், கௌரவம், சமூக மதிப்பு எல்லாம் பறிபோகப் போகின்றதே என்று அம்மா துள்ளிய துள்ளலும் போட்ட கூச்சலும் தயாளினிக்கு ஏன் நான் இவள் வயிற்றில் பிறந்தேனே என்று எண்ணத் தூண்டியது.

அம்மா போட்ட கூச்சலைக் கேட்டு அப்பாவும் அண்ணன் மார் தங்கைகளும் அங்கு கூடினர்கள். தயாளினி கை கட்டி வாய் பொத்தி நிற்க தர்பார் கூடியது. அம்மா தான் வழக்கைத் துவக்கினுள்.

நிலைமையைக் கேட்டு அம்மாவின் கூச்சலை அடக்கிய அப்பா கண்ணியத்தையும் மானத்தையும் காப்பாற்ற என்ன செய்யலாம் என்றுர். அவருக்கு தயாளினி என்று ஒரு ஜீவன் கண்ணீர் விடுவது தெரியவே இல்லை. அவருடைய சிந்தனைகள் யாவும் மானத்தையும் கௌரவத்தையும் எப்படிக் காப்பாற்றுவது என்பதிலேயே ஈடுபட்டது.

''அப்பா! வாசு என்னைக் கை விட்டிருக்கலாம். இக் குழந்தை என் குழந்தை. நான் இதைப் பெற்று வளர்க் கட்டுமா, அப்பா'' என்றுள் தயாளினி.

''அப்பா இல்லாமல் பிள்ளையைப் பெற்றுக் கொண்டு வந்தால் எங்கள் எதிர்காலம் என்னவாகிறது. ஒழுக்கம் கெட்டவள் என்று உன்னைச் சமூகம் கூறினுல் யார் எங்களைக் கலியாணம் செய்ய முன் வருவார்கள்'' என்றனர் தங்கைகள்.

''எந்த நாட்டில நீ இருக்கிறு, பிள்ளையைப் பெத்து சும்மா தூக்கிக் கொண்டு வாறதுக்கு? இந்த ஊரில நாங்கள் வாழ்கிறதில்லையா? மானம் மரியாதை என்ன வாகிறது'' - இப்படி அப்பாவும், அம்மாவும் கோரஸாகப் பாடினுர்கள்.

தயவுக்கு அண்ணன் மாரை நோக்கினுள் தயாளினி. உணர்ச்சியற்ற உள்ளங்கள் வறண்ட பதிலை, ''அம்மா, அப்பா, தங்கச்சிமார் எல்லாம் சொல்கிறது. நியாயமில்லையா, தயாளினி நாங்களும் வாழத்தானே வேண்டும்.'' கூறிவைத்தனர்.

தயாளினி என்ற பெண் ஒன்று ஒரு குழந்தையை வயிற்றில் சுமந்து கொண்டு இருக்கின்றுளே என்ற எண்ணம் இன்றியே எல்லோரும் பேசினர். அவள் அல்ல முக்கியம். சமூகம், அந்தஸ்து, மானம் இவை தான் முன்னின்று வழி நடத்தின. சுயநலமே அங்கு பேசியது. சமூக, கலாச்சார, கௌரவங்களுக்கு அப்பால் மனிதனுல் சிந்திக்க முடியுமாயின்...... இயலவில்லையே. எனவே அந்தஸ்து, கௌரவம் மானம், மரியாதை தயாளினியின் உதிரத்தில் ஒட்டிக் கொண்டு அவளின் இரத்தத்தால் சக்தி பெற்று வளர்ந்து கொண்டிருக்கும் அந்த சின்ன மனித உயிருக்கு மரணத் தீர்வையிட்டன.

தயாளினி கெஞ்சினுள்; அழுதாள்; மண்டியிட்டாள்; மன்றுடினுள். ''அப்பா! இது என் குழந்தையப்பா.''

இந்த வீட்டிலும் இந்த ஊரிலும் மானம் மரியாதையோடு வாழவேண்டும் என்றுல் வேறு வழியில்லை - அப்பா தீர்ப்பைக் கூற தர்பார் கலைந்தது.

மறுதினம் தயாளினி கொழும்பு நகரத்திற்கு கொண்டு வரப்பட்டாள். 'அபோர்ஷன்' என்று நாகரீகமாக அழைக்கப்படும் கருச் சிதைவு செய்யும் தனியார் மருத்துவ விடுதி யொன்றில் சேர்க்கப்பட்டு அவளின் உதிரத்தில் ஒட்டிக் கொண்டு ஆசைகளை வளர்த்துக் கொண்டிருந்த அந்த மனித உயிர் பலாத்காரமாக அப்புறப் படுத்தப் பட்டது. இரக்க மற்ற படுகொலை, மயக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிந்த தயாளினிக்கு தன்னுடைய உயிரில் பாதி போய் விட்டது போன்ற பிரமை. செத்திட்டால் தேவலையென்ற ஆதங்கம். அவளின் உணர்வுகளையும் ஏக்கங்களையும் பகிர இனி யார் இருக்கின்றார்கள். நடைப் பிணமாக அவள் வீடு திரும்பினாள். வீட்டில் யாரும் அவளைக் கணக்கெடுத்ததாகத் தெரியவில்லை. மாடியே தஞ்சமானாள்.

அவளின் உள்ளம் அழுது வடிய இதயம் சூனியத்தின் இருப்பிடமாகியது. அவளின் குழந்தையை அழித்தவர்களின் வீடோ இங்கு சமாதானத்தின் தூதனை வரவேற்க அமர்க்களப்படுகின்றது.

உள்ளம் கனக்க இதயத்திற்கு ஆறுதல்தேடி தயாளினி அருகில் இருந்த ''நற்செய்தி'' யை புரட்டினாள். இயேசு பாலனின் பிறப்பு வரலாறு அவளின் உள்ளத்தை உறுத்தியது. திருமணம் செய்யு முன் பரிசுத்த ஆவியினால் கருத்தரித்த மரியன்னையின் நிலையை எண்ணிக் கொண்டாள். அவளை கைப் பிடிக்க வந்த சூசை திறந்த உள்ளம் அற்றவனாக இருந்து இருந்தால்..... மரியன்னையின் பெற்றோர் அன்னம்மா, ஜோக்கீம், சமூகம், மானம், மரியாதை என்று கூச்சல் இட்டிருந்தால்........... சகோதரி எலிஸபெத் சந்தேக கண்ணில் அவளை அணுகியிருந்தால்...... தனக்கு ஏற்பட்டது போல எல்லோரும் கூடி மரணத் தீர்வை யிட்டிருந்தால் - அந்த இயேசு பாலனுக்கு இறைவனின் குழந்தைக்கு என்ன நடந்து இருக்கும். கற்பனை செய்யவே உடல் சிலிர்த்தது.

மரியன்னை கொடுத்து வைத்தவள். எனக்கு அப்படிக் கொடுத்து வைக்க வில்லையே. என் குழந்தையை நான் கொன்று போட்டேன் என்று தயாளினியின் ஆன்மா ஓலமிட்டது. ''நீ கொலைகாரி, நீ கொலைகாரி, என அவள் மனச்சாட்சி ஆர்ப்பரித்தது. தலையைப் பிய்த்துக் கொண்டு மீண்டும் அழுது கொட்டினாள் தயாளினி. '' ஆண்டவனே! எனக்கு இரட்சணியமே இல்லையா?''

'பெற்றோர் உன்னை கைவிடினும் நான் உன்னை என் உள்ளங்கையில் கொண்டுள்ளேன்.'' என்ற இறைவன் அவளின் இதய வேதனையை கேட்டார் போலும், ஆலய மணியோசை ஒலித்து. அவளை அழைத்தது.

கிறிஸ்து பிறப்பையொட்டி மனந் திரும்புதலுக்கு அழைக்கும் மணியோசை அது. என் குழந்தையைக்கொன்றுபோட்டேன் என்ற பாவத்தின் சுமையால் பீடிக்கப்பட்டிருந்த தயாளினியின் இதயத்தில் இதமாக ஒலித்தது. ஆறுதலுக்கு அவளை அழைத்தது.

அடைந்து கிடந்த மாடியை விட்டுப் புறப்பட்டு ஆலயத்தினுள் நுழைந்தாள். பலர் குருவிடம் தங்கள் பாவ வாழ்வை அறிக்கையிட்டு சமாதானத்தை பெற்றுச் சென்று கொண்டிருந்தனர்.

தயாளினியும் குருவிடம் சென்று, ''பாவி என்னை மன்னியும்'' என ஆரம்பித்து, ''பாதர், இரண்டு தவறுகள் என் இதயத்தை உறுத்துகின்றன. என் அறியாமையின் சுய நலத்தை அன்பு என்று எண்ணி திருமணம் செய்யாத நான் ஒருவனுடன் உடல் உறவு சொண்டேன். அதன் பயனாக என் வயிற்றில் வளர்ந்த குழந்தையை வளர்க்க எண்ணினேன். ஆனால் பெற்றோர், சமூகம், அந்தஸ்து, கௌரவம் எல்லாம் தீர்ப்புக் கூற நான் அதைக் கொலை செய்திட்டேன், பாதர், அபோர்ஷன் பண்ணிட்டேன், பாதர், நான் கொலைகாரி, பாதர்'' மேற்கொண்டு பேச சக்தியின்றி இதயம் உடைந்து விம்மியழலானாள் தயாளினி.

மறுபுறத்தில் இருந்து குருவின் ஆறுதல் வார்த்தை ஒலித்தது. ''மகளே! என் குழந்தையைப் பறி கொடுத்து விட்டேன். கொலை செய்து விட்டேன் என்று அழுகின்றாய். உன் வேதனை என் இதயத்தை தொடுகின்



றது. என் இதயமும் உன் இதயத்துடன் இணைந்து அழுகின்றது. உன் ஆன்ம சமாதானத்திற்கு இறை ஆசீரை வேண்டுகின்றது. உன் கண்ணீரே உன் பாவங்களை கரைக்கின்றது. அழிக்கப்பட்ட குழந்தைக்காக ஏங்கும் உன் உள்ளத்திற்கு ஆறுதல் அளிக்க இறைவன் இன்று உனக்குப் பெரிய பரிசு ஒன்று கொடுக்கின்றார். தன் மகன் இயேசு பாலனை உனக்கு அளிக்கின்றார். உன் உதரத்தில் பிறக்காத குழந்தைக்காக அழுகின்றாய். இதயத்தில் பிறக்கும் குழந்தையாக இயேசு பாலன் இன்று உன் உள்ளத்தில் வருகிறார். இது மானிடனாக பிறக்கும் தெய்வீகக் குழந்தை இக்குழந்தையை ஏற்றுக் கொள்; அரவணைத்துக் கொள்; அதை தாலாட்டி தூங்கவைத்து, பாது காத்து, பராமரித்து, ஆளாக்கி உருவாக்கி இறுதியில் மானிடக்குழந்தையாக வரும் இயேசுவை தெய்வமாக மாற்ற வேண்டியது உன் கடமையும் பணியும்.

கிறிஸ்துவனின் உள்ளத்தில் பிறக்கும் இயேசு பாலன் உன் உதரத்தில் தோன்றி உன் இரத்தத்தில் வளர்ந்த அக்குழந்தையைப் போன்று உன் இதயத்தில் வளர்கின்றார். அன்பு, இரக்கம், தயாளம் எனும் அருங்குணங்கள் உன் இதயத்தில் சுரந்தால் அது இவ்விதய குழந்தையின் உணவாகி அதை வளர்த்து உருவாக்கும். உன் நல் வாழ்க்கையால் நீ எவ்வளவுக்கு நல்லவனாக தெய்வமாக கிறிஸ்துவாக மாறுகின்றாயோ அவ்வளவுக்கு உன் இதய இயேசு பாலனும் வளர்ந்து தெய்வமாகும்.

வரலாற்றில் அன்று நடந்தது இன்று உன் இதயத்தில் வரலாறாகிறது. உடைந்து நொருங்கிய உன் இதயம் மனுமகனை வரவேற்கத்தகுதியற்ற மாடுகட்டும் கொட்டில் போலத் தோன்றலாம். ஆனால் அங்குதானே மனுமகன் பிறந்தார்.

எனவே அவரது அன்பு நிறை சமாதானத்தை ஏற்றுக் கொண்டவளாக பாவங்கள் கழுவப்பட்டு உன் புது வாழ்வுக்கு தயாராகு. இன்று நீ சிந்திய பல துளிக் கண்ணீர்கள் உன் அதிக அன்பைக் காட்டின. இறைவனின் சமாதானம் உன்னை ஆட் கொள்வதாக.

தொடர்ந்து குரு கூறிய பாவமன்னிப்பின் உச்சாரணங்கள் தயாளினியின் காதுகளில் ஒலிக்கும் வேளை அவளின் இதயம் அமைதியால் ஆட்கொள்ளப்பட்டது. இயேசு பாலனை வரவேற்க அது ஆயத்தமாகியது.

"HAPPY CHRISTMAS, மகளே என்னையும் உன் செபத்தில் நினைத்துக் கொள்."

"HAPPY CHRISTMAS To you, FATHER" என்றாள் தயாளினி அமைதியாக.

## கிரெம்ளின் கடிகாரம்

மாஸ்கோவில் கிரெம்ளின் கடிகார ஒலியை நாள் தோறும் மக்கள் கேட்கிறார்கள். இது எப்போது முதல் ஒலித்துக் கொண்டிருக்கிறது. தெரியுமா? 1404ம் ஆண்டு முதல் ஒலித்து, பல நாடுகளுக்குச் சரியான நேரத்தைக் காட்டி வருகிறது. 1625ல் இது சேவியர் டவர் என்ற டவரில் பொருத்தப்பட்டது. 1917 வரை இது ஒழுங்காக இயங்கிக் கொண்டிருந்தது. இது ரஷ்யப் புரட்சியின்போது குண்டுத் தாக்குதலால் பழுதடைந்து பழுதுபார்க்கப்பட்டு பழுதின்றி ஓடிக் கொண்டிருக்கிறது. 2000ம் ஆண்டுகள்வரை இது நிற்காமல் ஓடிக் கொண்டிருக்கும் என்று இஞ்சினியர்கள் கூறியிருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற இதழ் தொடர்ச்சி...

# கிறிஸ்தவ ஒழுக்கநெறிக் கோட்பாடுகள்

● D. வின்சென்ற் பற்றிக் O. M. I.; B. Th, B. A.

## சமயமும் உள்ளுணர்வும்

ஓர் இலக்கை நோக்கி நம்பிக்கையோடு செல்வதே சமயமாகும். மனிதனையும் இறைவனையும் தொடர்புபடுத்தும் ஒரு சாதனமே சமயமாகும். ஒழுக்க நெறிக்கோட்பாட்டைத் தருவதோடு சமயமானது இறையுணர்வில் மனிதனை வளர்க்கின்றது. 'சக்திகள் யாவும் கொண்ட பரம்பொருள் ஒன்றுண்டு என்ற எண்ணம் எல்லா நாடுகளிலும் நிலவுகின்றது. வெளிமனநிலையில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றாலும் நனவிலி நினைவிலாவது ஏற்றுக் கொள்ளப்படுகிறது. வெளி மன நிலையில் இறைவன் ஏற்றுக்கொள்வதை அறிவுடைய செயல் என்று கருதுகிறேன். இல்லையென்றால் வேறொரு பொருளை, நபரை நாம் இறைவனாக்கிக் கொள்கிறோம். இது மிகவும் தவறானதும் மடமையானதும் ஆகும்' என்கிறார் யுங். நம் உள்ளத்தின் ஆழத்திலே இறைவனைக் கண்டு உணரலாம் என்று கிறிஸ்தவ ஞானிகள் உணர்வூட்டியிருக்கிறார்கள். 'ஆன்மாவின் ஆழத்திலே எண்ணமும் உருப்பொருளும் ஒன்றாகின்றது.' என்கின்றார் புனித அகுஸ்தினார். இப்படிப்பட்ட சமய அனுபவ விளக்கங்கள் முறையான மனித வாழ்க்கைக்குத் தூண்டுகோலாக விளங்குகின்றன. இவ்வுண்மைகளை அனுபவரீதியாகக் கண்டுணர்வதன் மூலமாக ஒவ்வொருவனும் தன்தன் அன்றாட வாழ்வில் நிகழும் நிகழ்வுகளுக்கும் அறக்கோட்பாடுகளுக்குமிடையே நிலவக் கூடிய முரண்பாடுகளை முறியடிக்கமுடியும்.

ஒவ்வொரு மனிதனையும் அடிமை நிலையிலிருந்து மீட்டு சுதந்திர உணர்வுடன் வாழச் சமயம் ஊட்டமளிக்கின்றது. மூடநம்பிக்கைகளால், 'விதி' என்ற நிர்ணயிக்கப்பட்ட கொள்கையால் கட்டுப்பட்டு வாழும் மனிதனை விடுதலை உணர்வுடன் சொந்தத் திறமைகளை, ஆற்றல்களை வளர்விக்கச் சமயம் தூண்டுகின்றது. விதியை முறியடித்து மதியோடு மனிதன் வாழ, மகிழ்வில் நிலைத்து நிற்கச் சமயம் உதவுகின்றது. 'தான்' என்ற அகந்தையினால் அவதிப்படும் மனிதனுக்கு அமைதி கொடுக்கும் அருமருந்தாகச் சமயம் விளங்குகின்றது. சமயங்களின் தூண்டுதலால் ஒருவன் தன்னை இறைவனுக்கும் சமுதாயத்திற்கும் ஏற்புடையவனாக மாற்றிக் கொள்கின்றான்.

## இறுதியுரை

இறையரசைப் பூவுலகில் நிலை நாட்டுவதன் மூலமாக இவ்வுலகில் நீடித்த சமாதானத்தையும், அமைதியையும், ஒழுங்கையும் உறுதிப்படுத்தக் கூடிய சூழலை அமைப்பதாய் கிறிஸ்தவ ஒழுக்க நெறி விளங்கவேண்டும். 'ஓநாயும் செம்மறியும் ஒன்றாய் மேயும், சிங்கமும் மாடும் வைக்கோலைத் தின்னும் பாம்புக்கு மண் உணவாகும். நமது பரிசுத்த மலையெங்கும் அவை யாரையும் துன்புறுத்த மாட்டா, என்கிறார் ஆண்டவர். (இசை65:25)



**ஆசிரியர்;** யேசுநாத சுவாமி மாட்டுக் குடில்ல ஏன் பொறந்தாரு? சொல்லுங்க பார்க்கலாம்.

**மாணவன்:** அன்னைக்கு ஹர்த்தாலா இருந்திருக்கும் சார். அதான் ஆஸ்பத்திரிக்கு போக முடியாம வழியில இருந்த மாட்டுக் குடிலில பொறந்திருக்காரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனின் மறைப்பாங்கான, ஒழுக்கரீதியான வாழ்க்கை இறையன்புக்குப் பொருத்தமான பதில் கொடுப்பதிலேயே தங்கியுள்ளது. இப்பதில் இரு பிரிவுகளைக் கொண்டது.

1. கடவுளின் மகிமை, மாட்சிமை, பரிசுத்ததனம், அன்பு, இரக்கம் போன்றவற்றின் திருவெளிப்பாட்டிற்கு விசுவாசம், நம்பிக்கை, இறையன்பு வழிபாடுகளின் மூலமாகப் பதிலளித்தல்.

2. படைக்கப்பட்ட உலகத்தைப் புனிதப்படுத்தும் உள்ளுணர்வோடு பிறரன்பின் மூலமாகப் பதிலளித்தல்.

எனவே, அடிமையுணர்வுடன் கண் மூடித்தனமாக ஒழுக்கவிதி முறைகளைக் கடைப்பிடித்து வாழ்வதை விடுத்து நிதானமாக. பொறுப்புணர்வுடன், விடுதலை மனப்பாங்குடன் அறநெறிகளுக்கமைய ஒழுகி வாழுதல் அவசியமானது.

'வலிவின்மையிலும் அழிவிலும் விதைக்கப்பட்டது அழியாமையை அணிந்து கொள்ளும்; பரம அன்பும் அதன் அலுவலும் நிலைத்து நிற்க, மனிதனுக்காக இறைவன் படைத்துள்ள படைப்பனைத்தும் வீண் பெருமையின் அடிமைத்தளையினின்று விடுதலை பெறும்.' (இன் உல. திரு.39)

மாண்புமிக்க மனிதனை மாட்சிமை பொருந்திய இறைவனோடு நித்திய உறவில் இணைப்பதன் மூலமாக, உலகினைக் கிறிஸ்துமயமாக்குதல் மூலமாக கிறிஸ்தவ ஒழுக்க நெறி முழுமை பெறுகின்றது.

இன்பத்தைத் தேடித் தேடி அலைய வேண்டாம். ஆனால் இன்பமாயிருக்க எந்த நேரமும் தயாராயிருங்கள்.
—ஜான் ரஸ்கின்


With Best Compliments from:

ESTD: 1912

S. S. M. CHOLUKKARS & BROS

Government Supplier
General Hardware & Brassware Merchants
48, 50, 52, Bazaar Street,
BATTICALOA.
T. P. No: 065 - 2755

With Best Compliments from:

LANKA HARDWARE STORES


*Distributors For:*

'Robbialac' Lankem Paints,
Ceylon Ceramic Corporation,
Ceylon Steel Corporation,
Ceylon State Hardware Corporation,
'Elephant' Brand Asb. Sheets,
Diesel Engines, Hullers, Motors Etc.

48, Bazaar Street
BATTICALOA.
Phone: Office 065 - 2022
Residence 065 - 2744, 2560




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விலை உயர்வு

## வாசகப் பெருமக்களே!

தொண்டன் பிரதி ஒன்றின் விலை இவ் விதழிலிருந்து ரூபா ஆறாக (6/-) உயர்ந்துள்ளது. இது தவிர்க்க இயலாமல், நாம் விரும்பாமலே செய்த முடிவு.

காரணங்கள் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. அடுக்கடுக்காக உயர்ந்து வரும் அச்சுச் செலவுகளும், அஞ்சற் செலவுகளும், பிற செலவுகளும் தொண்டனை மட்டும் விட்டு வைக்குமா?

இதே வேளை கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தொண்டனின் வெளியீட்டுச் செலவு மூன்று முறை அதிகரித்தும் தொண்டனின் விலையை ஏற்றாமல் நட்டத்தை நாமே தாங்கி வந்தோம். தற்போது ஆண்டொன்றுக்கு நாமடைந்து வரும் ரூபா (25,000/-) இருபத்தியையாயிரம் நட்டத்தை வரும் ஆண்டிலும் அடைய வேண்டுமென்றால் விலையை உயர்த்தியே ஆக வேண்டும். இல்லையேல் மேலும் இந்த நட்டம் ஆண்டொன்றுக்கு (12,000/-) பன்னிரண்டாயிரம் ரூபாவால் அதிகரிக்கும். அதைத் தாங்கும் நிலையில் நாம் இல்லை. ஆகவே வாசகர் இந்தச் சிறு விலையேற்றத்தை பொருட்படுத்தாது கிழக்கிலங்கையிலிருந்து வெளிவரும் ஒரே ஒரு மாத ஏடான தொண்டனுக்குத் தொடர்ந்து உங்கள் ஆதரவை வழங்குவீர்களென்று நம்புகிறோம். இதற்கேற்ப

**தனிப்பிரதி ஒன்றின் விலை ரூ 6/00**

**ஆண்டுச் சந்தா ரூ 70/-**

அதே வேளை மொத்த விற்பனையாளர்களுக்கு இதுவரை பிரதிக்கு 25 சதமாக வழங்கப்பட்ட கழிவு 50 சதமாக உயர்த்தப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம். அதாவது மொத்த விற்பனையாளர்கள் பிரதி ஒன்றை ஆறு ரூபாவிற்கு விற்று, எமக்கு பிரதி ஒன்றுக்கு ரூபா 5/50 சதம் அனுப்பி வைக்க வேண்டும். மேலும் வெளியீட்டுச் செலவுகள் அதிகரித்துக் கொண்டே செல்வதால் அன்பர்கள், ஆதரவாளர்கள், அபிமானிகள் எமக்கு அன்பளிப்புகள் தந்து தொண்டன் தொடர்ந்து வெளிவர உதவ வேண்டுமென்று தயவாகக் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

## முக்கிய அறிவிப்பு

இந்த இதழுடன் வாசகர்களுக்காக ஒரு படிவம் இணைக்கப்பட்டுள்ளது. தயவு செய்து அதனை நிரப்பி, தவறாது எமக்கு அனுப்பி வைக்கவும். நமது வாசகர்களை நாம் அறிந்து கொள்ளவும். தொண்டன் பற்றிய மதிப்பீடு ஒன்றை உருவாக்கவும், எதிர் காலத்தின் வளர்ச்சிக்கு ஆக்கபூர்வமான திட்டங்களைத் தீட்டவும் உதவியாக இப்படிவம் உங்களுக்குத் தரப்பட்டுள்ளது. இதனைச் சரியாகவும் தெளிவாகவும் நிரப்பி எமக்கு அனுப்பி வைக்கவும். மேலதிகப் படிவங்கள் தேவைப்படின் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

—நிர்வாகம்—

### கலப்படம்

கோழி முட்டையில் சிறு துவாரம் இட்டு, குயில் கருவின் ஒரு பகுதியைச் செலுத்திக் குஞ்சு பொரிக்க வைத்தனர். வெளிவந்த குஞ்சுகள் குயில்போல் இனிமையாகக் கூவின. அவைகளின் தலையும் குயிலின் தலைபோலவே இருந்தது. கோழி, குயில் இரண்டின் திசுக்களையும் கலந்து நுண்ணோக்கியால் ஆய்ந்தபோது கலப்படக் கோழிகளின் திசுக்கள் மட்டும் நுண்ணோக்கியின் கண்களுக்குப் புலனாயின. இது பிரஞ்சு நாட்டு விஞ்ஞானிகளின் சாதனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் பக்கம்



அப்போஸ்தலர் பணி XVI

க. பொ. த. உயர்தரம்

உண்மைதான் வாழ்க்கை. நமது வாழ்க்கை சத்தியத்தைச் சேர்ந்து நிற்கும் பொழுதுதான் அத்தனை துயரங்களும் தொலைந்து போகின்றன. அதற்கு முன்னுள் அல்ல.

பிளேட்டோ

### மூன்றும் பயணம்

சின்னப்பர் சீரியா அந்தியோக்கில் மாரிகாலத்தைக் கழித்தார். கி. பி. 53, இலைதுளிர் காலத்தில் தான் தாபித்த திருச்சபைகளைச் சந்தித்து வரப் புறப்பட்டார். அவருடன் தீமோத்தேயு, தீத்து, ஏரஸ்து போன்றவர்களும் புறப்பட்டனர். அவர்கள் உதவியாளர்களாக அல்ல, உடனுழைப்பவர்களாகச் சென்றனர். ஏனெனில் அவர்கள் தான் எதிர்காலத் திருச்சபையின் தலைவர்களாக விளங்கப் போகின்றுர்கள் என்பதைக் கருத்தில் கொண்டு, அவர்களைத் தேர்ந்தெடுத்து சின்னப்பர் குளிர்காலம் முழுவதும் அந்தியோக்கியாவில் அவர்களுக்குப் பயிற்சியளித்தார் என்று கூறினுல் மிகையாகாது.

அவர்கள் அந்தியோக்கியாவிலிருந்து புறப்பட்டு சின்ன ஆசியா என இன்று அழைக்கப்படும் கலாத்தியா, பிரிகியா ஆகிய நாடுகளுக்கு சிலிசியா மலைகளூடாகச் சென்றனர்' அவரது சொந்த ஊரான தர்சுக்குச் செல்லவில்லை. எபேசுக்குச் செல்வதே அவரது நோக்கமாக இருந்தது.

### எபேசு

மத்தியதரைக் கடல் நாடுகளில் எபேசு பேர்போன நகரமாக விளங்கியது. ஒரு சுறுசுறுப்பான வாணிபத் துறைமுகமாகவும் இருந்தது. அரசியல், மத கேந்திர நிலையமாக விளங்கிய எபேசில் 'தியானு' வுக்கென அமைக்கப்பட்டிருந்த ஆலயம் உலகப் புகழ்பெற்றதொன்றுகும். (உலக அதிசயங்களில் ஒன்று) தியானு உரோமையர்களின் 'சந்திரக்' கடவுளாக விளங்கினுள். அவள் 'சூரியக்' கடவுளான 'அப்பொல்லோவின்' சகோதரியாகும். கிரேக்கர்கள் கூட அவளைத் தங்கள் தெய்வமாகவும், பாலியல் உற்பத்தியின் கடவுளாகவும் வழிபட்டனர். மந்திரவாதிகள், மாயவித்தைக்காரர்கள் அவள் பெயரால் நிறைந்திருந்தனர்.

### அப்பொல்லோ

இத்தகைய எபேசு நகருக்குச் சின்னப்பர் வருவதற்கு முன்னர் அலெக்சாந்திரியாவைச் சேர்ந்த அப்பொல்லோ என்பவரை நாம் சந்திக்கின்றேம். அவர் ஓர் ஆபிரிக்க யூதராக இருந்தார். நல்ல பேச்சாளராகவும், பழைய ஏற்பாட்டைப் பற்றி நன்கு அறிந்தவராகவும் இருந்தார். திருமுழுக்கு அருளப்பரின் போதனைதான் அவருக்குத் தெரிந்திருந்தது. இயேசுவைப் பற்றியும் அவரது போதனையைப் பற்றியும் குறைவான அறிவுடையவராக இருந்தார். கிறிஸ்தவ திருமுழுக்குக்கும் அருளப்பரின் திருமுழுக்குக்கும் உள்ள வேறுபாட்டினை அறியாதவராக இருந்தார். அக்கில்லாவும், பிரிஸ்கிலாவும் எபேசில் நிரந்தரமாகத் தங்கியபோது அப்பொல்லோவுடன் நட்புக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு, இயேசுக் கிறிஸ்துவைப் பற்றி அவருக்கு எடுத்துச் சொல்லிக் கிறிஸ்தவ மறையில் உறுதிப்படுத்தினர். தான் பெற்ற புதிய செய்தியையும், அனுபவத்தையும் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்துடன் கொரிந்து நகருக்குச் சென்ருர். அங்கு அவரை ஒரு புரட்சிகரமான போதகராகக் கொரிந்து மக்கள் கொண்டாடியதாகச் சின்னப்பரின் மடலிலிருந்து அறிய முடிகின்றது.

## எபேசு நகரில் சின்னப்பர்

சின்னப்பர் எபேசு நகரை அடைந்தவுடன் திருமுழுக்குப் பற்றிய குழப்பம் எழுகிறது. அங்குள்ளவர்கள் அருளப்பரின் திருமுழுக்குப் பெற்றிருந்தனர். அதாவது 'மனந்திரும்புதலின் திருமுழுக்கு'. ஆனல் அவர்கள் கிறிஸ்துவின் திருமுழுக்கு பெறவில்லே. எனவே தூய ஆவியைப் பற்றியும் அவர்கள் அறிந்தாரில்லே. ஆகவே, சின்னப்பர் அவர்களுக்கு இயேசுவைப் பற்றி எடுத்துக்கூறி இயேசுகிறிஸ்துவின் பெயரால் அவர்களுக்குத் திருமுழுக்கு அளித்து, அவர்கள் மேல் கைகளை விரித்ததும் பரிசுத்த ஆவி அவர்கள் மேல் இறங்கினர். அவர்கள் பெந்தகோஸ்தே போன்றதொரு அனுபவத்தைப் பட்டறிந்தனர்.

சின்னப்பர் அங்கு மூன்று மாத காலம் தொடர்ந்து செபக்கூடத்தில் போதித்தார். யூதர்களிடமிருந்து வழமையான எதிர்ப்பு எழுந்தது. ஏமாற்றத்தினல் செபக்கூடத்தை விட்டகன்று திரன்னு என்பவனுடைய கல்விக் கூடத்தை வாடகைக்கு எடுத்து அங்கு போதிக்கத் தொடங்கினர். கல்வி கற்பிக்கப்படாத வேளேயாகிய மு. ப. 11-00 - பி. ப. 4-00 இடைப்பட்ட நேரத்தில் தான் போதிக்க முடிந்தது. அதாவது சின்னப்பரின் போதனையைக் கேட்டவர்கள் மதிய ஓய்வின்றி ஆர்வமுடன் நற்செய்திக்குச் செவிசாய்த்தனர் எனத் தெரிகிறது. எபேசில் சின்னப்பர் தொடர்ச்சியாக 2 வருடங்கள் தங்கி நற்செய்தியை அறிவித்தார். தான் தாபித்த பல திருச்சபைகளுக்கு மடல்களை எழுதினர். பல விருந்தினர்களை, திருச்சபைத் தலேவர்களை வரவேற்ருர். பல இடங்களில் திருச்சபையை தாபித்தார். சின்னப்பரின் போதனை உண்மையானது என்பதை எல்லா மக்களும் அறிந்து கொள்ளும் பொருட்டு இறைவன் சின்னப்பரின் கையால் பல அரும்பெரும் வல்ல செயல்களைச் செய்தார். அவரது ஆடையின் ஒரு துண்டு கூட குணமாக்கும் சக்தியைப் பெற்றிருப்பதை மக்கள் உணர்ந்தனர்.

கடவுள் எப்பொழுது பெரியதொரு வேலேயை ஆரம்பிக்கின்ருரோ, அப்பொழுதே சாத்தானும் தனது பணியைத் தொடங்கி விடுவான். மாயவித்தைக்காரர் ஒரு சிலர் மூலம் சாத்தான் தனது வேலேயை துரிதமாகச் செய்தது. ஸ்கேவா என்பவனும் அவனுடைய 7 பிள்ளேகளும் இயேசுவின் பெயரைத் தாங்களும் பயன்படுத்திப் புதுமைகள் செய்ய எண்ணினர். அவர்களது முயற்சி எதிர்பாராத விளேவை ஏற்படுத்தியது. பேய் பிடித்தவன் அமைதி அடைவதற்குப் பதிலாக அவர்களேயே தாக்கத் தொடங்கினன். அவர்களே அடித்துக் காயப்படுத்தினன்.

## கலவரம் தூண்டப்படுகிறது

எபேசு நகரமே ஆச்சரியத்தில் மூழ்கியது மந்திரவாதிகள் பலர் தங்கள் தோல்வியை ஒப்புக் கொண்டு தங்கள் மந்திர நூற்களேக்

### போரில்லா நாடு

#### ஹிட்லர் பிரகடனம்

இரண்டாம் உலகப் போர் நடைபெற்றபோது ஹிட்லரிடம் அவர் நண்பர்கள் சுவிஸ் நாட்டைக் கைப்பற்ற வேண்டும் எனக் கேட்டார்கள் அதற்கு ஹிட்லர் ''வேண்டாம் சுவிஸ் அழகான நாடு நாம் ஆசைப்பட்டு இப்போது அதை அழித்துவிட்டால் பிறகு எதிரிகளிடம் ஒன்ருக அமர்ந்து பேச நடு நிலே நாடு என்பது இல்லாது போய்விடும். மேலும் உங்களேப் போன்றவர்கள் ஓய்வு கொள்ள விரும்பினல் போரில்லாத நாடு ஒன்று வேண்டுமல்லவா? ஆகவே சுவிச்சர்லாந்தைத் தொடக்கூடாது என்று கூறி விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு வந்து பகிரங்கமாக எரித்தனர். பலர் விசுவாசம் கொண்டனர். ஆயினும் பிரச்சனை வேறொரு உருவத்தில் ஏற்படுகிறது. 'தியாளு' தேவதையை முன்னிட்டுக் கலவரம் ஏற்படுகின்றது. 'தியாளு' தேவதையின் சிலைகளை வடிக்கும் சிற்பிகளால் இப்பிரச்சனை எழும்புகின்றது. இது மதப் பிரச்சனையை விட வாழ்க்கைப் பிரச்சனை என்றே கூறலாம். பொற்கொல்லர்களின் தலைவனான தெமெத்ரியு என்பவன், தங்களின் சிலைகளுக்கு இனி வியாபாரம் இராது என்ற அச்சத்தில் பொற்கொல்லர்களைத் தூண்டி விட்டுச் சின்னப்பரை போதிக்க விட்டால் தங்களது ஆலயத்தின் மகிமை குன்றி விடும் எனவும் தங்களது தொழிலும் நின்று விடும் எனவும் கூறிக் கலவரத்தை ஆரம்பித்தான். இதனால் அனைவரும் கோபம் பொங்கியெழ ''எபேசியரின் தியாளு வாழ்க'' என்று கோஷமிட்டுச் சின்னப்பரின் பயணத் தோழர்களான காயு, அரிஸ்தர்க்கு என்பவர்களைப் பிடித்துக் கொண்டு மைதானத்துக்குச் சென்றனர். சின்னப்பர் கூட்டத்துக்குள் நுழைய முயன்றார். ஆனால் அவரது நண்பர்கள் அவரைத் தடுத்து விட்டனர். எபேசு நகரில் வாழ்ந்த யூதர் சின்னப்பருடைய போதனைக்கும் தங்களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்பதை வலியுறுத்தினர். யூதர்களின் தலைவன் அலெக்சாந்தர் பேசத் தொடங்கினான். அவனும் யூதன் என்றதால் இன்னும் அதிகமாக எபேசியர் கூக்குரலிட்டனர்.

## நல்லதொரு அறிவுரை

இச்சமயத்தில்தான் நகரத் தலைவன் குறுக்கிட்டு சபையை அடக்கினான். ஒருவேளை அவன் சின்னப்பருககு அறிமுகமானவனாக இருந்திருக்கலாம். அவன் தனது உரையில், வீண் குழப்பங்களை உண்டாக்குவது தங்களுக்கு ஆபத்தாக முடியும் என்று எச்சரித்து தெமெத்திரியுவும் அவன் நண்பர்களும் பிரச்சனைகளைத் தீர்க்க வேண்டுமானால் முறைப்படி வழக்கு தாக்கல் செய்து தீர்த்துக் கொள்ளட்டும் என்று அறிவுரை வழங்கினான். அவனது பேச்சு சரியென எல்லோருக்கும் பட்டதால் கலைந்து சென்றனர்.

எபேசில் தனது பணி முடிவுறும் காலம் நெருங்கியதை உணர்ந்த சின்னப்பர் துறைமுகம் சென்று கப்பலேறிப் பயணமானார். கலவரத்தின் காரணமாகத் தமது நற்செய்திப் பணிக்கு எபேசு நகரில் தடைகள் எழுந்தாலும், அதனிமித்தம் தாம் எபேசை விட்டு வெளியேற வேண்டியிருந்தாலும் தியாளுவின் நகரத்திலும் திருச்சபை நிலையாய் இருக்கும் என்ற நம்பிக்கை அவருக்கிருந்தது.

## வினாக்கள்

1. சின்னப்பர் தமது போதிக்கும் இடத்தை செபக்கூடத்திலிருந்து கல்விக் கூடத்துக்கு மாற்றியது ஏன்?
2. அப்பொல்லோ என்பவர் யார்? அவர் ஆதித்திருச்சபையில் ஆற்றிய பணி என்ன?
3. அக்கில்லா, பிரிஸ்கில்லா என்பவர்கள் அப்பொல்லோவுக்கு செய்த பேருதவி என்ன?
4. எபேசு நகர விசுவாசிகள் தாங்கள் மனந் திரும்பியதைக் காட்ட என்ன செய்தனர்?
5. எபேசு நகரில் கலகம் உண்டாக்கியவன் யார்? ஏன் அவ்வாறு செய்தான்?
6. சின்னப்பர் இரண்டு வருடங்கள் எபேசில் சாதித்தது என்ன?
7. நகரத்தலைவன் எபேசில் எழுந்த கலவரத்தை எவ்வாறு நிறுத்தினான்?
8. எபேசு நகரில் சின்னப்பருக்கு நிகழ்ந்த பயங்கர அனுபவம் என்ன?
9. ''இயேசுவை அறிவேன். சின்னப்பரையும் எனக்குத் தெரியும். ஆனால் நீங்கள் யார்?'' என்று கேட்க நேர்ந்ததற்கான சம்பவத்தைச் சுருக்கமாகத் தருக.
10. அருளப்பரின் திருமுழுக்குக்கும், கிறிஸ்துவின் திருமுழுக்குக்கும் உள்ள வேறுபாடு யாது?

உயர்ந்த பண்புடையோர் உத்தமர்களாக மதிக்கப்படுகிறார்கள்.

-மட்டூர் ராம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியப் புதிர் – 16

இயேசுவின் வாழ்க்கையைப் பற்றி நான்கு நற்செய்தியாளர்கள் எழுதி யிருந்தாலும் அவரது பிறப்பு, இளமைப் பருவம் பற்றிய விடயங்களை லூக்காவும் மத்தேயுவுமே எழுதியுள்ளனர். அவர்கள் கிறிஸ்துவின் பிறப்பைப் பற்றிக் குறிப்பிடுகையில் ஒரு சில முக்கியமானவர்களையும் குறிப்பிட்டுள்ளனர். நீங்கள் செய்ய வேண்டியது யாதெனில் கீழே தரப்பட்டுள்ள தகவல்களைக் கொண்டு அவர்கள் யார் என்பதனைக் கண்டு பிடித்து, நிரப்பி அனுப்புங்கள்.

1. இயேசுவின் பிறப்பை மரியாளுக்கு அறிவித்தவர் ..........
2. விண்மீன் வழி நடத்தலினால் வந்தவர்கள் ..........
3. இறைவாக்குரைத்த பெண் ..........
4. குழந்தைக்கு இயேசு என்று பெயரிட்டவர் ..........
5. பாலனைப்பற்றிப் பிறருக்கு அறிவித்தவர்கள் ..........
6. விசுவாசமின்மைக்காகத் தண்டிக்கப்பட்டவர் ..........
7. அருள் நிறைந்தவள் ..........
8. யூதேயா நாட்டு அரசன் ..........
9. மெசியாவைக் காண்பதற்கு முன் சாவதில்லை எனக் கூறியவர் ..........
10. குருவின் மனைவி ..........

பெயர்: ..........

முகவரி: ..........

..........

பரிசு: ரூபா 50/-, 25/- முடிவுத்திகதி: 15 - 01 - 1990



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவிலியப் புதிர்-14 முடிவுகள்

1. சாலமோன்
2. சவுல்
3. அம்னோன்
4. நாத்தான்
5. கோலியாத்
6. அக்கிமெலேக்
7. பெத்சாபே
8. யோனத்தாசு
9. மிக்கோல்
10. தாவீது

**பரிசு பெறுவோர்:**

1ம் பரிசு

**V. இன்பராணி**
57, வாவி வீதி.
சின்ன உப்போடை, மட்டக்களப்பு.

2ம் பரிசு

**J. தீபன் சொய்சா**
1ம் வட்டாரம்
வங்காலை, மன்னார்.

**பாராட்டுப் பெறுவோர்:**

1. **A. A. அருட்செல்வன்**
சென் மேரீஸ் மாணவர் விடுதி
பாண்டிருப்பு, கல்முனை

2. **J. S. ஜெயமாறன்**
32, ஆசிரியர் சதுக்கம்
உவர்மலை, திருகோணமலை

3. **J. பற்றிக்**
அருள் ஒளி இல்லம்
புனித அந்தோனியார் வீதி,
மட்டக்களப்பு.

4. **அ அமலன் தினேஸ்குமார்**
36, பாத்திமாபுரம்
மண்முனை வீதி, காத்தான்குடி.

5. **J. அகிலன் சொய்சா**
1ம் வட்டாரம், வங்காலை, மன்னார்.

பங்குபற்றியோர் 50
சரியான விடை அளித்தோர் 11

அனைவருக்கும் எமது நன்றி.


அழகிற் சிறந்த பவுண் தங்க
நகைகளுக்கு நம்பிக்கையான இடம்

**விநோத்**

பழைய தங்கம், பொன், வெள்ளி
விலைக்கு வாங்கப்படும்
திருமண வைபவங்களுக்கும், வீட்டுப்
பாவனைக்கும் தேவையான இந்திய
எவர்சில்வர் பொருட்கள்
எம்மிடம் விற்பனைக்குண்டு

**விநோத் நகை மாளிகை**

**இல.16, புனித அந்தோனியார் வீதி
மட்டக்களப்பு.**



**சக்தி நூல் நிலையம்**

**உங்களுக்கு தேவையான**

★ பாடசாலைப் புத்தகங்கள்
★ நாவல்கள்
★ திருமணப் பரிசு நூல்கள்
★ மாத, வாராந்தப் பத்திரிகைகள்
★ சினிமாப் பத்திரிகைகள்
★ விசேஷ தின வாழ்த்து அட்டைகள்
★ கலண்டர், டயறி வகை
★ பாடசாலை உபகரணங்கள்

**எம்மிடம் கிடைக்கும்.**

**25, திருகோணமலை வீதி,
மட்டக்களப்பு.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாரெல்லாம் வளரட்டும்

# உனது சாந்தி!

என். கே. தயாளகுணசீலன்

இத்தரையை ரெட்சிக்க கருணை கொண்டு,
இறங்கி வந்த ஜோதியெனும் தேவ அன்பே!
சத்தியமும் ஜீவனுமாய் நித்தி யத்தின்
சர்வபிதா இதயத்தில் வாழும் ஜோதி!
சுத்தமனம் இல்லாத இதயங்களை,
தூயவழிப் படுத்த வந்த திருக்குமரா,
அத்தனே உன்பாதம் சரணம் ஐயா!
அகிலமெங்கும் வளரட்டும் உனது சாந்தி!

சாந்தி பெற நீ உதித்தாய் சர்வ லோக
சற்குருவே ரெட்சணிய கருவும் நீயே,
காந்தமுறு முன்வதனப் பசுமை கண்டு
கர்த்தனெனத் துதித்தார்கள், அகில மெல்லாம்
பாந்தமுறு முன் பரிவால் எம்மை யெல்லாம்,
பரம பிதா திருக்கரத்தில் கூட்டிச் சேர்க்க
சாந்தநித சற்குருவாய் உதித்த ஜோதி!
தரணியெங்கும் வளரட்டும் உனது சாந்தி!



இந்தமனு புத்திரர்கள் எம்மாத் திரம்!
இறையவனே உன்தயவுக் கீடாய் இங்கே,
சொந்தரெத்தம் ஈந்தெமக்காய் பாவம் தீர்க்க
தொல்லுலகில் பிறந்தாயே தேவ புத்திரா!
நொந்தழுத கண்ணீரின் வெள்ளம் மாய்க்க
நொய்யவுடல் சிலுவையிலே அறையுண் டாயே!
வந்தெமக்காய் இந்தமண்ணில் பிறந்த அன்பே,
வையமெல்லாம் வளரட்டும் உனது சாந்தி!

தேசொளிரு சுடர்பரிதி போல வீச
திக்கெட்டும் தெய்வமகன் வரவு கூற
ஆசையுடன் ஆயர்களும் ஆர்ப்ப ரித்து
ஐயனே, உன் பதத்தை நாடி வந்தார்!
மோசமிகு உலகமென்று தெரிந்து நீயும்
மோட்சமெனும் யாத்திரைக்குப் பாதை தந்தாய்!
பாசமுடன் போற்றுகிறேன் பரனே இன்று
பாரெல்லாம் வளரட்டும் உனது சாந்தி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயேசு எம்மில் பிறப்பாரா ?...... ● எஸ். நிலான்

இறைவனின் திட்டம் காலத்தைக் கடந்தது. அவரது வாக்குறுதிகள் என்றும் வலிமையானவை. பாவச் சேற்றில் புதைந்து போன மனிதனைக் காப்பாற்ற இறைவன் பரிவு கொண்டார். மனிதர் மேல் கொண்ட எல்லையற்ற அன்பினால், அவர் தனது மகனை அனைவர்க்கும் காணிக்கையாக, பூவுலகிற்கு அனுப்பினார். மானிடரின் மீட்பிற்கு ஒளியாக, இறை மகன் உதித்த நாளை, கிறிஸ்மஸ் நமக்கு நினைவு படுத்துகின்றது.

கன்னிமரியின் உகரத்தில் உதித்த, இறை மைந்தன் உலகின் மீட்பானார். இதனால் தான் தேம்பாவணியைப் படைத்த வீரமா முனிவர் ''கருவில்லா கருத்தாங்கி அமலனை ஈன்ற தாயே'' என்று பாடுகின்றார். இயேசுவின் பிறப்பின் உண்மைகள் ஆழமானவை. அவை புதிய பாதையின் வாயில்களாகக் காணப்படுகின்றன. அவரது வழி முறைகள் வளமான வாழ்வின் நெறிமுறைகள். இதனால் தான், இன்று எமக்கும் அவரது பிறப்பின் உண்மைகள் விளங்க வேண்டும்.

## சமாதானத்தின் முழக்கமா?

''உன்னதங்களிலே இறைவனுக்கு மகிமை உண்டாகுக! உலகினிலே நல்ல மனத்தோர்க்கு அமைதி ஆகுக'' என்று வானதூதர் சமாதான முழக்கத்தை முழங்கினர். ''போர் வேண்டாம், சமாதானம் வேண்டும், அழிவுகள் வேண்டாம். அமைதியை உருவாக்குங்கள்'' என்ற நோக்கிலே இன்று மக்கள் வாழ்கின்றனர். மக்கள் போராட்டத்தில் ஆயுதங்கள் வெற்றியைத் தராது. ஆணவச் செயற்பாடுகள் நீண்டகாலம் நிலைக்காது. இரத்த வெறிகள், காம வெறிகள் என்பவை உள்ளடக்கிய நிலையில் இன்று உண்மை சமாதானம் எப்படித் தோன்றும்? உலக சமாதானம் வேண்டுமானால், உள்ளம் சமாதானம் பெற வேண்டும். நல்ல உள்ளமே, சமாதானத்தின் திறவுகோல். வன்செயல்களின் பெருக்கம் பரவ, எமது உள்ளங்களே காரணமாகும். பாலனின் பிறப்பு, எமது பாவவாழ்வின் இறப்பு. இதனால் தான் நாமும், பாலனை எமது உள்ளத்தில் தாங்க வேண்டும். இதன் மூலம் பாலனின் கொள்கைகளை, எம் மத்தியில் வளர்த்து, வளம் காணலாம்.

## சமத்துவத்தின் செய்தியா?

''அஞ்சாதீர்கள்! உங்களுக்காக மீட்பர் பிறந்துள்ளார்.'' என்று வானவர்கள் இடையர்களுக்குக் கட்டியம் சொன்னார்கள். இயேசு அரசனாக ஆட்சி செய்வார் என்ற எதிர்பார்ப்பில், யூதர்கள் கிறிஸ்துவின் பிறப்பை, குருட்டுத்தனமாக எதிர் நோக்கினர். ஆனால் இயேசு ''மருத்துவன் நோய் அற்றவர்க்கன்று, நோயுற்றவர்க்குத் தேவை'' என்று, தனது பிறப்பிலே, முன்னறிவித்தார். இதன் அடையாளம் தான் இடையர்களுக்கு இயேசுவின் பிறப்பு, நம்பிக்கையின் எதிரொலியாக அறிவிக்கப்பட்டது. இன்று விடுதலை வாழ்வு இல்லை என்ற நம்பிக்கை மேலோங்கிச் செல்கின்றது. நம்பினவர்கள் எமக்குத் துரோகம் செய்து விட்டார்களே என்று, பல உள்ளங்கள் வெந்து கூறுகின்றன. எமக்கும் வாழ்வு வருமா? என்று ஏழைகள், அநாதைகள் ஏக்கத்தில் தாக்கம் அடைந்துள்ளனர். இவர்களே இயேசுவின் பிறப்புக்குரியவர்கள், இயேசுவின் பிறப்பு நம்பிக்கையின் பிறப்பு, நாமும் இயேசுவின் பிறப்பில் விழி வைப்போம்'' வழி காண்போம், இதனால் வழி காட்டுவோம்.

## பிறப்பின் எதிரொலிகள் ......

''என்னை விட இன்னொருவன் ஆள்வதா? என்ற பாணியில் ஏரோது மன்னன் கர்ஜித்தான். மீட்பன் அவனைக் கொன்றொழிப்பேன் என்ற ஆவேசத்துடன், சேவகர்களைத் தூண்டினான். இளம் மழலைகள் இரத்தத்தில் மிதந்தன. இயேசு உலகின் மீட்பர் என்ற செய்தியின் ஆரம்பமே ஒரு இரத்தக்களம் தான், இன்று எம்மிடையே பதவிமோகங்கள் வளர்கின்றன. தலைமைத்துவ போட்டிகள் ஈட்டிகளாக மாற்றம் பெற்றுள்ளன, கொலை கலாச்சாரத்தில் இன்று ஊதிப் பெருத்துள்ளோம்.

இயேசுவின் பிறப்பு எமக்கு நிச்சயம் தேவை என்பதை எமது மண் தொடர்ச்சியாக அறை கூவுகின்றது. இயேசுவின் பிறப்பின் நிதர்சனங்கள் எம் மத்தியில் உயிர் பெற்றெழ வேண்டும். இதற்கு இயேசு எம் உள்ளத்தில் பிறக்க வேண்டும். இயேசுவின் கொள்கைகளை எம்மில் விதைத்துப் பலன் கொடுக்கப் புதியவர்களாய் பிறப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவ மாணவிகள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது இனிய கிறிஸ்மஸ் - புத்தாண்டு வாழ்த்துக்களைத்
தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

மட்டு மாநகரில் பல ஆண்டுகளாக A/L வகுப்பு மாணவர்களின்
மனதில் நீங்காத இடத்தைப் பிடித்த ஒரே தனியார் கல்வி நிறுவனம்

**A B C... TUITION CENTRE** ஆகும்

தற்போது 1990, 1991 மாணவர்களுக்கு பின்வரும் பாடங்கள்
எமது திறமையும், அனுபவமும் வாய்ந்த பட்டதாரி ஆசிரியர்களினால்
நடாத்தப்பட்டு வருகின்றன.

வருகின்ற புதுவருடத்தில் கலை, வர்த்தகப் பாடங்களையும்
நடாத்தத் தீர்மானித்துள்ளோம்

பௌதிகவியல்: திரு. கோவிந்தராஜா B. Sc.
விலங்கியல்: திருமதி. K. குலேந்திரன் B. Sc.
இரசாயனவியல்: திரு. சாம் வேணுகோபால் B. Sc. (Hons.)

இதில் நீங்களும் பயின்று பயன்பெற வேண்டாமா?
மேலதிக விபரங்கட்குத் தொடர்பு கொள்ளுங்கள்.

**G. Felix Jebaretnam**
Director
ABC... Tuition Centre, 51, Central Road, Batticaloa.



கிறிஸ்துவாய் விளங்க கிறிஸ்து ஒளிபரப்ப

**கார்மேல் சபை உன்னை அழைக்கின்றது**

- ஆண்டவனை அறியாத அமைதியற்ற நெஞ்சங்கள்
- பெற்றோரை இழந்த அனாதைக் குழந்தைகள்
- ஆதரவு இழந்த வயோதிப மக்கள்
- அறிவைத் தேடி நிற்கும் இன்றைய சமுதாயம்

உங்களது அன்பிற்காக ஏங்கி நிற்கின்றது.

ஆண்டவனின் அழைப்பை ஏற்று அப்போஸ்தொலிக்க
கார்மேல் சபையில் நீர் சேவை செய்யத் தயாரா?

தொடர்பு கொள்க:

**தேவ அழைத்தல் இயக்குனர்**
புனித வளனார் மடம், மட்டக்களப்பு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றில் கலந்து வரும்
## சிறப்பு நிகழ்ச்சிகள்

நாள்: 24 - 12 - 89
நேரம்: மாலை 7 - 00 மணி
புதிய உலகம்
- தேடல் - குறு நாடகம்
- கவிச்சோலை

—★—

நாள்: 24 - 12 - 89
நேரம்: மாலை 9 - 30 மணி
புதிய உலகம்
- திருவிழிப்பு வழிபாடு

நடத்துபவர்:
அருள்திரு. இக்னேஸ் ஜோசப் அவர்கள்

—★—

நாள்: 25 - 12 - 89
நேரம்: காலை 10 - 00 மணி
புதிய உலகம்
- வெள்ளை மனங்கொண்ட பிள்ளை (நாடகம்)

எழுதியவர்: எஸ் ஜெயராஜா
- சிறப்புச் செய்தி

—★—

நாள்: 26 - 12 - 89
நேரம்: மாலை 9 - 30 மணி
புதிய உலகம்
- நாடகம்

அருள்திரு. தேவதாசன் குழுவினர்

—★—

நாள்: 28 - 12 - 89
நேரம்: மாலை 9 - 30 மணி
புதிய உலகம்
- சித்திரம்

M. கனகசிங்கம் குழுவினர்

—★—

நாள்: 30 - 12 - 89
நேரம்: காலை 10 - 30 மணி
புதிய உலகம்
- அவர்கள் விருப்பம் - நாடகம்

நாள்: 31 - 12 - 89
நேரம்: மாலை 9 - 30 மணி
புதிய உலகம்
- நன்றி விழா சிறப்பு சித்திரம்

அருள்திரு தேவதாசன் குழுவினர்

—★—

நாள்: 01 - 01 - 90
நேரம்: காலை 10 - 00 மணி
புதிய உலகம்
- புத்தாண்டுவிழாச்சிறப்புமலர்

—★—

நாள்: 30, 31 - 12 - 89/1 - 1 - 90
நேரம்: காலை 5 - 50 மணி
கத்தோலிக்க நற்சிந்தனை

வழங்குபவர்:
அருள்தந்தை பி. ஜோசப்

—★—

நாள்: 2 - 1 - 90
நேரம்: மாலை 6 - 45 மணி
சிறுவர் உலகம்
- விவிலிய நாடகம்

—★—

நாள்: 7 - 1 - 90
நேரம்: மாலை 7 - 00
புதிய உலகம்
- கதைச் சித்திரம்
- விவிலியப் போட்டி

—★—

நாள்: 13, 14, 15 - 1 - 90
நேரம்: காலை 5-50 மணி
கத்தோலிக்க நற்சிந்தனை

வழங்குபவர்:
அருள்சகோதரர் ஞானப்பிரகாசம்

—★—

நாள்: 16 - 1 - 90
நேரம்: மாலை 6 - 45 மணி
சிறுவர் உலகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உங்கள் பக்கம்



மிக ஆழமான, நிறைய அர்த்தமுள்ள 'நம்மில் நாம் சாகவேண்டும்'' என்று தலையங்கத்துடன் நவம்பர் தொண்டன் கிடைத்தது.

**கைலைநாதன்** — நிலாவெளி

நவம்பர் இதழ் கிடைத்தது. வழமை போல் எமது குரல் தத்துவச் சுருக்கமாக எழுதப்பட்டிருந்தது. 'ஆறடி நிலம்' என்ற அமிர்தகழியான் கவிதை நல்ல சிந்தனை. இளைஞர் அரங்கத்தில் 'அதிகாரம்' என்ற தலைப்பில் நல்ல கட்டுரை ஒன்று பிரசுரித்திருந்தீர்கள்.

**ந. பார்த்திபன் B. A.** — ரஜவெல

விவிலியப் புதிரின் நோக்கம் என்ன? விவிலியத்தை அனைவரும் அறிவதா? அல்லது மேற்போக்காகக் கலந்து கொள்வதா? அறிய வேண்டுமானல் சுருக்கமாகப் படைத்தால் பலரும் பங்குபற்றிப் பயன் பெறுவர்.

**யோ. யா. இராசரெத்தினம்** — திருமலை

ஐப்பசித் தொண்டனில் இடம் பெற்ற தன்னுமுனை புனித வளனர் வித்தியாலயம் பற்றிய சிறப்புப் பேட்டி நன்ருக அமைந்திருந்தது. இது போன்று வேறு பழைய பாடசாலைகளையும்பேட்டிகண்டு வெளியிடுங்கள்

**திருமதி. மேரி மாக்கிறட் அருளப்பு**

மாணவர் பக்கம் முடங்கிக் கிடக்கும் மாணவர்களை உற்சாகப்படுத்துகிறது. தொடர்ந்து வளரட்டும்.

**செல்வி. யோ. லிபட்டி** — கல்முனை

அக்டோபர் மாத இதழில் கவிதைகள் மிகவும் சுவையாக இருந்தன. 'என் வீட்டைத் திறந்து விட்டேன்' சிறுகதை வெகுபிரமாதம்.

**எம். எம். றின்தாஸ்** — காத்தான்குடி

சந்தனச் சிதறல் பற்றி சிந்துகிருர்கள் மிகவும் விறு விறுப்பாகச் சென்றது. ஆசிரியருக்குப் பாராட்டுக்கள்.

**H. M. காமில்** — காத்தான்குடி

மக்கள் இன்றைய காலகட்டத்தில் எதிர்பார்ப்பதை கோகிலா மகேந்திரன் அவர்கள் நாசூக்காகக் கூறியுள்ளார். சமகாலத்துக்கு ஏற்ற சிறந்த படைப்பு.

**திருமதி. M. M. அருளப்பு** — ஒல்லிக்குளம்

அப்பாடா! இத்துடன் முடிந்ததே பெரும் பாக்கியம்

**அ. அமலன் தினேஸ்குமார்** — காத்தான்குடி

'உன்னையே நீ நம்பு' கட்டுரையை வாசித்தேன். நானும் எதிர் காலத்தில் ஒரு சாதனை மூலம் முன்னுக்கு வரலாம் என்ற நம்பிக்கை தோன்றுகிறது.

**M. P. சாந்தினி**

உன்னையே நீ நம்பு என்ற கட்டுரை நன்று. இளைஞர் சமுதாயதிற்கு தன்னம்பிக்கையையும், திடத்தையும் தரக்கூடிய இது போன்ற கட்டுரைகளைப் பிரசுரியுங்கள்.

**P. J. J. யேசுதாசன்** — திருமலை

கார்த்திகைத் தொண்டனில் 'இரவலும் துருவலும்' எழுதிய அண்ணு குணரத்தினத்துக்குப் பாராட்டுக்கள். தொடர்ந்தும் எழுதுங்கள்!

**B. ஜெயசீலி** — அத்திமோட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— — — — — — [illegible] — — — — — —

# தொண்டன் வாசகர்களுக்கு மட்டும்

**(தயவுசெய்து இப்படிவத்தைப் பூர்த்தி செய்து அனுப்புங்கள்)**

1) பெயர்: ..........................................................................

2) முகவரி: ..........................................................................

..........................................................................

3) வயது: ..................... 4) ஆணு/பெண்ணு: ............................

5) சமயம்: ..........................................................................

6) திருமணமானவரா/ஆகாதவரா: ..................................................

7) தொழில்: ..........................................................................

8) "தொண்டன்" சஞ்சிகையை எவ்வளவு **காலமாக** வாசிக்கிறீர்கள்? ..........................................................................

9) உங்களுக்குப் பிடித்த அம்சங்கள் (பொருத்தமான வற்றின் கீழ் கீறிடுங்கள்) **கதை - கட்டுரை - கவிதை -** போட்டி - விமர்சனம் - பாடம் - துணுக்குகள் - பிற:

..........................................................................

10) மேலும் எதிர்பார்ப்பது: ..........................................................................

..........................................................................

..........................................................................

11) தொண்டன் சஞ்சிகை பற்றிய பொதுவான கருத்து:

..........................................................................

..........................................................................

..........................................................................

..........................................................................

..........................................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— — — — — — இங்கே மடிக்கவும் — — — — — —

To.

The Editor

**THONDAN**

Social Communications

Centre,

P.O. Box: 44

Batticaloa.

முத்திரை

இங்கே

— — — — — — இங்கே மடிக்கவும் — — — — — —

● **அன்புக் கிறிஸ்தவம் எங்கும் விளங்கிட அருந் தமிழ் இலக்கியம் அவனியில் தழைத்திட அரும் பணியாற்றிடும் ஒரு தமிழ் ஏடு.**

# - தொண்டன் -

**தனிப்பிரதி ரூபா: 6/-**

**ஆண்டு சந்தா ரூபா: 70/-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புனித வளனுர் மகளிர் பயிற்சி நிலையத்தினரின்

தரமான - மலிவான தயாரிப்புக்கள்!

உங்கள் அன்ருட பாவனைக்கு உகந்தவை!

- ★ மட்பாண்டங்கள்
- ★ பூச்சாடிகள்
- ★ சீமெந்து பூக்கற்கள்
- ★ பன்பாய்கள்
- ★ படங்களுக்கான 'பிறேம்ஸ்'
- ★ கடதாசிப் பூக்கள்
- ★ காகித உறைகள்
- ★ பப்படம்
- ★ பற்பொடி
- ★ கைத்தறிப் புடவைகள்
- ★ சாரன், துவாய் வகைகள்
- ★ றெடிமேட் ஆடைகள்
- ★ ஜாம்
- ★ இனிப்பு வகைகள்
- ★ பழரச பானங்கள்
- ★ மாசி
- ★ கேக் (பல்வகையான)
- ★ இறுல், கருவாடு
- ★ மரக்கறி வகைகள்

இன்னும் பல் வகைப் பொருட்களும் சுகாதார முறைப்படி தரமாகத் தயாரித்து, பிளாஸ்ரிக் உறைகளில் அடைக்கப்பட்டு நியாயமான விலையில் விற்கப்படுகின்றன.

தொடர்பு:-

# 'எகெட்' 52, மத்திய வீதி, மட்டக்களப்பு.

தொலைபேசி: 065 - 2723
,, - 2485

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a News Paper in Sri Lanka.

"எமது சூழலைப் பாதுகாக்க உதவுங்கள்"

நாம் வசிக்கும் இல்லம்,

நமது நகரம்,

நாங்கள் அன்றுடம்

பாவிக்கும் பொருட்கள்,

பொது இடங்கள்

எல்லாவற்றையும் சுத்தமாக

வைத்திருப்போம் என சங்கற்பம் பூணுவோம்.

'சுத்தம் சுகம் தரும்'

# லயன்ஸ் கழகம்

மட்டக்களப்பு.

இச் சஞ்சிகை மட்டக்களப்பு, புனித செபஸ்தியார் அச்சகத்தில் அச்சிட்டு, தொண்டன் ஆசிரியர் குழுவினரால்
15 - 12 - 1989ல் வெளியிடப்பட்டது. SP. 141.